Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 199 | வள்ளுவர் ஆண்டு: 2044 | வைகாசி 30, வியாழன் 13.06.2013

**இந்தியன்**



பக். 06
மூன்றாவது அணி உருவாகும் காலம் இது

**உலகம்**



பக். 07
பாகிஸ்தான் எல்லைக்குள் இந்திய போர் விமானங்கள்

**விளையாட்டு**



பக். 23
இங்கிலாந்து வீரரை தாக்கிய வோர்னர்

# காணி பறிப்பு அறிவிப்பை மீளாய்வு செய்ய அறிவுறுத்து

## உயர் நீதிமன்றம் நேற்று விடுத்தது. உரிமையாளர்களின் ஆட்சேபனைகளுக்கு இடமளிக்குமாறும் கூறியது

கொழும்பு, ஜூன் 13

வலி. வடக்கில் சுவீகரிப்புக்கு உட்படுத்தப்படவுள்ள காணிகளை உடனடியாகத் தன்வசப்படுத்தும் அறிவித்தலை அரசு மீளாய்வு செய்யுமாறு அறிவுரை வழங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர் கே.ஸ்ரீபவன், காணி உரிமையாளர்களின் ஆட்சேபனைகளுக்கு இடமளித்து அதன் பிரகாரம் காணிச் சுவீகரிப்பை முதலில் முறைப்படுத்துமாறும் கூறினார்.

வலி.வடக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியை அரசு சுவீகரிக்கவுள்ளமை தொடர்பில் காணி உரிமையாளர்கள் சிலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சில சட்டத்தரணிகளின் உதவியுடன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீபவன், நீதியரசர் சத்தியா ஹெட்டிகே முன்னிலையில் நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நீதியரசர் ஸ்ரீபவன், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 38 காப்புரை (ஏ) பந்தியின் கீழ் சுவீகரிப்புக்கு உட்படுத்தப்படும் காணிகளை உடனடியாகத் தம்வசப்படுத்தும் அறிவித்தலை மீளாய்வு செய்யுமாறு அரச தரப்பில் முன்னிலையான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் சவிந்திர பெர்னாண்டோவுக்கு அறிவுரை வழங்கினார்.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரிவு 2 இன் அறிவித்தலுக்குப் பின்னர் செய்யப்படும் பிரிவு 4 இன் கீழான அறிவித்தலை வழங்குமாறும் அதன் பின்னர் காணி உரிமையாளரின் ஆட்சேபனைகளுக்கு இடமளித்து, அதன் பிரகாரம் காணிச் சுவீகரிப்பு நடைமுறையை மேற்கொள்ளுமாறும் நீதியசரர் பிரதி சொலிசிற்றர் ஜெனரலிடம்




கோப்புப் படம்

> ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அரசு உயர் பாதுகாப்பு வலயங்களே இல்லை என்று கூறியமைக்கு மாறாகச் செயற்படுவது, மனுதாரர்களின் நியாயமான எதிர்பார்ப்புக்கு எதிரானது.
>
> மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி

தொடர்ச்சி: பக்கம் 21

## லலித், குகன் மனு விசாரணை; ஊடகவியலாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 13

லலித், குகன் ஆகிய இருவரும் உயிருடன் இருக்கிறார்கள் என்று அமைச்சரவைப் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல கூறியதை செய்தியாக ஒளிப்பரப்புச் செய்த மகாராஜா நிறுவத்தின் செய்திப் பணிப்பாளரை, அமைச்சர் கெஹலிய கூறிய செய்தியின் காணொலியோடு மன்றுக்கு வருமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காணாமற்போனோரை தேடிக் கண்டறியும் குழுவைச் சேர்ந்த லலித், குகன் ஆகிய இருவரும் காணாமற்போனமை தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று நடந்தது. இதன்போதே இவ்வாறு உத்தர விடப் பட்டது.

தொடர்ச்சி: பக்கம் 21

# இலங்கையில் ஆபத்து என்பதாலேயே தமிழர்கள் ஆஸிக்கு ஓடுகின்றனர்

## அந்த நாட்டு அதிகாரிகளிடம் யாழ். ஆயர்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

தமிழ் மக்களுக்கு இன்னும் அரசியல் தீர்வு கிடைக்கவில்லை. இங்குள்ள தமிழ் இளைஞர்கள் தாம் தொடர்ந்தும் துன்புறுத்தல்கள், விசாரணைகள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதாலேயே ஆபத்தான ஆஸ்திரேலியப் பயணத்தை மேற்கொள்கின்றனர் என யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆஸ்திரேலிய அதிகாரியிடம் சுட்டிக்காட்டினார்.

யாழ். மாவட்டத்துக்கு இரு நாள் பயணமாக வருகை தந்திருந்த, ஆஸ்திரேலிய தேசிய மதிப்பீட்டகத்தின் தெற்காசிய ஆலோசகர் மைக் ஹில்மன் இங்கு பல தரப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடி இருந்தார்.

> “ தமிழ் மக்களுக்கான தீர்வு இன்னமும் முன்வைக்கப் பட வில்லை. இங்குள்ள இளைஞர்கள் தாம் தொடர்ந்து துன்புறுத்தப் படலாம் என்று அச்சப் படுகின்றார்கள்.



குறிப்பாக யாழ். மாவட்டத்தில் ஆஸ்திரேலிய அரசின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களை அவர் நேரடி

தொடர்ச்சி: பக்கம் 24

## இலங்கை அரசு மீதான அடுத்த கட்டம் என்ன?

### ஆராய்கிறது அமெரிக்கா

நியூயோர்க்,ஜூன் 13

இலங்கை மீது அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை மேற்கொள்வது என்பது தொடர்பில் அமெரிக்கா மிகக் கவனமாக ஆராய்ந்து வருவதாக போர்க்குற்ற விவகாரங்களை கையாளும் அமெரிக்கத் தூதுவர் ஸ்டீபன் ஜே ராப் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ''இன்னர்சிற்றி பிரஸ்' ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

இலங்கையில் போரின்போது இழைக்கப்பட்ட கொடுமைகள் – போர்க்குற்றங்கள் தொடர்பாக அந்த நாட்டு அரசு பொறுப்புக்கூறவில்லை. அத்துடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடை முறைப்படுத்தப்படாமை தொடர்பிலும் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையிலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இரண்டு தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன.

தொடர்ச்சி: பக்கம் 21

## படையினர் பாதுகாப்பிலேயே லலித்தும் குகனும் உள்ளனர்

### 6 ஆவது சாட்சி நேற்றுக் கூறினார்

யாழ்ப்பாணம்,ஜூன் 13

''காணாமற்போனோரைக் கண்டறியும் குழுவைச் சேர்ந்த லலித், குகன் ஆகிய இருவரும் பொலிஸாராலும் புலனாய்வுப் பிரிவினராலுமே கடத்தப்பட்டுள்ளனர். இருவரும் தற்போது படையினரின் பொறுப்பிலேயே இருப்பார்கள் என்றுதான் கருதுகின்றேன்'' என்று அந்த வழக்கின் 6 ஆவது சாட்சி நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

லலித், குகன் ஆகிய இருவரும் காணாமற்போனமை தொடர்பில் 6 ஆவது சாட்சியான, முற்போக்கு சோசலிசக்கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான ஜனபே குமாரகே யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் நேற்று சாட்சியமளித்தார். அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது;

தொடர்ச்சி: பக்கம் 21

## அரசியல் கைதிகளின் உறவுகள் சம்பந்தனுக்கு அவசர கடிதம்

### விடுதலையில் அக்கறை எடுக்க வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 13

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அக்கறை அற்று இருப்பதாக தெரிவித்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெற்றோர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவ [illegible]

இருப்பினும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் கூட்டமைப்பு எடுத்து வருகின்றது என்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், [illegible] மேதகு [illegible] ஆண்டகை ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

''எதிர்காலமே இருள்'' என்ற நிலையில் சிறையில் இருப்பதனால் பொருளாதார ரீதியாக அடிமட்டப் பிரச்சினைகள். பிள்ளைகளின் கல்வி ரீதியான செலவுகள் மற்றும் வாழ்

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் கோரிக்கையை நிராகரித்தது அரசு

கொழும்பு,ஜ"ன் 13

'13'ஆவது திருத்தச் சட்டத்தில் எந்த மாற்றங்களையும் செய்ய வேண்டாம் என இலங்கைக் கத்தோலிக்க ஆயர்கள் பேரவை மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 12 பேர் விடுத்திருந்த கோரிக்கையை அரசு முற்றாக நிராகரித்துள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்களுடனோ, மத அமைப்புகளுடனோ எவ்விதமான இணக்கப்பாடுகளுக்கும் செல்வதில்லை என அரசு திட்டவட்டமாகத் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் இந்த கோரிக்கையை நிராகரிக்க நேர்ந்ததாக அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் கருத்துக்களைக் கேட்டறியாது, இந்தியாவினால் 13ஆவது திருத்தச் சட்டம் இலங்கை மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டது. அப்போது மேற்படி அமைப்புகள் அமைதியாக இருந்தன எனவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

உலகில் எந்தவொரு நாடும் தமது நாட்டின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில், தனது பாதுகாப்பு பேரவையின் ஆலோசனைகளை பின்பற்றுமேயன்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கைக்குத் தலைவணங்காது எனவும் அவர் கூறியுள்ளார். (த)

# சினிமா பாணி தாக்குதலால் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜ"ன் 13

யாழ். நகருக்கு அண்மையில் உள்ள தட்டாதெருச் சந்தியில் நேற்றிரவு சினிமா பாணியில் நடத்தப்பட்ட தாக்குதலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஓட்டோ ஒன்றில் வந்தவர்கள் ஹையஸ் வான் ஒன்றை மறித்து அதிலிருந்தவர்கள் மீது கொட்டன்களால் சரமாரியாகத் தாக்கினர் என்று நேரில் கண்டவர்கள் கூறினர்.

சம்பவத்தில் காயமடைந்த இரு இளைஞர்கள் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

''ஹையஸ் வாகனத்திற்குப் பின்னால் வந்து கொண்டிருந்த ஓட்டோ, தட்டாதெருச் சந்தியில் திடீரென வானை முந்திச் சென்று குறுக்கே மறுத்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மூன்று பேர் திடீரென கொட்டன்களால் வானில் இருந்தவர்கள் மீது சரமாரியாகத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்'' என்று சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

தாக்குதலில் வான் கண்ணாடிகள் அனைத்தும் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். தாக்குதலுக்கு இலக்கான வாகனத்தினுள்ளும் கொண்டன்கள் மற்றும் 'கொக்கி' விளையாட்டு மட்டைகள் இருந்து கண்டெடுக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (உ-400)

# இனவாதம் பேசுவோரை பிடிக்க பயங்கரவாதச் சட்டத்தில் திருத்தம்

## அமைச்சரவையில் வாசுதேவ சமர்ப்பிப்பார்



கொழும்பு,ஜ"ன் 13

இன, மதவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடியவாறு சட்டத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இது தொடர்பான சரத்துக்களைச் சேர்க்கவுள்ளதாகத் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இனவாத அல்லது மதவாதத்தின் ஊடாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென யோசனைத் திட்டமொன்றை முன் வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த வார அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த உத்தேச பிரேரணை குறித்து கவனம்செலுத்தப்படவுள்ளதாகவும் வாசுதேவ கூறினார்.

இன மற்றும் மத ஐக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் சில சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார். (த)

## 14 இலங்கையருக்கு இன்ரர்போல் பிடியாணை

INTERPOL

நியூயோர்க், ஜ"ன் 13

போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பாக 14 இலங்கையர்களுக்கு 'இன்ரர்போல்' சர்வதேசப் பிடியாணை பிறப்பித்துள்ளது. இவர்களில் சின்னையா குணசேகரன், சுனில் காமினி ஆகிய இருவருக்கு எதிராக நீதிமன்றமும் பிடியாணை பிறப்பித்துள்ளது.

இந்தப் போதைப் பொருள் வர்த்தகர்களில் சிலர் இந்தியப் பொலிஸாரால் தேடப்பட்டு வருபவர்கள். வை.சகாயதேவன், பீ. கிருஷ்ணன், வின்சன்ட் வில்சன், நிமால், சண்முகம், ஆர். ருத்ரகுமார், எஸ். பாலன், டி. தயாலன், எல். நிஹால், எஸ். தலைமகன் ஆகியோருக்கு எதிராகவே 'இன்ரர்போல்' பிடியாணை பிறப்பித்துள்ளது. (த)

## வவுனியாவில் கடையடைப்பு

வவுனியா,ஜூன் 13

வவுனியா நகர சபையின் நடவடிக்கைகளை எதிர்த்து வவுனியா பஸ் நிலைய வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் இன்று ஒரு நாள் கடையடைப்பில் ஈடுபடவுள்ளனர்.

பஸ்நிலையத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக சைக்கிள்களையோ, மோட்டார் சைக்கிள்களையோ நிறுத்தி வைக்க முடியாது எனவும் அவ்வாறு நிறுத்துபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நகர சபை அறிவித்துள்ளது.

இதனை எதிர்த்தே அடையாள கடையடைப்பு இடம்பெறவுள்ளது. (த-400- 402)

# அடுத்த வருட இறுதிக்குள் அனைவருக்கும் மின்சாரம்

கொழும்பு,ஜ"ன் 13

ஆசிய வலயத்தில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடும் போது 24 மணித்தியாலமும் தடையற்ற மின்சாரம் வழங்கும் ஒரே நாடு இலங்கை என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நூற்றுக்கு 94 வீதமான மக்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த வருட இறுதிக்குள் அனைத்து மக்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார். கொலன்னாவ பிரதேசத்தில் மக்களுக்கு மின்சாரம் வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை நல்நிலைப் படுத்துவதே அரசின் நோக்கம் எனப் பவித்திரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தார். (த)

# மானிய ஆணைக்குழு மாநாட்டை யாழ்.பல்கலையினர் புறக்கணிப்பு

கொழும்பு,ஜூன் 13

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ்ப்பாணத்தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பிக்கும் மாநாட்டை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் புறக்கணித்துள்ளனர் என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் ஆர். இராசகுமாரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீள் இணக்கப்பாட்டில் உயர் கல்வியின் பங்கு என்ற தொனிப் பொருளிலான மாநாடு இன்றும் நாளையும் யாழ். நகரில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் நடைபெறுகிறது. இதனையே யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள் புறக்கணித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்த மாநாடு நடத்தப்படுவதாக அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு இது தொடர்பில் எதுவும் கூறப்படவில்லை.

அழைப்பிதழில், பயங்கரவாதம் வேரறுக்கப்பட்டுள்ள நிலையில் இனி மீள் இணக்கப்பாடு பற்றியே கவனிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் இங்கு இடம்பெறும் சம்பவங்கள் மீள் இணக்கப்பாட்டுக்குச் சாதகமானவையாக இல்லை - என்றார். (த-4)

## 'சைபர்' பாதிப்பில் இலங்கை முன்னணி

கொழும்பு,ஜ"ன் 13

'சைபர்' தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னணி வகித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உலகின் முதனிலை வைரஸ் எதிர்ப்புக் கணினி மென்பொருள் உற்பத்தி நிறுவனமான கஸ்பர்ஸ்கை நிறுவனம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கணனி பயனர்கள் அதிகளவில் சைபர் தாக்குதல்களுக்கு இலக்காவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சைபர் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய உலகத் தர வரிசையில் இலங்கை 8 ஆம் இடத்தை வகிக்கின்றது.51 வீதமான கணினிப் பயனர்கள் 'சைபர்' தாக்குதல்களினால் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## அம்பாறை நகர சபையின் தலைவர் கைது

அம்பாறை, ஜ"ன் 13

வர்த்தகர் ஒருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் அம்பாறை நகரசபைத் தலைவர் இந்திக்க நலீன் ஜயவிக்ரம கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை நகர வர்த்தகர் ஒருவரை நகர சபைத் தலைவர் நேற்றுமுன்தினம் மாலை தாக்கியதாக முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதெனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு இலக்கான வர்த்தகர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த)

# அரச நிறுவனங்களின் நிதியிலேயே வரிப்பணம் செலுத்தும் ஆசாமிகள்

## அம்பலப்படுத்தினார் அமைச்சர் டியூ

கொழும்பு,ஜூன் 13

அரச நிறுவனங்களின் தலைவர்கள் பலர் அரசின் நிதியிலிருந்தே தமக்கான வரிப்பணத்தை செலுத்தி உள்ளனர். இதனால் சுதந்திரத்துக்குப் பின்னர் முதல் தடவையாக தேசிய உற்பத்தியில் 13 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என பொது நிறுவனங்களைக் கண்காணிக்கும் குழுவின் தலைவரும் சிரேஷ்ட அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையை வெளியிடுவது தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கோட்டை மில்போ மண்டபத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

28 அரச நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் கடந்த ஆண்டு செலுத்த வேண்டிய சுமார் 2 ஆயிரம் மில்லியன் ரூபா வரிப்பணத்தை அந்த நிறுவனங்களின் நிதியில் இருந்தே செலுத்தி உள்ளனர். நாட்டின் உற்பத்தி இரு மடங்காக அதிகரித்துள்ளதுடன் தனி நபர் வருமானமும் 3 மடங்காக அதிகரித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டாலும் அவை பொருளாதாரத்தின் பிரதிபலிப்பு அல்ல.

அரசின் வருமானம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக மொத்தத் தேசிய உற்பத்தியில் 13 வீதம் வரையில் வீழ்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு அரசின் வருமானம் குறையக் குறைய சமுதாயத்தில் கீழ் மட்டத்தில் உள்ளவர்களின் வருமானம் குறைவடைய அவர்கள் மத்தியில் பிரச்சினைகள் மேலும் விரிவடைந்து செல்கின்றன.

பொது நிறுவனங்களை கண்காணிக்கும் குழுவினால் 2009 ஆம் ஆண்டில் 25 - 30 வரையான அரச நிறுவனங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. ஆனால் எமது செயற்குழுவானது 2010 - 2012 வரை 219 நிறுவனங்களை பரிசீலனை செய்துள்ளது. அதேநேரம் கடந்த ஆண்டு மட்டும் 235 நிறுவனங்களைப் பரிசீலனை செய்துள்ளோம்.

கடந்த வருடம் நட்டமடைந்த சில நிறுவனங்கள் இன்று இலாபம் அடைந்துள்ளன. அந்த வகையில் சில அரச நிறுவனங்கள் தற்போது நட்டம் அடைந்து வருவது எமது குழுவால் கண்டறியப்பட்டுள்ளது. அவற்றில் இலங்கை மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், சிறிலங்கன் விமான நிறுவனம் மற்றும் மிஹின் லங்கா விமான நிறுவனம் என்பன குறிப்பிடத்தக்கது.

பெருமளவான நிறுவனங்கள் சீரான முறையில் அறிக்கைகளை கையாள்வதில்லை. இதனை அரசின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். எமது நாட்டு அரச சார் நிறுவனங்கள் கணக்குகளை கையாளும் முறைமைகள் சர்வதேச மட்டத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு வந்தால் தான் எம்மால் தொடர்ந்து முன்னோக்கிச்செல்லமுடியும் என்றார். (த-400-22)

## விறகு ஏற்றிய சாரதிக்கு விளக்கமறியலில்

தென்மராட்சி,ஜூன் 13

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் விறகு ஏற்றி வந்த வாகனச் சாரதியை சாவகச்சேரி நீதிமன்றில் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதி ஆகியவை இல்லாத நிலையில் அனுமதிப் பத்திரம் இன்றி வாகனத்தில் விறகேற்றி வந்ததாக கொடிகாமம் பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகளை விசாரித்த நீதிவான் வாகனச் சாரதியை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டிப் பகுதியில் மதுபோதையில் வந்த மருமகன் மாமனை தாக்கி காயப்படுத்தி உள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மருமகனை நாளைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 பேர் மீது வழக்கு

# சண்டிலிப்பாய் உணவகங்களில் மேற்கொண்ட சோதனையில்

யாழ்ப்பாணம்,ஜூன் 13
சண்டிலிப்பாய் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் மீதான திடீர்ச் சோதனை நடவடிக்கையின்போது உரிய விதத்தில் உணவு கையாளத 12 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி செல்வி அ.சுரனுதா தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் வலி.தென்மேற்குப் பிரதேச சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் பங்கெடுத்தனர்.
கடந்த 5ஆம் திகதி புதன்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில், சகல சிற்றுண்டிச்சாலைகள், பேக்கரிகள், நடமாடும் உணவு விற்பனை நிலையங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
உடல் நலத்துக்குக் கேடான முறையில் உணவினைக் கையாண்ட 12 பேருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இதில் 9 பேருக்கு 20ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. நீதிமன்றுக்கு வராத 3 பேருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
(வ-5)

# இந்துக் கோவில்களின் பாதுகாப்பை உறுதிசெய்க

## மன்னார் அரச அதிபருக்கு 'விஸ்வ ஹிந்து பர்சத்' மனு



மன்னார்,ஜூன் 13
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்து ஆலயங்கள் மீது அண்மைக் காலமாகத் தாக் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்தும், குறித்த ஆலயங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் 'விஸ்வ ஹிந்து பர்சத்' அமைப்பின் மன்னார் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு வழங்கும் நோக்கில் நேற்று காலை மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திரவிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளனர்.
குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள இந்து ஆலயங்கள் அண்மைக்காலமாக உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டு வருகின்றன.
குறிப்பாக மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் உள்ள இந்து ஆலயங்கள் உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இந்து மக்கள் மிகவும் ஆழ்ந்த வேதனையடைந்துள்ளனர்.
இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறாத வகையில் இந்து ஆலயங்கள் உட்பட நாட்டில் உள்ள அனைத்து வணக்கத்தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு ஜனாதிபதி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது.
இதில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ராஸ்லிடிமெல் கலந்து கொண்டு மனுவைப் பெற்றார். குறித்த மனுவை அரசாங்க அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வில் 'விஸ்வ ஹிந்து பர்சஸ்' அமைப்பின் மன்னார் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சுமார் 30 பேர் வரை கலந்து கொண்டிருந்தனர். (வ-12)

# குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயப் பூவுக்கு கிராக்கி

யாழ்ப்பாணம்,ஜூன் 13
யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் வெங்காயப் பூவுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் சிலர் சின்ன வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருப்பதால் அந்த வெங்காயம் பூக்க ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து வெங்காயப் பூக்கள் சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளன.
குறிப்பாகத் திருநெல்வேலிச் சந்தையில் வெங்காயப் பூ கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. சின்ன வெங்காயச் செய்கை மிகக் குறைவாகக் காணப்படுவதால்தான் வெங்காயப் பூ சந்தைக்கு குறைந்தளவே வந்து சேருகின்றது என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெங்காயப் பூ சந்தைகளில் விற்பனையின்றித் தேங்கிக் காணப்பட்டதோடு விவசாயிகள் அவற்றை கால்நடைகளுக்கு உணவாகவும் பயன்படுத்தினர்.(வ-17)

> “ திருநெல்வேலிச் சந்தையில் வெங்காயப் பூ கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

# பெண்களுடன் தகாத முறையில் நடந்துகொள்ளும் இளைஞர் குழு

## ஏழாலை மக்கள் விசனம்

வலி.வடக்கு,ஜூன் 13
ஏழாலை கண்ணகி அம்மன் கோயிலடியில் கூடும் இளைஞர் குழு அந்தப் பகுதியால் செல்லும் பெண்கள், யுவதிகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குச் செல்வோருடன் தகாத முறையில் நடந்து கொள்வதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.
பல பகுதிகளில் இருந்தும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் வரும் ஒரு குழுவினர் ஒதுக்குப் புறமாக அமைந்துள்ள ஆலயச் சுற்றாடலைத் தமது தங்கும் இடமாக மாற்றிக் கொள்கின்றனர். இதனால் அந்தப் பகுதியூடாகச் செல்பவர்களுடன் அவர்கள் சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
இவர்களுடன் கதைக்க முற்பட்டால் வீண் பிரச்சினைகள் தோன்றுவதாகக் கூறி மக்கள் சென்று விடுகின்றனர். இதுகுறித்து உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என்று பிரதேச வாசிகள் கோரியுள்ளனர்.
(வ-86)

## ஓய்வூதியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன் 13
ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் தொடர்பாக எதிர்வரும் 16ஆம் திகதி 'பான்ஏசியா' வங்கியில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.
பொருளாதார அமைச்சின் அனுசரணையுடன் பி.ப.3.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கடன் உதவித் திட்டம் தொடர்பான பூரண விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வங்கி முகாமையாளர் ஓய்வூதியர்களைக் கேட்டுள்ளார். (வ-7)

# மீனவர்களே ஆழ்கடலுக்கு செல்லாதீர்



யாழ்ப்பாணம்,ஜூன் 13
புயல் இடர் காரணமாக வட பகுதியில் உள்ள சகல மீனவர்களும், மறு அறிவித்தல் வரை ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.எமிலியாம்பிள்ளை அறிவித்துள்ளார்.
தென்பகுதியில் புயல் இடர் காரணமாக மீனவர்கள் பலர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் நிலவுகின்ற காலநிலை மாற்றங்களைத் தீர்மானிக்க முடியாமல் உள்ளதுடன் வானிலை முன்னெச்சரிக்கைகளும் சரியாக விடுவிக்கப்படுவதில்லை.
எனினும் வடபகுதியில் அவ்வாறானதொரு நிலைமைக்குள் மீனவர்கள் சிக்காமல் இருப்பதற்காக முன்னெச்சரிக்கையாக வடபகுதி மீனவர்களை ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க வேண்டாம் என எமிலியாம்பிள்ளை கோரியுள்ளார்.
நேற்றுக் காரைநகரில் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க கடற்படை அதிகாரிகள் மீனவர்களுக்கு அனுமதி மறுத்துள்ளனர். மீனவர்களின் பாதுகாப்புக் கருதி இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை உள்ளது என்றும் அவர் கூறினார். (த-14)

# முதியோர் இல்லத்தில் வாழ்ந்தவர் மகளுடன் வசிப்பதற்கு அனுமதி

குருநகர்,ஜூன் 13
கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த நான்கு வருடங்களாகத் தங்கி வாழ்ந்த மூதாட்டி ஒருவர் அவரது மகளின் கோரிக்கையின்பேரில் மகளுடன் சென்று வாழ அனுமதிக்கப்பட்டுள்ளார் என கைதடி அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
கைதடி அரச முதியோர் இல்லத்தில் 2009ஆம் ஆண்டு தொடக்கம் தங்கி வாழ்ந்த திருமதி அரியதாஸ் தேவநேசம் (வயது-64) என்ற முதிய பெண்ணே அவரது மகள் அஞ்சலிற்றாவினால் அழைத்துச் செல்லப்பட்டவராவார்.
திருமதி அரியதாஸ் தேவநேசம் 18 வருடங்களாகத் தனிமையில் எவருடைய துணையுமின்றி வாழ்ந்து வந்து பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் அநாதரவான நிலையில் 2009ஆம் ஆண்டு கைதடி அரச முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.
அவரது மகள் அஞ்சலிற்றா வன்னியில் வாழ்ந்தபோது போரில் தனது தந்தையையும் 4 பிள்ளைகளையும் இழந்த பின்னர் மணியந்தோட்டத்தில் வசித்து வருகிறார். தனது தாயான திருமதி அரியதாஸ் தேவநேசம் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இருக்கிறார் என்பதைக் கேள்வியுற்று தனது தாயை வந்து முழுமனதுடன் அழைத்துச் சென்றுள்ளார் என்று இல்ல அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.
(வ-51)

# பாலங்களில் வழுக்கலை தடுக்க உரிய நடவடிக்கை



யாழ்ப்பாணம்,ஜூன் 13
கைதடி மற்றும் நாவற்குழி இரும்புப் பாலங்களில் ஏற்படும் வழுக்கும் தன்மையை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்தப் பாலங்களில் ஏற்படும் வழுக்கும் மற்றும் வாகனங்களின் வேகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு இரும்புப் பாலத்தின் மேல் தளத்துக்கு இரசாயனப் பதார்த்தம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே இப்பாலங்களில் மேல் தளத்துக்கு வெளிநாடு ஒன்றிலிருந்து தருவிக்கப்பட்ட உயர்ரக வர்ணம் பூசப்பட்டது. மழையின் தாக்கம் மற்றும் அதிக வாகனப் பயன்பாட்டால் இந்த வர்ணப் பூச்சு அழிந்து விட்டது. தற்போது இப்பாலங்களில் வாகன விபத்துச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. (வ-17)

# திண்மக்கழிவகற்றும் நிலைய கூரைகளுக்கு புதிய தகரங்கள்



யாழ்ப்பாணம்,ஜூன் 13
காக்கைதீவில் உள்ள யாழ்.மாநகர சபையின் திண்மக்கழிவுகள் அகற்றும் நிலையத்தின் கூரைத்தகடுகள் கழற்றப்பட்டு புதிய தகரங்கள் மாற்றுவதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன.
நாளை வெள்ளிக்கிழமை குறித்த பணிகள் பூர்த்தியடையும் எனவும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார். (வ-7-17)

# சாரதிகள் இல்லாததால் சபை நடவடிக்கை பாதிப்பு

## காரைநகர் பிரதேச சபையில்

யாழ்ப்பாணம்,ஜூன் 13
காரைநகர் பிரதேச சபையில் சாரதிகள் எவரும் இல்லாத காரணத்தால் சபையின் அத்தியாவசிய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சபையில் போதியளவு வாகனங்கள் உள்ளபோதும் சாரதிகள் இல்லாமையால் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் சபைக்கு ஒரேயொரு நிரந்தர வாகனச் சாரதி மாத்திரமே பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். அவரும் கடந்த மே மாதம் 8ஆம் திகதி உயிரிழந்ததைத் தொடர்ந்து சபையில் சாரதிகள் எவருமே இல்லாத நிலைமை தோன்றியுள்ளது.
இந்த விடயம் தொடர்பாக சபையின் தவிசாளர் வி.ஆனைமுகனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, எமக்கான நிரந்தரச் சாரதிகளை வழங்குமாறு பலமுறை வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் தொடர்ச்சியாகக் கேட்டு வருகின்றோம். தற்காலிகச் சாரதியை வேண்டுமானால் நியமிக்குமாறு அவர் தெரிவித்தார். அந்தக் கருத்தையும் வாய்மொழி மூலமாகவே தெரிவித்தார். இதனால் எங்களால் வாகனச் சாரதி ஒருவரை நியமிக்க முடியாத நிலை காணப்படுகின்றது-என்றார். (வ-5-17)

# நகைகள் ஏலத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜூன் 13
இலங்கை வங்கிக் கிளைகளில் கடந்த வருடம் மார்ச் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் அடைவு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வங்கியின் அதி உயர் மேற்தரக் கிளையில் ஏலத்தில் விற்கப்படவுள்ளன.
எனவே இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளையில் தமது நகைகளை அடைவு வைத்தவர்கள் நகைகளை மீட்டுக் கொள்ளுமாறு ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் அறிவித்துள்ளார்.
(வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் ஆலய இடமாற்றம் குறித்த 'உதயன்' செய்தி பொய்யானதாம்

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள தர்மலோகா மாவத்தையில் உள்ள சிறி பூமாரி அம்மன் கோயிலை அதன் தற்போதைய இடத்தில் இருந்து அகற்றிவிட்டு அந்த இடத்தில் வாகனத் தரிப்பிடம் அமைக்க பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் நெறிப்படுத்தப்படும் நகர மேம்பாட்டு அதிகார சபை திட்டமிட்டுள்ளதாக 'உதயன்' பத்திரிகை பொய்க் குற்றச்சாட்டை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு அரச தரப்புப் பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. அது மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தக் குற்றச்சாட்டை உறுதியாக மறுத்த தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல, ஆயிரக்கணக்கானவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்கான தலைமையை வழங்கிய பெருமைக்குரியவர் கோத்தபாய ராஜபக்ஷ என்றும் தெரிவித்துள்ளார்.

''பாதுகாப்புச் செயலரின் சிறப்பான திட்டமிடல் மூலமே, வடக்கு – கிழக்கில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டார்கள்'' என்றும் ஹுலுகல்ல தெரிவித்தார்.

''நாட்டின் வர்த்தக மற்றும் பொருளாதார மூலமான கொழும்பின் தோற்றம் மிகப் பெரும் மாற்றத்தைச் சந்தித்துக் கொண்டுள்ளது. பாதுகாப்புச் செயலரின் கொழும்பு மாநகர மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொழும்பு ஓர் அழகிய பூங்கா நகரமாக மாறி வருகின்றது. சில மனிதர்களுக்கு இதனை ஜீரணிக்க முடியவில்லை. அவர்கள் அதனைக் குறை கூறுகிறார்கள்'' என்று மேலும் கூறினார் ஹுலுகல்ல.

'உதயன்' பத்திரிகை எந்த விழுமியங்களையும் மதிக்காதது என்றும் அவர் தெரிவித்தார். அந்தப் பத்திரிகை வெளியிடும் செய்திகளுக்கு எந்த மரியாதையும் இல்லை என்றும் கூறினார். நாட்டில் அமைதியையும் இணக்கத்தையும் குழப்புவதற்கே அந்தப் பத்திரிகை முயற்சித்து வருகின்றது எனவும் குற்றஞ்சாட்டினார்.

''இந்தச் செய்தி சோடிக்கப்பட்டது, பொய்யானது, எந்த ஆதாரங்களும் அற்றது'' என்றார் அவர்.

''தன்னுடைய இருப்புக்காக மட்டுமே 'உதயன்' பத்திரிகை இவ்வாறான படிமங்களை உருவாக்குகிறது. அதற்காக அவர்கள் எதையும் செய்வார்கள். தன்னுடைய சுயநலத்துக்காக தமிழ்ச் சமூகத்துக்கும்கூட அது துரோகம் செய்கிறது'' என்கிறார் பணிப்பாளர் நாயகம்.

வடக்கில் சிங்கள மக்களை மட்டுமே குடியேற்ற அரசு திட்டமிடுவதாக மற்றொரு செய்தியையும் 'உதயன்' பத்திரிகை வெளியிட்டது எனவும் அவர் கூறினார். இந்தச் செய்திகூட மக்களின் ஆர்வத்தைக் கவரவில்லை, எனவே அதுவும் மற்றொரு குப்பையாகச் சேர்ந்து கொண்டது என்கிறார் பணிப்பாளர் நாயகம்.

''நாட்டினுள் சமய ரீதியான குழப்பத்தை உருவாக்குவதற்கு 'உதயன்' பத்திரிகை முயற்சிக்கிறது என்பதற்கான உறுதியான ஆதாரம் இது. பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவின் நெறிப்படுத்தலின் கீழ் உள்ள இராணுவம் யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் பக்தர்களும் முல்லைத்தீவில் உள்ள பழம் பெருமை வாய்ந்த கதிர்காமம் கோயில் பக்கதர்களும் தமது சமயக் கடன்களையும் சடங்குகளையும் செய்வதற்கு உதவி வருகின்றது.

மேலும் கொழும்பில் உள்ள இந்து ஆலயங்கள் தமது சமய நிகழ்வுகளையும் நடவடிக்கைகளையும் அமைதியாகவும் இணக்கமாகவும் மேற்கொண்டு வருகின்றன'' என்றார் லக்ஷ்மன் ஹுலுகல்ல.

'உதயன்' பத்திரிகையில் வெளியான குற்றச்சாட்டுக்களை மீண்டும் உறுதியாக மறுத்த பணிப்பாளர் நாயகம், அது தரவுகள் ஏதுமற்றது என்றும் கூறினார்.

இவ்வாறு 'டெய்லி நியூஸ்' செய்தியில் கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:

கொள்ளுப்பிட்டி சிறி பூமாறி அம்மன் ஆலயம் இடமாற்றப்படுகின்றது என்ற செய்தி, கொழும்பிலிருந்து வெளிவரும் 'சிலோன் ருடே' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் 10ஆம் திகதிய பதிப்பில் வெளியாகி உள்ளது. அதனை மூலமாகக் கொண்டு 11ஆம் திகதிய பதிப்பில் 'உதயன்' அந்தச் செய்தியை வெளியிட்டது. ஆலயத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்ற தகவல்களை கொழும்பு மாநகர சபை தமிழ் உறுப்பினர்களும் 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத்தியிருந்தனர். இந்த நிலையில் 'உதயன்' செய்தி வெளியிடுவதற்கு முன்னரே 'சிலோன் ருடே' வெளியிட்ட செய்தியைப் பொய்யானது என்று மறுக்காத பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம், 'உதயன்' செய்தியை மறுத்துள்ளார் என்பது கவனத்துக்குரியது.

## இந்தியாவுக்கு உரிமையில்லை

### ஜாதிக ஹெல உறுமய போர்க்கொடி

கொழும்பு,ஜூன் 13

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட இந்தியாவுக்கு உரிமை இல்லை என்று ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயபோர்க்கொடி தூக்கியுள்ளது.

சர்ச்சைக்குரிய '13' ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தங்களைக் கொடுத்துள்ளது என்று ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க தெரிவித்தார். இதுதொடர்பாக சீன செய்தி நிறுவனமான சின்ஹுவாக்கு கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

''இந்தியாவின் நடவடிக்கைகள் இலங்கை மக்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தும். எமது உள்நாட்டு விவகாரங்களில் இருந்து இந்தியா ஒதுங்கி நிற்க வேண்டும் '' என்று அவர் தெரிவித்தார்.

அவர்களுக்கு கவலைகள் இருந்தால், அது தொடர்பாக இலங்கை அரசுடன் நேரடியாகப் பேச வேண்டும்.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களையும் முயற்சியில் தோல்வி கண்ட இந்தியாவுக்கு, '13' ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தும்படி அழுத்தம் கொடுப்பதற்கு எந்த உரிமையும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் அதிகரிப்பு

அரச அதிகாரிகளுக்கு எதிரான பொது மக்களின் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன என்று பொதுநிர்வாகத்துறை அமைச்சர் டபிள்யு.டி.ஜே. செனவிரத்ன தெரிவித்தார்.

இவ்வாறான முறைப்பாடுகள் கடந்த வருடத்தை விட இந்த வருடம் 99 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று அவர் கூறினார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் மாத்திரம் இவ்வாறன 205 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைபாடுகளின் அடிப்படையில் குறித்த அரச அதிகாரிகளுக்கு எதிரான விசாரணைகளை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

## இலங்கைக்கு 110 ஆவது இடம்

உலகளாவிய சமாதான சுட்டெண்ணில் இலங்கை 110 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தச் சுட்டெண் உலகில் உள்ள 162 நாடுகளில் வன்முறைகள் அற்ற, பண்புகள் மற்றும் அளவீடுகள் போன்ற 22 தரக் கணிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு வருடாந்தம் கணிக்கப்படுகின்றது.

உலகளாவிய சமாதான சுட்டெண்ணில் முதலாவது இடம் ஐஸ்லாந்துக்கு கிடைத்துள்ளதுடன் இரண்டாம், மூன்றாம் இடங்கள் முறையே டென்மார்க், நியூஸிலாந்துக் குக் கிடைத்துள்ளன.

இந்தச் சுட்டெண்ணில் இந்தியா 141 ஆவது இடத்திலும், பிரிட்டன் 44 ஆவது இடத்திலும், பிரான்ஸ் 53 ஆவது இடத்திலும், அமெரிக்கா , சீனா என்பன முறையே 99 ஆவது, 101 ஆவது இடங்களிலும், ரஷ்யா 155 ஆவது இடத்திலும் உள்ளன.


பதவி வெற்றிடம்

★. முகாமைத்துவ உதவியாளர் (Managment Assistant)
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த உயர்தரம் வர்த்தகப்பிரிவில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

★. தொழிற்சாலை உற்பத்தி முகாமையாளர் (Factory Production Manager)
கட்டடப்பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றிற்கு உற்பத்திசார் முகாமைத்துவ அனுபவமுள்ள பொறியியல் துறை சார்ந்தவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

★. விற்பனைப் பிரதிநிதி(Marketing Representative)
கட்டடப் பொருள்கள் விற்பனை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் போன்றவற்றில் ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தகைமையுடையோர் சுய விபரங்களுடன் அடங்கிய விண்ணப்பத்தை 18.06.2013 ஆம் திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

ரெடிபில்ட் லங்கா, கரந்தன் வீதி,
ஊரெழு.



Best Wishes



அகமகிழ பாராட்டி வாழ்த்துகின்றோம்

சுன்னாகம் இலங்கை வங்கி மேற்தரக் கிளையில் வாடிக்கையாளர்களின் நலன் பேணும் அதிகாரியாக ஏழாண்டு காலம் உன்னத பணியாற்றி, இன்று வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கும் இலங்கை வங்கிக் கிளை முகாமையாளராக பொறுப்பேற்கும்

வேலாயுதபிள்ளை புவனேந்திரராஜா

அவர்களை

எமது மனதார வாழ்த்துகின்றோம். இவர் மானிப்பாய், சுன்னாகம் இலங்கை வங்கிக்கிளைகளில் கடமையாற்றும்போது வாடிக்கையாளர்களை இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு தேவையான சேவையை பூரண அர்ப்பணிப்புடன் நிறைவு செய்து கொடுப்பதில் முதன்மையாக திகழ்ந்தார். நேர்மை, நியாயம், தயாள குணம் படைத்த வங்கி அதிகாரியான இவர் வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளையில் தனது முகாமைத்துவ திறனால் மேற்தரக் கிளையாக உயர்த்துவார் என்பதில் ஐயமில்லை. இவரது பணி மேன்மேலும் தொடர்ந்து பதவி உயர்வுகளைப் பெற்று சுகதேகியாக நீடூழிவாழ எல்லாம் வல்ல மானிப்பாய் மருதடி விநாயகர் அருள்பாலிப்பார் என வேண்டி எமது பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:

சுந்தர்சன்
யாழ் வீதி, மானிப்பாய்.

உரிமையாளர்
ஊழியர்கள்.

(C/9808)(10.6.3)



மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

WF-xxxx எனும் இலக்கமுடைய கறுப்பு நிற கங் மோட்டார் சைக்கிள் HERO HONDA உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- 0775081793



வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்
சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை யோகா பயிற்சிகள்

* எளிய முறை உடற் பயிற்சிகள் * எளிய முறை காயகல்பப்பயிற்சி
* எளிய முறை தியானப்பயிற்சிகள் * அகத்தாய்வு எனும் தற்சோதனைப் பயிற்சி

மனிதன் இன்று மன அமைதியின்றி குழப்பங்களுடனும் பல சவால்களுடனும் வாழ்ந்து வருகின்றான். இவற்றையெல்லாம் நீக்கி மனிதனின் சிந்தனையை விருத்தி செய்து மன அமைதி, நோய் எதிர்ப்பு சக்தி, குடும்ப அமைதி போன்ற அனைத்தையும் ஒருங்கே பெற்றுக்கொள்ளக் கூடியதாக வடிவமைக்கப்பட்ட அற்புதமான பயிற்சியே மனவளக்கலை யோகாவாகும்.

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்கவும் பயிற்சி பெற்றவர்களின் பாராட்டுகளுக்கு இணங்கவும் இவ்வாறான அரிய பயிற்சியினை மீண்டும் ஆரம்பிக்கின்றோம். ஏற்கனவே பயிற்சியை பெற்றவர்களும் இதில் பயின்று பயன்பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்:15.06.2013, 16.06.2013 பி.ப4.30 மணி
17.06.2013, 18.06.2013, 19.06.2013, 20.06.2013 பி.ப 5.00 மணி
இடம்: நாச்சிமார் கோயில் திருமண மண்டபம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
அகத்தாய்வு II (தற்சோதனைப் பயிற்சி)
காலம்:15.06.2013, 16.06.2013 (சனி, ஞாயிறு) காலை 8.30 – பி.ப 1.30மணி
இடம்: வண்ணார் பண்ணை தவமையம்

அகத்தாய்வு (I) பயிற்சி முடித்தவர்களுக்கு அகத்தாய்வு (II) பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதில் சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், ஆசை சீரமைத்தல், நான் யார் என்ற தத்துவ ரீதியான விளக்கங்களும், தவநிலையில் உயர்நிலை ஆகிய அரியாத்தும் என்ற தவமும் கற்றுக்கொடுக்கப்படும். இவற்றில் பங்குகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

இறைவணக்கம், குருவணக்கம்
தொடக்கவுரை –
மனவளக்கலை பேராசிரியர். அருள்நிதி சி. முருகானந்தவேல் அவர்கள்
(இலங்கை மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)
அறிமுகவுரையும் பயிற்சி வழங்கலும் –
மனவளக்கலை பேராசிரியர். அருள்நிதி S.இந்திரா அவர்கள்

வாழ்க வளமுடன்

இலங்கைமனவளக்கலை மன்ற, அறக்கட்டளை,
வண்ணார்பண்ணை தவமையம்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
077 772 6732
077 123 5646
071 440 3268
077 736 8745


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1000 மி.கி. கஞ்சா வைத்திருந்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 13
1000 மி. கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைச் சேர்ந்த ஒருவரே ஊர்காவற்றுறையில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டார்.



சட்டவிரோதமாக கஞ்சா போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்தார் என்று அவருக்கு எதிராக பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.
நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்ட சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.(த-4)




உலக சுற்றாடல் தினம் மற்றும் சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் 'சுற்றாடலைப் பாதுகாப்போம்' எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை பொது பஸ் தரிப்பிடத்திலிருந்து ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முன்றில் வரையும் நடத்தப்பட்டபோது..

## 'பவ்ரல்' அமைப்பின் ஏற்பாட்டில் வேலணையில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 13
வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 'பவ்ரல்' அமைப்பால் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளதாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீஷன் தெரிவித்தார்.
எதிர்வரும் 4, 5 ஆம் திகதிகளில் இரண்டு தினங்களுக்கு வேலணை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிறப்பு, இறப்பு பதிவுகள், தொலைந்த அடையாள அட்டை குறித்த பதிவுகள் இடம்பெறவுள்ளதால் பிறப்பு, இறப்பு தொடர்பாக தங்கள் வசமுள்ள ஏதாவது ஓர் ஆவணத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.
பிறந்த திகதி மற்றும் பிறந்த இடத்தை உறுதிப்படுத்தும் ஜாதகம் ஞானஸ்நானக் கடிதம் போன்றவற்றைச் சமர்ப்பிக்க முடியும்.
காணாமற் போனவர் தொடர்பில் பதிவுகள் மேற்கொள்வதற்கான படிவம் ஒன்றை பிரதேச செயலர் அலுவலகத்தில் பெற்று 14 தினங்களுக்கு முன் கிராம அலுவலரிடம் ஒப்படைத்தபின் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
இதற்குப் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட கடிதம், மனித உரிமைஆணைக்குழுவின் கடிதம் என்பன அவசியம்.
பதிவுகளுக்குரிய செலவினங்களை 'பவ்ரல்' அமைப்பே பொறுப்பேற்கும்.
காணாமற் போனோர் தொடர்பான பதிவுச் சட்டம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையுமே நடைமுறையில் இருக்கும். அதன் பின்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியாது.
காணாமற் போனவர்கள் திரும்பி வரும் பட்சத்தில் பதிவுரத்துச் செய்ய முடியும்- என்றார். (வ-7)

## பாஷையூர் அந்தோனியார் ஆலய பெருவிழா இன்று

பாஷையூர், ஜூன் 13
பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த பெருவிழா இன்று நடைபெறும்.
காலை 5.15 மணிக்கு முதல் திருப்பலி பூசையைத் தொடர்ந்து காலை 6.30 மணிக்கு விழா கூட்டுத் திருப்பலி பூசை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெறும். மாலை 4.30 மணிக்கு புனிதரின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். அத்துடன் இன்றைய பெருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் வசதி கருதி மாநகர சபை குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.
அதனைவிட யாழ். நகரில் இருந்து பாஷையூருக்கான விசேட போக்குவரத்து சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (வ-17)




# '13' ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அழுத்தம்

### பருத்தித்துறை பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது

வடமராட்சி, ஜூன் 13
அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் எனப் பருத்தித்துறைப் பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று ஏகமனதாக நிறை வேற்றப்பட்டுள்ளது.
சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.
இது தொடர்பாக சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் கருத்து தெரிவிக்கையில்:
மாகாண சபைக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். முக்கிய சில அதிகாரங்கள் மாகாண சபைக்கு இல்லை. இதனால் மாகாண சபையின் கீழ் இயங்கும் பிரதேச சபைகள் சிறப்பாக இயங்க முடியாமல் உள்ளன. குறிப்பாகத் தமது சபைக்குக் கிடைக்க வேண்டிய 300 லட்சம் ரூபா முத்திரைத் தீர்வையைப் பெற்றுக்கொள்ள அதிகாரம் இன்றி நாம் உள்ளோம் என்றார்.
உபதலைவர் மா.லோகசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில்:
1978 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டமே தற்போது நடைமுறையில் உள்ளது. 1978 இலிருந்து வடக்கு-கிழக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டது. அதன் போது ஓரளவு சாதகமான நிலைமைகள் காணப்பட்டன. வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டும். அத்துடன் அதிகாரங்கள் சூறையாடப்படக் கூடாது என ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார்.
எதிரணி உறுப்பினர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில்:
13 ஆம் அரசமைப்பு சீர்திருத்தம் மேம்படுத்தப்பட வேண்டும். 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஒப்பந்தத்தில் 13 ஆம் அங்கம்தான் அரசியலமைப்புச் சட்டம். வடக்கு, கிழக்கு ஒரே தமிழர் அலகு என்றும் மாநில அரசுக்குரிய அதிகாரங்கள் அதற்கு அமைய வேண்டும்; ஒப்பந்தம் செய்யப்பட்டதிலிருந்து ஒரு வருடத்தில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு நிரந்தரமாக வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபைக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது எனக் கூறினார்.
திக்கம் காணி சுவீகரிப்புத் தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. காணி சுவீகரிப்பு தற்போது சாதாரணமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. வெளி மாவட்டங்களில் காணிச் சுவீகரிப்புச் செய்யும்போது மக்களுக்கு பாதிப்புக் குறைவாகக் காணப்படலாம். ஆனால் யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மக்களுக்குப் பலத்த பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. விடுதலைப் புலிகள் காலத்தில் திக்கம் பகுதியில் உள்ள 30. குடும்பங்கள் பலவந்தமாக எழுப்பப்பட்டு பயிற்சி முகமாக குறித்த பகுதி மாற்றப்பட்டது.
தற்போது போர் முடிவடைந்த பின் மீளக்குடியமர ஆயத்தமாகும்போது அங்கு குடியமரவிடாது இராணுவம் தடுக்கின்றது. அந்தப் பகுதியில் பாடசாலையும் உள்ளது. அங்கு இராணுவ முகாம் அமையும் சந்தர்ப்பத்தில் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படலாம். மேலும் அந்தப் பகுதியில் உள்ள ஏனைய மக்களும் அங்கிருந்து வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.
எனவே அந்தப் பகுதிக்குரிய மக்களை அழைத்து நேரடியாகக் கலந்துரையாடி அறிவுறுத்தல் வழங்க வேண்டும். கட்சி பேதமின்றி காணி இராணுவத்தால் சுவீகரிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்று தீர்மானத்தை முன்மொழிந்த ஆளும் கட்சி உறுப்பினர் க.தவயோகநாதன் குறிப்பிட்டார். (வ-8)

## 'காப்பெற்' வீதி நடுவே பள்ளம்



யாழ்ப்பாணம் மாட்டீன் வீதி காப்பெற் வீதியாக செப்பனிடப்பட்டுள்ளது. எனினும் இந்த வீதியின் ஒரு பகுதி நிரவப்படாமல் பள்ளமாக விடப்பட்டுள்ளது. இதனால் இவ் வீதியூடாக பயணிப்போர் சடுதியாக இந்தப் பள்ளத்தில் விழுந்தெழும்பும் நிலை உருவாகிறது. எனவே இதனை நிறைவு செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பயணிப்போர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## இறந்த தென்பகுதி மீனவருக்கு வட பகுதி மீனவர்கள் இரங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 13
தென்னிலங்கை கடற் பகுதியில் புயல் காற்றில் சிக்குண்டு சடலங்களாக மீட்கப்பட்ட மீனவர்களுக்கு வடபகுதி மீனவர்கள் தமது இரங்கலைத் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக யாழ்.மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் எமிலியாம்பிள்ளை மேலும் தெரிவித்ததாவது:
கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தென்பகுதி கடல் பகுதிகளில் வீசிய கடும் புயல்காற்றில் சிக்குண்டு 70 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் காணாமற் போயிருந்த நிலையில் [illegible] உதவியுடன் சில மீனவர்கள் உயிருடன் மீட்கப்பட்டனர்.
இதேவேளை, பேருவளை, களுத்துறை, தெஹிவளை, பம்பலப்பிட்டி ஆகிய பகுதி கடற்கரைகளில் ஒதுங்கிய 43 மீனவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ள நிலையில் மேலும் பல மீனவர்கள் காணாமற் போயுள்ளனர்.
இந்த நிலையில் காணமற் போன ஏனைய மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கி வரும் நிலையில் அவர்களது குடும்ப நிலைமை வேதனையளிக்கிறது.
இந்த மீனவர்களது குடும்பங்களுக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிக்கிறோம் என்றார். (வ-14)

## பேரிடர் முகாமைத்துவ நிகழ்வு எழுவைதீவில்

யாழ்ப்பாணம், ஜூன் 13
எழுவைதீவு றோ.க. தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை பேரிடர் முகாமைத்துவ அணி அமைக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை அதிபர் எஸ்.விஜயகுமார் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலயக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் வே.கிருபாகரன், சி.கமலநாதன், யாழ்.செயலக பேரிடர் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ரவி உட்பட ஊர்காவற்றுறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.
சுனாமி மற்றும் இடர்களில் இருந்து பாதுகாப்புத் தேடுவது குறித்த செயற்பாடுகள் குறித்த விழிப்புணர்வு தொடர்பான விளக்கங்கள், செயல்முறைகள் என்பனவும் இடம்பெற்றன. (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பிரதமர் ஜெயாவே

## சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

சென்னை, ஜூன் 13

எதிர்வரும் மக்களவைத் தேர்தலின் பின்னர் தென் மாநிலங்களைச் சேர்ந்த ஒருவரே, குறிப்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவே அடுத்த பிரமராகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையைச் சேர்ந்த மூத்த சட்டத்தரணி பி.ஆர். கிருஸ்ணன் குறித்த பொது நல மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தற்போதைய இந்திய அரசமைப்பு முறை பிரிட்டிஷ் முறையானது என்றும் அதில் தென்மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பிரதமராவதற்குரிய வாய்ப்பு போதிய அளவில் தரப்படவில்லை என்றும் அவர் தனது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இந்த விடயம் குறித்து மக்களவைத் தலைவர், நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர், மத்திய சட்டம் மற்றும் நீதித்துறைச் செயலாளர் மற்றும் மத்திய உள்துறைச் செயலாளர் ஆகியோருக்கு கடந்த மார்ச் மாதம் கோரிக்கை மனுக்களை அனுப்பினேன். எனினும் கோரிக்கை தொடர்பில் எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அதையடுத்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார் பி.ஆர்.கிருஸ்ணன்.

தமிழக மக்களுக்கு அரசியல் நீதி கிடைக்கும் வகையில், எதிர்வரும் மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் தற்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா நாட்டின் அடுத்த பிரதமராகத் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்குரிய அரசமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துமாறு மத்திய அரசுக்கு நீதிமன்று உத்தரவிட வேண்டும் என்று குறித்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை எதிர்வரும் புதன் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற)

# கட்சிப் பணிகளுக்கு திரும்பும் அத்வானி

## சமரச முயற்சிகளை அடுத்து

புதுடில்லி, ஜூன் 13

மோடிக்கு கட்சியில் முக்கிய பதவி அளித்தமையைக் கண்டித்து, பதவி விலகுவதாக அறிவித்த பா.ஜ.கவின் மூத்த தலைவர் அத்வானி, தனது பதவி விலகல் தீர்மானத்தை மாற்றிக் கொண்டுள்ளார்.

குஜாராத் முதலமைச்சர் நரேந்திர மோடி பா.ஜ.கவின் தேர்தல் பிரசாரக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டதை அடுத்து அத்வானி பதவி விலகுவதாக அறிவித்தார். எனினும் மோடியின் நியமனம் தொடர்பில் எந்த மாற்றமும் இல்லை என்று பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், அத்வானியை அவரது இல்லத்தில் சென்று சந்தித்த பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் அவரது பதவி விலகல் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு வலியுறுத்தினர்.

கடந்த இரண்டு நாள்களாக நடைபெற்ற சமரச முயற்சிகளின் பயனாக தனது பதவி விலகல் தீர்மானத்தை அத்வானி மாற்றிக் கொண்டுள்ளார்.

''அத்வானியைச் சமாதானப்படுத்தியுள்ளோம். தனது பதவி விலகல் தீர்மானத்தை கைவிட்டு அத்வானி கட்சிப் பணிகளுக்குத் திரும்புவார். அத்வானி சுட்டிக்காட்டிய குறைகள் குறித்து கவனம் எடுக்கப்படும்'' என்று தெரிவித்தார் பா.ஜ.கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங். (ற)

# நரேந்திர மோடிக்கு எதிர்ப்பு; தே.ஜ. கூட்டணிக்குள் பிளவு

புதுடில்லி, ஜூன் 13

பாரதிய ஜனதாக் கட்சியின் உட்பூசல் முடிவுக்கு வந்துள்ள போதும் அதன் மூக்கிய கூட்டணிக் கட்சியான ஐக்கிய ஜனதாதளத்துடனான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியாது திணறி வருகின்றது பா.ஜ.க.

நரேந்திர மோடியை முன்னிலைப் படுத்துவதை எதிர்த்து, தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் வெளியேறும் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அந்த மாநில சட்ட சபை உறுப்பினர்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார். மூத்த அமைச்சர்கள் மற்றும் பீகார் மாநில ஜனதா தள தலைவர்களுடனும் அவர் தொடர் ஆலோசனை நடத்தி வருகிறார்.

243 உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்ட சபையில் ஐக்கிய ஜனதா தளத்துக்கு 118 உறுப்பினர்களும், பாரதிய ஜனதா கட்சிக்கு 91 உறுப்பினர்களும் உள்ளனர்.

தற்போதைய சூழலில் பாரதிய ஜனதாவுடனான கூட்டணியை முறித்துகொண்டால் ஐக்கிய ஜனதா தளத்திற்கு 4 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அதையடுத்து சுயேட்சை உறுப்பினர்களுடன் நிதிஷ் குமார் ஆலோசனை நடத்தி வருகின்றார் என்று கூறப்படுகிறது. (ற)

# சோக பதாதைகள் அகற்றம்

புதுடில்லி, ஜூன் 13

பா.ஜ.க. தலைவர் அத்வானி சோகமாக இருப்பது போன்றும், பா.ஜ.க. இரண்டாக பிரிந்து விட்டது போன்றும் அச்சிடப்பட்டு வைக்கப்பட்ட பதாதைகள் நேற்று அகற்றப்பட்டன.

பா.ஜ.கவில் இருந்து அத்வானி விலகுவதாகத் தெரிவித்து பதவி விலகல் கடிதத்தை கையளித்தபின்னரே இவ்வாறான பதாதைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் தாமரைப் பூ இரண்டாகப் பிரிந்து விட்டது போன்று சித்திரிக்கப்பட்டது. அவற்றை மாநகராட்சி நிர்வாகம் நேற்று அகற்றியது.

அத்வானியும், தனது பதவி விலகல்முடிவை திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ற)

# மதுவுக்கு அடிமையான மந்தி

## கடை திறக்க முன்னரே காத்திருக்கிறது

ரொய்ச்சூர், ஜூன் 13

மதுவுக்கு அடிமையான குரங்கு ஒன்று தினமும் மதுக்கடை திறக்க முன்னரே வந்து வாசலில் காத்திருக்கின்றது. இந்தச் சம்பவம் கர்நாடகா மாநிலம் ரொய்ச்சூரில் நடக்கிறது.

அங்குள்ள மதுக்கடைக்கு வரும் குரங்கு 'குடிமகன்கள்' குடித்தப் பின்னர் மிச்சம் இருக்கும் மதுவை குடித்து ருசி கண்டது. கடை உரிமையாளரும் அதைப் பெரிதாக எடுக்கவில்லை. நாளடைவில் மதுக்கடைக்கு அழையாத வாடிக்கையாளராக மாறிவிட்டது குரங்கு.

மதுவுக்குப் பழகப்பட்ட குரங்குக்கு 'குடிமகன்'களின் மிச்ச சொச்சம் போதுமானதாக இல்லை. நேரடியாக கடை கல்லாவுக்குச் சென்று ஒரு போத்தல் தருமாறு தொல்லை பண்ணத் தொடங்கியது. கடை உரிமையாளரும் வேறு வழியில்லாமல் ஒரு போத்தலைக் கொடுக்கத் தொடங்கினார்.

இப்போது கடை திறக்க முன்னரே வந்து 'குடிமகன்'களுடன் வரிசையில் நிற்கின்றதாம் குரங்கு. கடை திறந்தவுடன் ஒரு போத்தலை வாங்கி அப்படியே 'அடிக்கும்' குரங்கு பின்னர் 'கப்' ஒன்றுடன் கடைக்குள் இருந்து 'குடிமகன்'களிடம் 'பெக்' வாங்கிக் குடிக்கின்றதாம். (ற)





ஜூன் 12 ஆம் திகதி குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு தினமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. அதேவேளை, இந்தியாவில் சுமார் 50 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன. அதில் உத்தரகாண்ட மாநிலமே முன்னணி வகிக்கின்றது. அங்கு சுமார் 17.5 இலட்சம் குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர் என்று தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன. குழந்தைத் தொழிலாளர்களைக் கட்டுப்படுத்த இந்திய அரசு முயற்சிகள் மேற்கொண்டுவருகின்ற போதும் அவை போதிய பலனைத் தரவில்லை என்றும் தொண்டு அமைப்புகள் குறிப்பிடுகின்றன.

# போதைக்காக பாம்பு விஷம் கேரளாவில் ஐவர் கைது

திருவனந்தபுரம், ஜூன் 13

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பாம்பின் விஷம் கலக்கப்பட்ட மதுவை பரிமாறியமைக்காக 5 பேர் வனத்துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாரத்தின் இறுதி நாள்களில் போதை விருந்துகளில் பங்கேற்க வேண்டும் என்ற ஆர்வம் இளைய தலைமுறையினரிடம் அதிகரித்து வருகிறது. உலகை மறக்கும் போதை கிடைத்தால் போதும் என எதையும் குடிக்க தயாராக இருக்கின்றனர் இன்றைய தலைமுறையினர்.

திருவனந்தபுரம் இரவு விருந்து ஒன்றில் நாக பாம்பின் விஷம் கலக்கப்பட்ட மதுவகைகள் பரிமாறப்படுகின்றன் என்று வனத்துறையினருக்கு தகவல் கிடைத்தது. அதையடுத்து வனத்துறையினர் வியாபாரிகள் போல் அங்கு சென்று இடைத்தரகர்கள் சிலரிடம் மதுவைப் பெற்றுள்ளனர். அதை ஆய்வு செய்ததில் நாக பாம்பின் விஷம் அதில் கலந்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

அதையடுத்து வனத்துறை அதிகாரிகள் இடைத்தரகர்கள் மூலம் ஒரு லீற்றர் விஷத்திற்கு பதிவு செய்தனர். கொண்டு வரப்பட்ட 1 லீற்றர் பாம்பு விஷத்தை பறிமுதல் செய்ததுடன் கொண்டு வந்த 5 பேரையும் பொலிஸார் கைது செய்தனர். (ற)

# மூன்றாவது அணி உருவாகும் காலம் இது

## ஒரிசா முதலமைச்சர் நவீன் பட்நாயக் கூறுகின்றார்

புதுடில்லி, ஜூன் 13

ஊழல் மற்றும் உட்கட்சி மோதல்களில் சிக்கிக் கிடக்கும் காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதாவுக்கு மாற்றாக மூன்றாவது அணி அமைய வேண்டிய காலம் இது என்று ஒரிசா முதல்வர் நவீன் பட்நாயக் கூறியுள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ஆங்கில தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்த நவீன் பட்நாயக்,

''காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி, குஜராத் முதல்வர் நரேந்திர மோடி ஆகியோர் பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர்கள் அல்லர். மூன்றாவது அணி உருவாக வேண்டிய தருணம் இது. எங்கள் கட்சியைப் பொறுத்தவரை காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா ஆகிய இரண்டு கட்சிகளையும் சமதொலைவில்தான் எட்ட வைத்திருக்கிறோம்.

மூன்றாவது அணி பற்றிய விவாதம் என்பது இப்போது துளிர்விடும் நிலைதான். பாரதிய ஜனதா கட்சியில் நடைபெறும் நிகழ்வுகள் அனைத்தும் அக்கட்சியின் உள்விவகாரங்களே'' என்று தெரிவித்தார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தல்ல, சதிச் செயல்

### இம்ரான் கான்

இஸ்லாமாபாத், ஜூன் 13
பாகிஸ்தான் பொதுத்தேர்தல் பிரசாரத்தின் போது நிகழ்ந்த விபத்து, திட்டமிட்ட சதிச் செயல் என்று தெரிவித்துள்ளார் முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக் ஈ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கான்.
அந்த சதிச் செயல் குறித்து அரசு சார்பில் முன்கூட்டியே தமக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று தெரிவித்த அவர், தன்னைப் படுகொலை செய்வதற்கு சில சக்திகள் திட்டமிடுகின்றன என்று எச்சரிக்கை செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார்.
கடந்த மாதம் 7 ஆம் திகதி பொதுத் தேர்தலுக்கான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த இம்ரான் கான், மேடை சரிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்தார். தீவிரசிகிச்சைகளுக்குப் பின்னர் உடல்நலம் தேறிவரும் அவர், தமது இல்லத்தில் செய்தியாளர்களைச் சந்தித்துக்கலந்துரையாடியபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

# பாகிஸ்தான் எல்லைக்குள் இந்திய போர் விமானங்கள்

## குற்றஞ்சாட்டுகின்றது அந்நாட்டு விமானத்துறை

இஸ்லாமாபாத், ஜூன் 13
இந்திய போர் விமானங்கள் தமது நாட்டு வான்பரப்பில் அத்துமீறி நுழைந்துள்ளன என்று பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.
இந்திய விமானப் படைக்குச் சொந்தமான ஜெட் விமானங்கள் பஞ்சாப் வான்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தன என்றே பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துத் துறை கூறுகின்றது.
பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இது குறித்துக் கூறும்போது,




"இந்தியப் போர் விமானங்கள் ஒரு நிமிடத்துக்கும் அதிகமான பறப்பை பாகிஸ்தான் எல்லைக்குள் மேற்கொண்டிருந்தன. அதையடுத்து நாங்கள் அந்தப் பகுதிக்கு போர் விமானங்களை அனுப்பி வைத்தோம்"

"இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இரு ஜெட் போர் விமானங்கள் பஞ்சாப் மாகாணத்தின் பாக்பத்தன் மாவட்ட வான்பரப்பூடாக ஹெட்சுலேமான்கி என்ற இடம்வரை அத்துமீறி நுழைந்துள்ளன.
எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டில் இருந்து சுமார் 7 கிலோமீற்றர் தூரம் வரை இந்திய போர் விமானங்கள் அத்துமீறிய பறப்பை மேற்கொண்டிருந்தன," என்று தெரிவித்தார்.
இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டை இந்திய விமானப் படை மறுத்துள்ளது. "எமது போர் விமானங்கள் எதுவும் அந்தப் பகுதியில் பறப்பை மேற்கொள்ளவில்லை. அத்துமீறி பாகிஸ்தானுக்குள் நுழைவதற்கான சாத்தியங்கள் எதுவும் இல்லை" என்று தெரிவித்துள்ளது.
எனினும், "இந்தியப் போர் விமானங்கள் ஒரு நிமிடத்துக்கும் அதிகமான பறப்பை பாகிஸ்தான் எல்லைக்குள் மேற்கொண்டிருந்தன. அதையடுத்து நாங்கள் அந்தப் பகுதிக்கு போர் விமானங்களை அனுப்பி வைத்தோம்" என்று தெரிவிக்கிறது பாகிஸ்தான் விமானப் போக்குவரத்துத் துறை. (ற)

## முஷாரப்புக்கு பிணை வழங்கியது நீதிமன்று

இஸ்லாமாபாத், ஜூன் 13
நீதிபதிகளைக் கைது செய்ய உத்தரவிட்டமை தொடர்பான வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்புக்கு நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.
2009ஆம் ஆண்டு முஷாரப் பதவியில்இருந்போது 12க்கும் மேற்பட்ட நீதிபதிகளை கைது செய்ய உத்தரவிட்டிருந்தார். இது தொடர்பான வழக்கு தற்போது இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றில் நடைபெற்றுவருகின்றது.
இந்தவழக்கில் பிணை வழங்கக் கோரி முஷாரப் அளித்த மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதிகள் முஷாரப்புக்குப் பிணை வழங்க உத்தரவிட்டனர். (ற)



ஆப்கன் தலைநகர் காபூலில் உயர்நீதிமன்ற பணியாளர்கள் பயணித்த பஸ் ஒன்றின் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் 14 பேர் உயிரிழந்ததுடன் 37 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்.

## கிரேக்கத்தில் அரச ஊடகம் மூடப்பட்டது

கிறீஸ், ஜூன் 13
கிரேக்க அரசுக்குச் சொந்தமான இலத்திரனியல் ஊடக வலையமைப்பு ஒன்று மூடப்பட்டுள்ளது. நட்டத்தை ஈடு செய்யும் வகையிலும் செலவுக் குறைப்பை மேற்கொள்ளும் நோக்கிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்த ஊடக வலையமைப்பில் பணியாற்றிய ஊழியர்களும் இடை நிறுத்தப்பட்டுள்ளமை பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்துள்ளது.
கிரேக்கத்தில் நிதி நெருக்கடிகளை கட்டுப்படுத்துவதற்கு அரசு பொதுச் செலவுகளில் குறைப்புக்களை மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அமெ. பாதுகாப்புக்கு ஈரான் அச்சுறுத்தல்

### பென்டகன் கூறுகின்றது

வோஷிங்டன், ஜூன் 13
அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஈரான் மிகப் பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.
பென்டகனில் நடைபெற்ற சட்ட வல்லுநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பென்டகனின் உயரதிகாரிகளே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவித்ததாவது,
"அமெரிக்காவின் பாதுகாப்



புக்கு ஈரான் பெரும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. ஈரானின் அணு ஆயுத செயற்பாடுகளை தடுத்த நிறுத்த வேண்டும் என்பதில் நாங்கள் கவனமாக இருக்கின்றோம். ஈரானின் அத்தகைய செயற்பாடுகள் பிராந்தியத்தில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது." என்று தெரிவித்துள்ளனர்.(ற)

## "ஸ்நொடென் என் கூட்டாளிதான்"

### அசாஞ்சே கூறுகின்றார்

லண்டன், ஜூன் 13
அமெரிக்காவின் உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. அமைப்பில், பணியாற்றிய எட்வர்டு ஸ்நொடெனுடன் தமக்கு மறைமுக தொடர்பு இருந்தது என்று விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சே தெரிவித்துள்ளார்.



லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ள அசாஞ்சே அங்கிருந்தவாறு ஆஸ்திரேலிய தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.
இராணுவ ரகசியங்களை கசிய விட்டார் என்று தெரிவித்து எட்வர்டு ஸ்நொடெனை அமெரிக்கா கைது செய்ய திட்டமிட்டு வரும் நிலையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். எனினும் கூடுதல் தகவல்களைத் தர மறுத்துவிட்ட அசாஞ்சே, "அதற்கான சரியான தருணம் இது அல்ல" என்று குறிப்பிட்டார்.
பாலியல் புகார் தொடர்பாக அசாஞ்சேயை ஸ்வீடனுக்கு நாடு கடத்துவதற்குப் பிரிட்டன் திட்டமிட்டிருந்த நிலையில், அவர் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஈக்வடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்தார். எனினும் அவரைக் கைது செய்வதற்காக தூதரகத்திற்கு வெளியில் கடந்த ஓராண்டு காலமாக லண்டன் பொலிஸார் காத்துக் கிடக்கின்றனர். தற்போது ஹொங்கொங்கில் தங்கியுள்ள எட்வர்டு ஸ்நொடென், அமெரிக்காவின் கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க அயர்லாந்தில் தஞ்சமடைய திட்டமிட்டுள்ளார். (ற)

## உலகின் அதிக வயதான தாத்தா உயிரிழந்தார்



டோக்கியோ, ஜூன் 13
உலகின் மிக வயதான முதியவர் என்று கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்ற ஜிரோய்மன் கிமுரா ஜப்பானில் நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 116.
1897ஆம் ஆண்டு ஜப்பானில் பிறந்த கிமுரா, தனது இளமைப் பருவத்தில் தபால் துறை ஊழியராக பணியாற்றினார்.
தனது 115வது ஆண்டு பிறந்த நாள் விழாவின் போது "நீண்ட ஆயுளுக்கு அதிக நேரம் சூரிய வெளிச்சத்தின் கீழ் நின்று வருவதுதான் காரணம்" என்று அவர் கூறியிருந்தார்.
கடந்த ஆண்டு இவரை உலகின் மிக வயதான முதியவராக கின்னஸ் நிறுவனம் அங்கீகரித்தது. இறுதிக் காலத்தை விவசாயம் செய்வதில் கழித்த கிமுரா நேற்று உயிரிழந்தார். அவருக்கு 7 பிள்ளைகள், 14 பேரப் பிள்ளைகள், 25 கொள்ளுப்பேரன் பேத்திகள், 15 எள்ளுப் பேரன் பேத்திகள் உள்ளனர். (ற)

## வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவே

### அந்த நாட்டு தேர்தல் சபை தெரிவிப்பு

கராக்கஸ், ஜூன் 13
வெனிசுவேலாவின் ஜனாதிபதித் தேர்தலில் நிக்கலஸ் மதுரோவின் வெற்றி சரியானதே என்று அந்த நாட்டின் தேர் தல் சபை உறுதிப்படுத்தி யுள்ளது.
மில்லியன் கணக்கான வாக்குகளை மீள எண்ணியதன் பின்னரே தேர்தல் சபை இவ்வாறு அறிவித்துள்ளது.
தேர்தலில் முறை கேடுகள் இடம்பெற்றமை குறித்து எந்தவொரு ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்றும் தேர்தல் சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
1.5 வீத வாக்குகள் வித்தியாசத்தில் தேர்தலில் நிக்கலஸ் மதுரோ வெற்றிபெற்றிருந்தார். எனினும் தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றன என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டியதை அடுத்து வாக்குகள் மீள எண்ணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். பாஷையூ

# ஆலயப்

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் பிற்பகுதியில் பாஷையூர் பகுதியில் கிறிஸ்தவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆவணச் சான்றுகள் உண்டு. பாஷையூரில் அமைந்திருந்த ஒரு சிறு ஆலயம் பற்றிய குறிப்புக்கள் யாழ்.ஆயர் இல்லத்தில் உள்ள 1775 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதாக அருட்திரு பௌவுடல் கூறியுள்ளார் எனவும், 1825 ஆம் ஆண்டு அறிக்கையில் இலங்கையில் அமைந்திருந்த எல்லாக் கத்தோலிக்க ஆலயங்களின் பெயரும், அவற்றின் அமைவிடமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் அருட்திரு ஞா.பிலேந்திரன் அடிகளார் கூறுகிறார்.

கத்தோலிக்க மதத்தை தழுவி இருந்த போர்த்துக்கேயர், செபவழிபாடுகளை நடத்த ஒரு சிறு குடிலை பாஷையூரில் அமைத்தனர். அப்போதே அங்கு அந்தோனியார் சொரூபம் எழுந்தருளியது. போர்த்துக்கேயர் அந்தோனியார் மேல் மட்டற்ற நம்பிக்கையும் பக்தியும் கொண்டிருந்தனர். கடற்றொழில் செய்யும் பாஷையூர் மக்களும் போர்த்துக்கேயர் போலவே அந்தோனியார் மேல் அளவில்லாத பக்தி கொண்டார்கள்.

## ஆலய வ

சங்கிலியன் ஆட்சிக்காலத்தில் போத்துக்கேயரின் வழிபாட்டுக்கு பல இடையூறுகள் விளைந்தன. அவன் சிறு குடிலாக அமைந்திருந்த செப வழிபாட்டுக் கூடத்தை இடித்துத் தரைமட்டமாக்கினான். அங்கிருந்த அந்தோனியார் சொரூபத்தையும் எடுத்து எறிந்தான். எனவே அவனது இக்கொடிய செயலின் காரணமாக அங்கிருந்த மக்கள் அச்சத்தினால் இடம்பெயர்ந்து சென்றனர்.

1844-1845 களில் கோவா ஒற்ரோரியன் சபையைச் சேர்ந்த அருட்திரு யோக்கிம் கபிரியேல் எனும் குருவின் முயற்சியாலும் கிராம மக்களின் ஆதரவினாலும் முருகைக்கல்லினால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டது. 1850இல் அருட்திரு கசினிலி அடிகள் இந்த ஆலயத்தைப் பெரிதாகவும் அழகுறவும் அமைத்திருந்தார் என பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் 151ஆவது ஆண்டு விழா சிறப்பிதழில் அருட்திரு ஞா.பிலேந்திரன் குறிப்பிடுகிறார்.

இந்த ஆலயத்தின் அமைப்பாக ஆரம்பத்தில் இரு மருங்கிலும் பாலை மரங்களிலான தூண்கள் அமைக்கப்பட்டு அவற்றின் முகட்டுப் பாரம் தாங்குவதற்கு அமைப்பு செய்யப்பட வேண்டும் என இக்கிராம மக்கள் வற்புறுத்தினர். இதற்காக அவர்கள் கடல்கடந்து சென்று 30இற்கும் மேற்பட்ட பெரிய பாலை மரத்தூண்களை வத்தைகள் மூலம் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் தமது கிராமத்திற்கு கொண்டுவந்து சேர்த்தனர். ஆனால் விக்டர் டெலாண்டெஸ் அடிகளார் தூண்கள் அற்ற நவீன முறையிலான ஆலயத்தை அமைக்கும் முற்சியில் வெற்றி கண்டார். மக்களுடன் மிகவும் ஐக்கியமாகிய பாசமும்நேசமும் மிக்க அருட்திரு விக்டர் டெலாண்டெஸ் அடிகளாருக்கு நன்றி கூறும் வகையில் இக்கிராமத்தவர் அவரை பக்கமாக உள்ள கோயில் பகுதியில் அடக்கம் செய்து அவரது பெயரைப் பொறித்துள்ளனர். இன்றும் இதைக் காணக்கூடியதாக உள்ளது.

1935ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக இருந்த வண.து. எமில்யானுஸ் பிள்ளை அடிகளாரின் முயற்சியினால் ஆலயத்தின் முகப்பில் வானுயர இரண்டு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ திருவிழாச் சிறப்புற பிரா

பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்
குமார்
பேக் ஹவுஸ்
சென். செபஸ்தியான் வீதி, பாஷையூர்.

நெல்சன் வீடியோ டிஜிற்றல் அன் போட்டோ
அலங்கள் வடிவமைப்பாளர், அரங்கேற்றம், மேடை நேரடித் தொகுப்பு அஞ்சல் அனைத்து வேலைகளுக்கும்
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 678 8207

பெனா மலிர...
அழகுசாதனப்பொருள்கள், அன்பளிப்...
பாடசாலை உபகரணங்கள், கைறிங்...
பாவனைப் பொருள்கள், பலசரக்குப்...
நியாயமான விலையில் பெற்றுக்...
82, ஈச்சமோட்டை...
யாழ்ப்பாணம்.

கிருஸ்ணா எலக்ரி...
வயரிங், ரிப்பயர்ஸ்...
வீட்டின் இணைப்பு வேலை...
உபகரணங்களும் திருத்...
82, காங்கேசன்துறை வீதி, ஈச்சமோ...
யாழ்ப்பாணம்.
T.P.0775671948

சோனியா
ஜூவல்லறி
360/5, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
360/5, Main Street, Jaffna.

ஆகாஸ் பான்சி குட்ஸ்
தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான ஆடைகள் குறித்த நேர காலத்தில் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

மிக்கேல் வைத்தி...
பல்பொருள், மருந்துவகைகள், ...
சனையும் சிகிச்சையும், மேக்கப்...
அத்தனையும் ஒரே இடத்தில் பெற ந...
82, ஈச்சமோட்டை ...
யாழ்ப்பாணம். T.P.075 9...

டோனிகா நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
82, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 077 888 6191

செல்வம் நகைத் தொழிலகம்
22கரட் தங்க நகைகள் ஓடருக்குக் குறித்த காலத்துக்குள் செய்து தரப்படும்.
12, சென். அன்ரனிஸ், பாஷையூர் வீதி,
யாழ்ப்பாணம்.

சொருபா ரவல்ஸ் & ரூர்ஸ்
143, காங்கேசன்துறை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 772 6874
077 720 9686

P. Arooran
Manger
Operation & Logistic
Mobile: +94 777448133
TOSHIBA
North Link Engineering (Pvt) Ltd
#360/3 Main Street, Jaffna, Sri Lanka
T: +94 21 222 4099, +94 24 492 5006
F: +94 21 222 1838
www.nle2u.com
E: aroorannle@yahoo.com
Authorised Dealers & service providers of Northern Province
John Keells Office Automation (Pvt) Ltd.

வெள்ளைப்பிள்ளையார்
பல்பொருள் வாணிபம்
ஈச்சமோட்டை சந்தி,
யாழ்ப்பாணம்.

லிங்கம் கூல்பார்
சுவையான ஐஸ்கிறீம், ஐஸ்பழ வகைகள், பழரசங்கள் சுவையான உணவு வகைகள் ஓடருக்குக் குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
119, ... வீதி,
யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் இருந்து
ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ள...
Luxon Communication
L.D.D, Local, E.mail, Fax, liminating, Scanning, CD Writing, Printing, Browsing.
60, Eachchamoddai Road, Jaffna.
T.P. 021 222 9897, Fax : 021 222 6169
E.mail: luxoncom@yahoo.com
WESTERN UNION

SIN...
DEA...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூர் புனித அந்தோனியார்

# பெருவிழா – 13.06.2013



மணிக்கூட்டுக் கோபுரங்கள் உயர்த்தப்பட்டன. இதற்காகக் கொழும்பிருந்து வோக்கஸ் கொம்பனியினர் அழைக்கப்பட்டு அவர்களே இக்கட்டட வேலையைப் பூர்த்தி செய்தனர். ஆலயத்தின் பீடத்தின் பிற்பகுதியில் காணப்படும் சிங்காசனமானது வண்ணார்பண்ணை யைச் சேர்ந்த சரவணமுத்து என்னும் சிற்பக்கலை வல்லுநரால் 40 நாள்களில் வடி வமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலும் இவராலேயே 1950 ஆம் ஆண்டு இன்று காணப்படும் சிங்காரத் தேரும் வடிவமைக்கப்பட்டது. அத்துடன் ஆசந்தி சுற்றும் கூடு, அந்தோனியார் கூடு என்பனவும் வடிவமைக்கப்பட்டன. சிங்காசனத்தின் நடுவே வீற்றிருக்கும் பிரமாண்டமான அந்தோனியார் சொரூபம் உரோமில் இருந்து கொண்டு வரப்பட்டது ஆகும்.

கலையுருவாய்க் கவியுற விளங்கும் பலிபீடமும், கண்களையும் கருத்தையும் கவரும் அழகான வழிபாட்டுப் பகுதி, ஆரோமைய கட்டட அமைப்பைக் கொண்டு பூரண நிர் மாணம் பெற்ற இந்த ஆலயம், 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 30ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் இடம்பெற்ற பெரிய இடப்பெயர்வின் போது இடம்பெற்ற பெரிய இராணுவ நடவடிக்கையினால் வார்த்தையால் விவரிக்க முடியாத அளவுக்கு பெரும் சேதத்திற்கும் அழிப்புக்கும் உட்பட்டது. ஆலயத்தின் கூரை முற்றாக சேதம் அடைந்தது. ஆலயத்துக்கு ஏற்பட்ட முழுச்சேதமும் ரூபா 75 இலட்சம் என மதிப்பிடப்பட்டது.

## ஆலய வரலாறு

இடம்பெயர்ந்த மக்களின் ஒரு தொகுதியினர் 1996 ஆம் ஆண்டு தம் இல்லங்களுக்குத் திரும்பினர். சேதத்திற்கு உட்பட்ட ஆலயத் தின் நிலைகண்டு மனம் குமுறிய மக்கள் அவற்றை துப்புரவு செய்து அக்கோயிலுக்குள் வழிபாடுகளை நடத்தினர். பின்னர் ஆலயப் புனரமைப்பு வேலைகள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பமானது. குறைந்த அளவிலான குடும்பங் களே இக்காலப் பகுதியில் இங்கே வாழ்ந்தாலும் மக்கள் வாரத்தில் ஒருநாள் தம் கடல்வள உழைப்பை முழுமையாக ஆலயத்தின் புனரமைப்புச் செலவிற்காக மனம் உவந்துவழங் கினர். ஏனைய நிறுவனங்களில் பணியாற்றும் இப்பங்கு மக்களும் உதவி செய்த போதி லும் இவர்களது பங்களிப்பு குறிப்பிட்டு சொல்லக்கூடிய அளவு இல்லை. மிகவும் சொற்பமே. எனினும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இக்கிராம மக்கள் தம் ஆலய புனரமைப்பிற்குத் தாராள மனப்போக்குடன் தங்கள் பங்களிப்பைச் செய்தனர்.

இவ்வாறாகப் புனரமைக்கப்பட்ட ஆலயத்தின் பீடப்பகுதியில் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டுப் பார்ப்பதற்கு மிக அழகைக் கொடுத்து நிற்பதுடன் இந்தக் கிராம மக்களை இயற்கை அனர்த்தமாகிய இடியிலிருந்து காக்கும் முகமாக ஆலயத்து முகப்பில் இடிதாங்கியும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் தற்போது புலம்பெயர்ந்து வாழும் மக்க ளின் உதவியுடன் அலங்கார மின் விளக்குகள், மின் விசிறிகள் பொருத்தப்பட்ட துடன்ஆலய மின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெரிய ஜெனரேற்றர் ஒன்றும் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். பல்வேறு காலங்களில் பல்வேறு அமைப்பு முறைகளை கொண்டதாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு வருடமும் ஆனி மாதம் ஆலய வெளிப்புறத்துக்கு வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்படுகின்றது. இவ்வாறாக இந்தக் கிராம மக்களின் முக்கிய ஆன்மிகத் தலமாக இந்த ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை இருந்து வருகின்றமை சுட்டிக்காட்டக்கூடியதாகும்.

*****

## பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி

பாஷையூரில் கோயில் கொண்டெழுந்து கோடி அற்புதங்களைப் புரிந்துகொண்டு தேடி வருவோர்க்கெல்லாம் நிறையருளை நம் ஆண்டவராம் குழந்தையேசுவிடமிருந்து பெற்றுத் தருகின்ற புனித அந்தோனியாரின் திருவிழா ஆசிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.



மதபேதமின்றி மக்கள் அனைவரும் ஒரே குடும்பமாகக் கூடிவரும் ஒரே பதி பாஷையூர் அந்தோனியார் பதி. புனித வாழ்வை நோக்கி நடக்க ஒவ்வொருவரையும் தூண்டியெழுப்பும் உந்தித் தள்ளும் பதி யும் இதுவே. மனிதனின் மண்ணக வாழ்வு விண்ணக இலக்கு நோக்கி யதாக இருக்க வேண்டும் என்ற உணர்வைப் பதியவைக்கும் பதியும் இதுவே. அதனால் தான் யாழ். மண்ணில் வாழும் மக்களின் இதயக் கோயில்களில் இது நீங்கா இடம்பிடித்துள்ளது. மக்களின் விசுவாச வாழ்விற்கு விடிவெள்ளியாய் கலங்கரைத் தீபமாய் நின்று பல்லா யிரக்கணக்கான மக்களைக்கவர்ந்து கொண்ட அற்புதம் நிறைந்த இவ்வாலயம் புகழ்சிறந்து ஓங்குக!

பல்வேறு விதமான ஏக்கங்களோடும் கவலைகளோடும் கண்ணீரோடும் அந்தோனி யாரின் பரிந்துரை வேண்டிவரும் அனைவரும் வாழ்வில் இருளகன்று இறையருள் கண்ட டைந்து இதய அமைதிபெற்று இகமதில் மகிழ்வுடன் வாழ ஆசித்துநிற்கின்றேன்.

ஏழை எளிய மனிதர்களின் கண்ணீர் பெருமூச்சுக்கள் கையேந்தல்கள் புனிதரின் பரிந்துரையால் நிறைவு காணவும் இறை நம்பிக்கையின் வழிநின்று பிறரன்பில் நாட்டம் கொள்ளவும் புனிதரின் தூய வாழ்வை நாமும் பருகி இறையன்புக்குச் சாட்சிகளாக இருளில் ஒளிரும் நம்பிக்கையின் சுடர்த் தீபங்களாக வாழ்த்துகின்றேன்.

'புனிதர்களின் சமூக உறவை விசுவாசிக்கிறோம்'

அருட் பணி செ.றோய் பேடினன்

## தேரேறும் அந்தோனி இரங்குமையா!

பொங்கிப்பொழும் கடலலைகள் வந்து கொஞ்சும்
பாஷையூரில் கோயில் கொண்ட
பதுவை முத்தே! அந்தோனி! அழகா! வணங்கி
ஐயாவுன் அடியில் வீழ்ந்தோம்!
செங்கதிரோன் காணாத வானம் போல
சூழமைவால் இருளில் கிடந்து
சொல்லிமாளா வேதனையால் பிழியப் பட்டு
சுமை சுமந்து வாழ்கின் றோமே!
அங்கலாய்ப்பும் அழுகுரலும் இங்கு விலக
எளியவர்மேல் கருணை இலையோ!
அன்னைமடி மீதுதலை வைத்துக் கலங்கி
அழும் குழந்தை நாங்கள் அப்பா!
தங்கமணித் தேரமர்ந்து வலமே வந்து
திருமுகத்தை நோக்கும் அன்பர்
துயரகற்றிப் பெருவாழ்வு காண யேசு
தேவனிடம் பரிந்து அருள்வாய்!

- மு. சிங்கராயர்


...ற பிரார்த்திப்போர் ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

...ல்ரிமால்
...அன்பளிப்புப் பொருள்கள், ...கவறிங் நகைகள், அன்றா ...சரக்குப் பொருள்கள் யாவும் ...பெற்றுக்கொள்ளலாம்.
...வீதி,
...பாணம்.

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்), குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் (றோல்ஸ், வடை, கட்லட், சமோஷா) என்பவற்றை சுவையாக உண்டு மகிழ
ஹொட்டல் றொலெக்ஸ்




ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2808
360, காலி வீதி, கொழும்பு-06, தொ.பே: 2360462

பாஷையன் அரிவு மில்
சகல விதமான மரவகைகள் குறித்த தவணையில் பலகைகள், தீராந்திகள், தளபாட வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்.
48, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்
T.சுதாகரன்
T.P. 077 7987006





...லக்றிக்கல்ஸ்
...ல்ஸ் - வயர் லைனிங் சென்ரர் ...வயர் வேலைகளும் சகல மின் ...களும் திருத்திக்கொடுக்கப்படும் ...ச்சமோட்டை,
...பாணம்.
...5671948

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
கட்டடப் பொருள்கள் பெயின்ற் வகைகள் யாவும் நியாய விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.
இல. 147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்.பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான வலைகள், பொலித்தீன் நூல், கயிறு வகைகள், இயந்திரங்களுக்கான ஒயில் வகைகள், விநியோகம் செய்வதுடன் பிறிண்டிங், லெமனேற்றிங் போன்றவை யாவும் குறைந்த கட்டணத்துடன் செய்து தரப்படும்.
கடற்கரை வீதி, பாஷையூர்.
யாழ்ப்பாணம். T.P. 021 300 6982

...பத்தியாலயம்
...கைகள், வைத்திய ஆலோ... மேக்கப் பொருள்கள் ...பெற நாட வேண்டிய இடம்
...ட்டை வீதி,
T.P.075 980 1206

அனைவரது அபிமானத்தைப் பெற்ற
OMEX HOTEL
சுத்தம்,சுவை,தரம்,நியாய விலை
OMEX HOTEL
இல.372, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 9926.

பிருந்தா ஜூவல்லர்ஸ்
22 கரட் தங்க நகைகள் விரும்பியபடி டிசைன்களில் ஓடருக்குச் செய்து தரப்படும்.
301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மணியம் கபே
Maniam Cafe
சைவ உணவகம்
309, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SINTHU ELECTRICAL
DEALERS IN ELECTRICAL, ELECTRONIC AND HARDWARE ITEMS
360/7, Main Street, Jaffna.
T.P. 021 221 9059

TEMEY STORES
2nd CROSS STREET,
PASAIYOUR.

தேவி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

சரவணபவன்
அரைக்கும் ஆலை
31, பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டச் சந்தி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சோமசுந்தரம் சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வரியபுலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சபாரத்தினம் நேற்று (12.06.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான முருகேசு- சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ரதிதேவியின் அன்புக் கணவரும், சந்திரவதனா (நோர்வே), கிருதினி, நந்தவர்மன் (ஆஸ்திரேலியா), நந்தரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராசா, அன்னலிங்கம், மேகலா, அகல்யா ஆகியோரின் மாமனும், சுஜிவன், தனுஷன், சுவணீகா, அருஸ்கா, பிரனீத், தனுஷ்கா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நவரத்தினம் சுப்பிர மணியம் காலஞ்சென்ற செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நவமலர், இந்திரவர்மன் ஆகியோரின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
வரியபுலம் (38241) (10,6,3) 0213735238

# சாவகச்சேரி வர்த்தக நிலையங்களில் சோதனை

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது நகரசபை உத்தியோகத்தர்கள் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்த வருடத்துக்குரிய வியாபார உரிமம் பெற்றமைக்கான சான்றிதழ்கள் குறித்து நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் வருமானப் பரிசோதகர்கள் ஆகியோர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

நகரசபையால் வழங்கப்பட்ட வியாபார உரிமச் சான்றிதழ்களை காட்சிப்படுத்தாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் பத்மநாதன்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமா கவும் கொண்ட நாகலிங்கம் பத்மநாதன் நேற்று (12.06.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -பொன்னம்மா தம்பதியரின் மகனும், வனஜாவின் அன்புக் கணவரும், றோஜாறமனி, பவளமலர், உதயகுமார், உதயக்கரன், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இலத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.08, வில்வந்தெரு லேன், அரியாலை, யாழ்ப்பாணம். (38266)(16.14.9)
தகவல்: குடும்பத்தினர் (யாழ்ப்பாணம்)
T.P- 0774582530

# மரண அறிவித்தல்கள்

## கதிர்காமு இளையதம்பி



வேம்படி உடுத்துறையைப் பிறப்பிடமாகவும், விசுவமடு மேற்கு, விசுவமடுவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு இளையதம்பி நேற்றுமுன்தினம் (11.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி தெய்வமணியின் அன்புக் கணவரும், தனபாலசிங்கம் (E.T.J. ஹாட்வெயார், புதுக்குடியிருப்பு), திருமதி மு.தமிழ்ச்செல்வி (வேம்படி, உடுத்துறை), விஜயசிங்கம் (நிகல்யா வாணிபம், விசுவமடு, கிளிநொச்சி), கதிர்காமநாதன் (நோர்வே), அமிர்தநாதன் (டென்மார்க்), திருமதி சா.தெய்வரஞ்சிதம் (புன்னை நீராவி), திருமதி சி.தெய்வசோதி (நோர்வே), திருமதி இ.தெய்வராணி (சுவிஸ்), திருமதி ஜெ.தெய்வராஜனி (ஆசிரியர், மு/விசுவமடு ம.வி), ரகுநாதன் (லண்டன்), திருமதி உ.தெய்வமதி (லண்டன்), திருமதி நி.தெய்வசிறி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி த.புனிதவதி (புதுக்குடியிருப்பு), முத்துராஜா (T.M.R), திருமதி வி.இராஜலட்சுமி (கிளிநொச்சி), திருமதி க.இந்திராணி (நோர்வே), திருமதி வி.விஜயரஞ்சனா (டென்மார்க்), சாந்தகுமார் (புன்னைநீராவி), சிவசோதி (நோர்வே), இராஜகுமார் (சுவிஸ்), ஜெயபாலன் (ஆசிரியர், மு/விசுவமடு ம.வி), திருமதி இ.வசந்தி (லண்டன்), உதயன் (லண்டன்), நிர்மலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை விசுவமடுவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் 12ஆம் கட்டை, விசுவமடுவில் அமைந்துள்ள இந்துமயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P- 0770858197 (38268)(16.14.9) தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் சுருவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் நேற்று(12.06.2013)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அரியகுட்டி-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கயற்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அன்னமுத்து,சத்தியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பொன்னம்பலம், மனோறஞ்சிதம் ஆகியோரின் மைத்துனரும், சரசு, சிவஞானபிள்ளை,நாகநாதபிள்ளை ஆகியோரின் சகலனும்,சரவணபவன்(ஜேர்மனி), செல்வக்குமாரி, தனபாலசிங்கம் (ஜேர்மனி), கமலாம்பிகை,தவக்குமார்(சுவிஸ்), சர்வானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரமதி,சோமசுந்தரம், கங்காகுல தேவி, முருகதாஸ், சுகந்தி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷன், அனுஷியா, அரிகரன்,மயூரி, மதுஷானா, தேனுஜா, டிலக்சன்,டிலக்ஷி, அபிகிருஸ்ணா, அபிசாளினி,லதுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.06.2013)வியாழக்கிழமை மு.ப.10.00 மணியளவில் 32/2,பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுருவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

32/2, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 1817- 077 902 4365
(38245)(5.6.3)
தகவல்: குடும்பத்தினர்.

# வெற்றிவேலு சண்முகம்

(இளைப்பாறிய அதிபர்)



முல்லைத்தீவு, வட்டுவாகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் குருமன்காட்டை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வெற்றிவேலு சண்முகம் (இளைப்பாறிய அதிபர்) 10.06.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திருமதி மேரியோசேப்பின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற கிருபாறூபன் மற்றும் சுதர்ஜினி, பிரபாறூபன் (பொறியியலாளர் - அமெரிக்கா), சுபாஜினி (சட்டத்தரணி - லண்டன்) ஆகியோரின் பாச மிகு தந்தையும், லெஸ்லி ஜெயம் (C.T.B- வவு னியா), பிரணவச் செல்வி (பொறியியலாளர் - அமெரிக்கா), கொன்சாள்ஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், நிகாழினி, சஞ்சனா, அன்றியா (லண்டன்), சொபியா (அமெரிக்கா), அட்றியன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் முல்லைத்தீவு, வட்டுவாகலில் நாளை (14.06.2013) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுவாகல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொ.பே. [illegible]
[illegible]
(35269) (45.6.3)

வட்டுவாகல்,
முல்லைத்தீவு.

# சோமசேகரம் விஷ்ணுவன்

(தரம் 08 மாணவன்- கோப்பாய் நாவலர் மகா வித்தியாலயம்)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசேகரம் விஷ்ணுவன் நேற்றுமுன்தினம் (11.06.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சோமசேகரம் -நந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வனும், கம்சாயினியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-ருக்குமணி, இராமப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்புப் பேரனும், சிவகுமார் (புலோலி), செல்லத்துரை (ஆவரங்கால்), சுந்தரேசன் (கனடா), காலஞ்சென்றவர்களான முரளிதரன், வாசுதேவன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும், அமிர் தவல்லி(இந்தியா), சுந்தர வல்லி (ஆவரங்கால்), சவுந் தரவல்லி (பிரான்ஸ்), பத்மநாதன்(நீர்வேலி), யோகநாதன் (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மருமகனும், புஸ்பராணி(நீர்வேலி), பத்மாதேவி(ஜேர்மன்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலிவடக்கு,
நீர்வேலி.
தொடர்பு.- 077 9779782 (38264.14.17)
தகவல்:
குடும்பதினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி சுநேகா

நேசன்-சுகன்யா தம்பதியரின்
செல்வப் புதல்வி
சுநேகாவின் பிறந்த தினத்தை
முன்னிட்டு அவரது இல்லத்தில்
இன்று (13.06.2013)
மாலை 4.00 மணியளவில்
பிறந்தநாள் நிகழ்வு
வெகு சிறப்பாகக்
கொண்டாடப்படும்.

செல்விசீமா முருகமூர்த்தி ஆலய
அருள்பெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துபவர்கள்

அப்பா-அம்மா, அப்பப்பா-
அப்பம்மா, அம்மப்பா-
அம்மம்மா, மாமா அத்தை,
சித்தி-சித்தப்பா, பெரியம்மா-
பெரியப்பா, அக்கா, தம்பி,
தங்கை, மச்சாள், மச்சான்
திருகோணமலையில்
வசிக்கும் சித்தி, சித்தப்பா
குடும்பத்தினர்.

வெளிநாட்டில் வசிக்கும்:
அம்மப்பா-அம்மம்மா (ஜேர்மனி)
பெரியப்பா-பெரியம்மா, மாமா-மாமி,
மச்சாள், மச்சான் (அமெரிக்கா),
சித்தி, சித்தப்பா, அக்கா, தங்கை,
தம்பி, அண்ணா (லண்டன்)
சித்தப்பா (ஆஸ்திரேலியா)
சித்தப்பா, மாமா (டோகா)

அனைத்து உறவுகளும் வாழ்த்தி நிற்கின்றார்கள்.

கவுடாலையா,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
T.P: 0774632789

(37607)(10,6,3)


## சங்கிலியன் மன்ற ஆண்டு நிறைவையொட்டி போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 68 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு போட்டி கள் நடத் தப்படவுள்ளன. ஆண்களுக்கான மூன்று மைல் மரதன் ஓட்டம், சறுக்கு மரம் ஏறுதல், தலையணைச் சமர், மெதுவான சைக்கிள் ஓட்டம், முட்டி உடைத்தல், சைக்கிள் சங்கீதக் கதிரை, கயிறு இழுத்தல் (குழு 7பேர்) விநோத உடை (15 வயதுக்குக் கீழ்) மற்றும்

பெண்களுக்கான தேங்காய்த் துருவுதல், மெதுவான சைக்கிள் ஓட்டம், சங்கீத மேடை, கண்கட்டி யானைக்குக் கண் வைத்தல், காலில் பலூன் கட்டி உடைத்தல், தண்ணீர் போத்தல் தூக்குதல், கயிறு இழுத் தல், (குழு 7பேர்) பலூன் ஓட்டம் (இருவர்),தடை ஓட்டம்,(15 வயதுக்குக் கீழ் விநோத உடைபோன்ற பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன. முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளில் இலவசமாகப் பங்குபற்றலாம். போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக நிர்வாகத் திடம் ஒப்படைக்குமாறும் விண்ணப்பப்படிவங்களை சங்கிலியன் மன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## பெண்கள் சாரணிய சங்க பொதுக்கூட்டம்

கிளிநொச்சி, ஜூன் 13

வடக்கு மாகாண பெண்கள் சாரணிய சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக இலங்கை பெண்கள் சாரணிய சங்க பிரதம ஆணையாளர் திருமதி சாந்தா ஜெயலத் கலந்துகொள்வார். மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து பெண் சாரணிய வழிகாட்டுநர்களையும் கலந்து கொள்ளுமாறு வடமாகாண பெண்கள் சாரணிய ஆணையாளர் திருமதி ரூபா வசந்த குமார் அறிவித்துள்ளார். (வ-9)


சிவமயம்

சாவகச்சேரி பெருங்குளம் கல்வயல்

**ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய 2013 ஆம் ஆண்டு (விஜய வருடம்)**

## உயர் திருவிழா

14.06.2013 வெள்ளிக்கிழமை **கொடியேற்றம்** முற்பகல் 10.35 மணிக்கு
21.06.2013 வெள்ளிக்கிழமை **சப்பரம்** இரவு 09.00 மணிக்கு
22.06.2013 சனிக்கிழமை **இரதோற்சவம்** முற்பகல் 10.45 மணிக்கு
23.06.2013 ஞாயிற்றுக்கிழமை **தீர்த்தோற்சவம்** முற்பகல் 10.00 மணிக்கு
24.06.2013 திங்கட்கிழமை **பூங்காவனம்** மாலை 06.00 மணிக்கு

குறிப்பு: வழமைபோல் இவ்வாண்டும் ஆலயத்தின் அமுத சுரபி அன்னதான சபையினர் திருவிழாக் காலத்தில் **அன்னதானப் பெரும்பணியைச்** செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளனர் என்பதை அறியத்தருகின்றோம்.

தினமும் பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

ஆலய பிரதமகுரு குருத்துவ சேவையில் வெள்ளிவிழா காண இருக்கும்
பிரதிஷ்டா சிரோன்மணி
சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள்
(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)

பெருங்குளம்,
கல்வயல், சாவகச்சேரி.

(சி . 9880) (45.6.3)

பரிபாலன சபை.



Best Wishes

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின்
சிரேஷ்ட சங்கீத ஆசிரியை
திருமதி இரஞ்சனாதேவி சுப்பிரமணியம்
அவர்களின்

## மணிவிழாவும் சேவை நயப்பும்



**சேவை விவரங்கள்:**

முதல் நியமனம்
நு/தலவாக்கல தமிழ் மகா வித்தியாலயம்
03.08.1984 08.03.1987
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
09.03.1987 31.12.1988
நு/தலவாக்கல தமிழ் மகா வித்தியாலயம்
01.01.1989-06.03.1990
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
07.03.1990 12.06.2013

**கல்வித் தகைமை:**

பயிற்றப்பட்ட சங்கீத ஆசிரியர் (31.12.1988)
கலைப்பட்டதாரி (யாழ்.பல்கலைக்கழகம் 1997)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (NIE-2000)

திருமதி இ.சுப்பிரமணியம் அவர்களின் ஓய்வுக்காலம்
சிறப்பாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

(C/9300)(10.6.3)





## செருத்தனைப்பதி அருள்மிகு ஸ்ரீ ராஜ மகாமாரி அம்மன் திருக்கோயில் புளியங்கூடல் ஊர்காவற்துறை

## பெரும் திருவிழா – 2013



அம்பிகை அடியார்களே!

யாழ்ப்பாணத்திற்கு அணித்தாயுள்ள சப்த தீவுகளின் தலைத்தீவின் தலைப்பட்டினமான ஊர்காவற்துறைக்குத் தென்கிழக்குத் திசையில் மருதநிலமும், நெய்தல் நிலமும் அமைந்திருக்கும் புளியங்கூடல் கிராமத்தில் கருணை வடிவமாய்த் திகழ்ந்து காத்து இரட்சித்து வரும் நம் அன்னை ஸ்ரீ ராஜ மகாமாரி அம்பிகைக்கு நிகழும் மங்களகரமான ஸ்ரீ விஜய வருடம் வைகாசித் திங்கள் பெரும்விழா இன்று (13.06.2013) வியாழக்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி 14.06.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று (29.06.2013) சனிக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் 30.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் (01.07.2013) திங்கட்கிழமை பகல் சண்டேஸ்வரி உற்சவமும் மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

**குறிப்பு:- இக் காலங்களில் மெய்யடியார்கள் யாவரும் சைவசமய ஆசார சீலர்களாக தமிழ்ப்பண்பாட்டு உடையணிந்து வருகை தந்து அம்பிகையின் பேரருள் பெற்று பேரானந்தப் பெருவாழ்வினைப் பெற்றேகுமாறு மிகப் பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

**புளியங்கூடல், ஊர்காவற்துறை.** (38262)(2.6)

**அம்பிகையின் அரும்பணியின்கீழ் ஷ ஆலய அறங்காவலர்**
**து.சிவஞானச்செல்வம், செந்தூரன், மருதூரன்.**



# Shaam Medi Clinic
# ஷாம் மெடி கிளினிக்

மக்கள் நலன் கருதி நேற்று (12.06.2013)
புதன்கிழமை நெல்லியடியில்
**கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது**

(38025)(2.6)

வெளிநோயாளர் பிரிவு
காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை
மற்றும் ECG, இரத்த, சல ஆய்வுகூட பரிசோதனைகள்
சகல வசதிகளுடனும் இயங்கும்






இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக Dr.S.ரவிராஜ் அவர்களும்
(சத்திர சிகிச்சை நிபுணர், யாழ். போதனாவைத்தியசாலை)
கௌரவ விருந்தினராக Mr.K.பாலசுப்பிரமணியம் அவர்களும்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர்)
K.யோகேந்திரன் (பிரதேச செயலகக் கணக்காளர்)
அவர்களும் கலந்து நிகழ்வினைச் சிறப்பித்தனர்

**கல்லூரி வீதி, வதிரிச் சந்திக்கு அருகில், நெல்லியடி. T.P.021 320 7250**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13/06/2013

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### VACANCY

Applications will be received by me up to 12th July 2013 from suitably qualified candidates for the following post;

1. POST - PUBLIC HEALTH INSPECTOR, GRADE III
(University of Jaffna)

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors Examination conducted by the Department of Health.

| | |
|---|---|
| Salary Scale | : U-MT1 (IIIA) Rs. Rs.16535-7x155;10x185-19470 p.m |
| Selection | : By Interview |
| Age Limit | : Not more than 45 years<br>(*Note - Age limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and statutory bodies.) |

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of **" Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna"** together with a self- addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m in size.
Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk . Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic Section), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 12.07.2013**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applications routed through the Head of Department is not received.

REGISTRAR
12.06.2013

(C/9804)

## வீடுகள் வாடகைக்கு தேவை

இலங்கை மின்சாரசபை யாழ் ஒளி மின் உற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் பணிபுரியும் பொறியியலாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர், தொழிநுட்ப பொருத்துனர்கள் தங்குவதற்கு மூன்று வீடுகள் வாடகைக்கு தேவைப்படுகின்றன. மேலும் இந்த வீடுகள் அனைத்தும் சுன்னாகத்துக்கும் யாழ்ப்பாணத் துக்கும் இடையில் 12 km தூரத்துக்குள் உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும். மேற்படி விடயம் சம் பந்தமான கேள்விப் பத்திரங்களையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

முகவரி:
**பிரதம பொறியியலாளர்,**
**யாழ் ஒளி மின்நிலையம்,**
**இலங்கை மின்சாரசபை,சுன்னாகம்.**
தொலைபேசி:
இல.0217201602/2242247/48
தொலை நகல் இல. 0217201052

(C/9695) (10.6.3)

# கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட இலக்கிய போட்டி முடிவுகள்

வடமராட்சி, ஜூன் 13
கரவெட்டிப் பிரதேச செயலகம் பாடசாலை மற்றும் திறந்த மட்டத்தில் இலக்கியப் போட்டியை அண்மையில் நடத்தியது. இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் பெயர் விவரம் வருமாறு:-

**பாலர் பிரிவு**

**கையெழுத்துப் போட்டி-** மோ. இந்து, கு.சஞ்சிகா (நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை), கி.ஆதித்தன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி), ச.கௌசிகா (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை)

**கனிஷ்ட பிரிவு**

**கவிதைப் போட்டி-**
ம.கவியரசன், இ.சிவதர்சினி (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), அ.ரா.அபிசாமினி (நெல்லியடி மத்திய ம.வி.)

**கட்டுரைப் போட்டி-** இ.சிவதர்சினி (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), ச.அருள்ராஜி (நெல்லியடி மத்திய ம.வி.), க.தயானி (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி)

**கவிதைப் பாடல் -**
வி.ஜானகி, த.கோவிதவாணி, இ.யூடின்சிந்துயா (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)

**சிரேஷ்ட பிரிவு**

**கவிதைப் போட்டி-**
ம.கிருஷாந்தி (கரவெட்டிவடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), தெ.தர்மியா (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), தே.கலைமகள் (நெல்லியடி மத்திய ம.வி.)

**கட்டுரைப் போட்டி-**
இ.புஸ்பமதி (வதிரி ஸ்ரீபரமானந்தா முதியோர் இல்லப் பாடசாலை), இ.ஆர்த்தி, த.சிவனிதா (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

**கவிதைப் பாடல்-**
செ.சிந்துஜன், ச.சஞ்சிகாந் (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), க.சங்குலக்சுமி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

**திறந்த பிரிவு**

**பாடல் ஆக்கப் போட்டி** - சி.செகராசசிங்கம் (அல்வாய் தெற்கு), வ.பத்தினிப்பிள்ளை (துன்னாலை மத்தி), ம.தங்கலீலா (கரவெட்டி மத்தி)

**நாட்டார் கலை கற்றல் போட்டி-**
சி.செகராசசிங்கம் (அல்வாய் தெற்கு), ந.மயூரரூபன் (வல்வெட்டி), சி.ஜெய்சங்கர் (துன் னாலை மத்தி)

**விவரணப் போட்டி-**
வ.பத்தினிப்பிள்ளை (துன்னாலை மத்தி), சி.செகராசசிங்கம் (அல்வாய் தெற்கு), கெ.சுவர்ணலதா (கரவெட்டி மத்தி)

**சிறுகதைப் போட்டி-**
நா.ஆனந்தராணி (நெல்லியடி), ந.மயூரரூபன் (வல்வெட்டி), ந.ஆதவன் (அல்வாய்).

**கவிதைப் போட்டி-**
நா.ஆனந்தராணி (நெல்லியடி), சி.செகராசசிங்கம் (அல்வாய் தெற்கு), சி.ஜானகி (அல்வாய் கிழக்கு), த.பாலன் (இமையாணன்)

**சிறுவர் கதைப் போட்டி-** ந.மயூரரூபன் (வல்வெட்டி), நெ.அருள்நிதி (நெல்லியடி கிழக்கு), நா.ஆனந்தராணி (நெல்லியடி). (எ-8)


## விற்பனைக்கு

அரைக்கும் ஆலைக்குரிய அனைத்து உபகரணங்களும் விற்பனைக்குண்டு. (நெல் உடைக்கும், அரிசி, மிளகாய், கோப்பி அரைக்கும் இயந்திரங்கள்) ஆலைக்குரிய மின்மோட்டர், எஞ்சின் ஆகியவையும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 935 2493 (38261) (6.3.45)

## தவறிவிட்டது

10.06.2013அன்று திருநெல்வேலி பனிக்கர் லேன் சந்தியிலிருந்து நாவலர் Eye Clinic சென்றபோது பச்சை நிற ஓட்டோவில் ஒரு கைப்பை தவறவிடப்பட்டுள்ளது.அதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இந்த T.P. இலக்கத்துக்கு அறியத்தரவும். (9/9443) (3.5.6)

T.P.:075 977 8855, 011 232 0331

## English, Tamil Typing
## செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு 077 147 9485 (38240) (6.2.3)

## பணிநிலை வெற்றிடம்

* வரவேற்பாளர் (Receptionist)
* கணினி வடிவமைப்பாளர் (Typing ,Photoshop CoralDRAW) (அனுபவம் உள்ளவர்கள்)
* ஒப்புநோக்குநர் (Proof Reader)
* சிற்றூழியர்

(C/9687)

**நேர்முகத்தேர்வு :**
15.06.2013 சனிக்கிழமை
மு.ப 09.00 மணி - பி.ப 02.00 மணி வரை

ANDRA Digital Image
379/167, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0776622981, 021 222 8929

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் மொத்த வியாபார நிலையம் ஒன்றுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்குப் பணியாளர்கள் தேவை.

1) விற்பனை பிரதிநிதிகள் (DSR)
2) காசு சேகரிப்பாளர்கள் (Cash Collectors)
5) விநியோகப் பையன்கள் (Delivery Boys)
4) பகுதுவிளைஞர்கள் (பெண்கள் மட்டும்)

தகுதியானோர் எதிர்வரும் 20.06.2013 இற்கு முன்பாகத் தங்கள் சுயவிவரக்கோவையைக் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல 4456
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(38239)(6.2.3)

## தவறிவிட்டது

கணேசன் சசிக்குமார் என்பவருடைய கடவுச்சீட்டு (F4994089) (10.06.2013) திங்கட்கிழமை அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 933 1448,077 047 5820 (38244)(6.3.45)

## வீடு வளவு விற்பனைக்கு

மாகியப்பிட்டி,சண்டிலிப்பாயில்
5 பரப்பில் கிணற்றுடன் கூடிய
வீடு,வளவு உடன் விற்பனைக்குண்டு.
(சகல வசதிகளுடன் கூடிய வீடு)
(38238)(3.5.6)
தொடர்பு:
075 8372838, 077 477 1483

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள எமது வீட்டில் பணிபுரிய வீட்டுப் பணிப்பெண் தேவை. (நாங்கள் ஏஜன்சி அல்ல)

(38269)(3.5.6)
தொடர்பு:
075 510 5432,077 699 5626

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1985, மகம் 4ஆம் பாதம், செவ்வாய் குற்றமற்ற, பாவம் 25,5`2`` உயரமுடைய டாக்டர் மணமகளுக்கு பெற்றோர் டாக்டர் மணமகனை எதிர்பார்க்கின்றனர். (38237)(3.5.6)

தொடர்பு: 077 449 6754

## காணி விற்பனைக்கு

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்ட சுற்றுமதிலுடன் யாழ்.காரைநகர் வீதி,சங்கானையில் 32 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (38236)(3.5.6)

தொடர்பு:075 731 6139

## தவறிவிட்டது

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுபாஸ்கரன் என்பவருடைய தே.அ.அட்டை இல.901212473V), சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி,வரிப்பத்திரம் என்பன உரும்பிராய் சந்திக்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் கீழ்க் கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (38235)(3.5.6)

0778417793,0779487638


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மக்களை அவதானமாக இருக்க அறிவுறுத்துமாறு செயலகங்களுக்கு அவசர 'பக்ஸ்'

யாழ்ப்பாணம், ஜூன் 13
நாட்டில் ஏற்பட்டுள்ள இயற்கை இடரை கருத்தில் கொண்டு அனைத்துப் பிரதேச மக்களையும் அவதானமாக இருக்க அறிவுறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வானிலை அவதான நிலையம் அவசர 'பக்ஸ்' தகவல்களை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. புத்தளம் தொடக்கம் காலி, அம்பாந்தோட்டை வரையான பகுதிகளில் 30 தொடக்கம் 40 மைல் வேகத்தில் பலத்த காற்று வீசி வருகிறது.
இது 50 மைல் தொடக்கம் 70 வரை அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.
இதனால் மன்னார் தொடக்கம் பொத்துவில் வரையிலும் யாழ்ப்பாணம் தொடக்கம் திருகோணமலை வரையிலும் இவ்வாறான பலத்த காற்று வீசலாமென எதிர்பார்க்கப்படுகிறது.
இதனால் மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அவசர 'பக்ஸ்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

# வடக்கு- தெற்கு உள்ளூராட்சி உறுப்பினரிடையே பகிர்வு தேவை

## வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் வேண்டுகோள்


யாழ்ப்பாணம், ஜூன் 13
வடமாகாண உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களுக்கு தென் பகுதி உள்ளூராட்சி சபைகளின் செயற்பாடுகள் மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வடமாகாண ஆளுநர் வாய்ப்பு ஏற்படுத்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இதன் மூலம் சிறந்த நல்லாட்சிக்கான உள்ளூராட்சி சேவையை எமது மக்களுக்கு வழங்கலாம்.
இவ்வாறு வலி.தென்மேற்கு பிரதேசசபைஉறுப்பினர்சி.மகேந்திரன் தெரிவித்தார்.
உள்ளூராட்சித் தேர்தல் மூலம் வடக்கில் பல்வேறு கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி மக்கள் சேவைக்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்.
எனவே மக்கள் எதிர்பார்க்கும் சேவைகளை அவர் களுக்கு வழங்குவதற்கு உள்ளூ ராட்சி சபை உறுப்பினர்கள் போதிய தத்துவமுடையவர்கள்.
இந்த தத்துவங்களை மேலோங்கச் செய்வதற்கு எமக்கு ஏனைய மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் அனுபவங்கள் கிடைக்கப் பெற்றால் அவை பயனுள்ளதாக அமையும்.
வடக்கில் மக்களுக்கான சிறந்த சேவையை மேலும் மெருகூட்டி வழங்க ஏனைய தென்மாகாண உள்ளூராட்சிச் சபைகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயவும், அறிந்துகொள்ளவும் வடக்கு உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தவிசாளர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித்தர ஆளுநர் முன்வர வேண்டும்.
இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் ஏற் படுத்தித் தரவேண்டும் என உறுப்பினர் கேட்டுள்ளார். (வ-41)


நீண்டகாலமாகச் சேதமுற்றுக் கவனிப்பாரின்றிக் காணப்படும் எழுவைதீவு துறைமுகம்.(வ-7)

# காசநோய் தாக்கம்

## வடமராட்சியில் குறைவு

வடமராட்சி, ஜூன் 13
வடமராட்சிப் பிரதேசத்தில் காசநோய், தொழுநோய் என்பன வெகுவாகக் குறைவடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.
இதன் காரணமாக கடந்த சில வருடங்களாக காசநோய், தொழு நோய்களுக்கான உதவித் தொகைகளைப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து பெறுவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்துள்ளது.
வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவு, கரவெட்டி வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றின் ஊடாக தலா ஒரு காச நோயாளரும், தொழு நோயாளருமே உதவித் தொகைகளைப் பெற்று வருவதாக பிரதேச செயலகங்களின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. (வ-8)



# சிறுநீரக நோயாளிகளுக்கு உதவிக் கொடுப்பனவுகள்

## வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஏற்பாடு

அச்சுவேலி, ஜூன் 13
வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் வடக்கு மாகாணத்தில் சிறு நீரக நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி இருப்பவர்களுக்கு மாதாந்தம் 500 ரூபா வீதம் சிறுநீரக நோயாளிகளுக்கான கொடுப்பனவாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.
புதிய தீர்மானத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் நோய்த் தாக்கத்துக்கு உள்ளானவர்களிடம் இருந்து பிரதேச செயலர் மற்றும் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர்கள் விவரங்களை திரட்டுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாதாந்த உதவிக் கொடுப்பனவு வழங்கல் என்ற தலைப்பில் (02/2013) சுற்றறிக்கையை வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அனுப்பி வைத்துள்ளார்.

> கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலக சமூக சேவை அலுவலரிடம் படிவங்களை பெற்று உரிய முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்பட்ட நோயாளர்கள், மாற்றுச் சிறுநீரகம் பொருத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட நோயாளர்கள், சிறுநீரக நோய் நிலையில் 5 ஆவது நோய் நிலையில் இருக்கும் நோயாளர்கள் சிறு நீரக நோய் நிலையில 4 ஆவது நிலையில் இருக்கும் நோயாளர்கள், சிறுநீரகம் செயலிழந்த நோயாளர்கள் ஆகியோர் இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கலாம்.
இவர்களின் மாதாந்த வருமானம் நான்காயிரம் ரூபாவுக்கு குறைவானது என்பதை கிராம அலுவலர் உறுதிப்படுத்துவதுடன், நோயின் பாதிப்பு நிலை தொடர்பாக சிறுநீரக நோய் தொடர்பான வைத்திய நிபுணர், உடல் சம்பந்தப்பட்ட நோய் தொடர்பான வைத்திய நிபுணர், சிறுவர் நோய் தொடர்பான வைத்திய நிபுணர் ஆகியவர்களில் ஒருவர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.
கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலக சமூக சேவை அலுவலரிடம்படிவங்களைபெற்று உரிய முறையில் விண்ணப்பிக்க வேண்டும். நோயாளருக்கான கொடுப்பனவு மாதாந்தம் 500 ரூபா வீதம் சம்பந்தப்பட்டவர்கள் கொடுப்பனவை பெற விரும்பும் அஞ்சல் அலுவலகம் ஊடாக வழங்கப்படவுள்ளன. (வ-11)

# வலி. தென்மேற்கில் விரைவில் ஆயுள்வேத மத்திய மருந்தகம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்படும் வகையில் நவாலியில் ஆயுள்வேத மத்திய மருந்தகம் விரைவில் அமைக்கப்படவுள்ளது.
நவாலியில் உள்ள மூன்று கிராம அலுவலர் பிரிவு மக்களதும் மற்றும் இதர பிரதேச மக்களதும் நலன் கருதி இப்பிரத்தியேக ஆயுள்வேத மத்திய மருந்தகம் நவாலிதெற்கு ஹேமலதா ஞாபகர்த்த நிலையத்தில் ஆரம்பிக்கப்படும்.
இதற்கான நடவடிக்கையை வடமாகாண சுதேச வைத்தியத் துறை ஆயுள்வேத பணிப்பாளர் டாக்டர் திருமதி வ.துரைரட்ணம் மேற்கொண்டுள்ளார்.
வாரத்தில் இரு தினங்கள் மக்களுக்கு இலவச ஆயுள்வேத மருத்துவ சேவையை வழங்கும் நோக்குடன் இந்தச் சேவை இடம்பெறும்.
நவாலியில் இடம்பெறும் இலவச ஆயுள்வேத மத்திய மருந்தக சேவையில் டாக்டர் அன்பரசி கேதீஸ்வரன் பணியாற்றுவார்.
நவாலிக்கு ஆயுள்வேத மத்திய மருந்தகம் ஒன்றின் தேவை குறித்து வடமாகாண ஆயுள்வேத பணிப்பாளரின் கவனத்துக்கு நவாலி ஹேமலதா நிறுவனம் கொண்டு வந்ததையடுத்தே இந்தச் சேவை இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-41)



# சாவகச்சேரி வைத்தியசாலையில் 'கிளினிக்' விவரம் காட்சிக்கு

தென்மராட்சி, ஜூன் 12
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்படும் கிளினிக்குகள் தொடர்பான விவரம் பட்டியலிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
திங்கட் கிழமை: நிறைகுறைவான குழந்தை, கர்ப்பவதிகள் கிளினிக் காலை 8 மணி தொடக்கம் 12 மணிவரையும் காது, மூக்கு, தொண்டை கிளினிக் பி.ப.ஒரு மணி தொடக்கம் 4 மணி வரையும்.
செவ்வாய்க்கிழமை: (ஸ்கானிங்)
[illegible]-காலை 8-12
-பி.ப 1-4 மணி வரை
புதன்கிழமை:(கண்)
உளநோய், புற்றுநோய் (2ஆவது புதன்), குடும்பக் கட்டுப்பாடு, மூட்டுவாதம் ஆகிய கிளினிக்-காலை 8-12 மணிவரை
வியாழக்கிழமை:(நீரிழிவு)
காலை 8-12 மணி வரை.
வெள்ளிக்கிழமை:(குழந்தைகள் சுகவாழ்வு)
காசநோய் (3 ஆவது வெள்ளி), பெண் நோயியல்-காலை 8-12 மணி வரை, பி.ப.ஒரு மணி தொடக்கம் 4 மணி வரை,
சனிக்கிழமை:(தோல்)
முதியோர் கிளினிக், குழந்தைகள் சுகவாழ்வு-காலை 8-12 மணி வரை. (வ-9)

# வாகனம் மோதி குடும்பஸ்தரின் கால் முறிந்தது

தென்மராட்சி, ஜூன் 13
வீதியில் சைக்கிளில் சென்றவரை வேகமாக வந்த வாகனம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவரின் காலில் முறிவு ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பகுதியில் இடம்பெற்றது.
கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமணங்குளம் பாலத்தை புனரமைக்கக் கோரிக்கை

வவுனியா, ஜூன் 13
வவுனியா சமணங்குளம் பாலத்தை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மிகவும் பழைமை வாய்ந்த இந்தப் பாலத்தின் ஊடாக மழை காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர்.
உயரம் போதாத நிலையில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளதால் பெரு மழைக்கு நீர் பாலத்துக்கு மேலாகவும் வழிந்தோடுவதால் இதனூடான போக்குவரத்து தடைப்படுகிறது.
சமணங்குளம் பாடசாலை, பராசக்தி வித்தியாலயம், கோமரங்குளம் பாடசாலை உட்படப் பல்வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இந்தப் பாலத்தைப் பயன்படுத்துகின்றனர். வவுனியா பொது வைத்தியசாலை, வவுனியா நகரசபை, வவுனியா பொதுச் சந்தை, கச்சேரி, பிரதேச செயலகத்துக்கு செல்வதற்கும் இந்தப் பாலத்தைப் பயன்படுத்துகின்றனர்.
எனவே அடுத்து வரும் மழை காலத்திற்கு முன்பாக இந்தப் பாலத்தை புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-402)

## துணுக்காய் கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி வேண்டும்

அக்கராயன், ஜூன் 13
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கிராமங்களுக்குச் செல்வதற்கு பஸ் வசதிகள் இல்லாமையால் அந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
20 கிராம சேவகர் அலுவலக பிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேச செயலர் பிரிவில் ஓரிரு கிராமங்களைத் தவிர பல கிராமங்களுக்குச் செல்வதற்கு போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதனால் இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் பல தடவைகள் விடுக்கப்பட்டு வரும் நிலையில் அந்த முயற்சியும் கைகூடவில்லை.
போக்குவரத்து வசதியின்மை காரணமாக மாணவர்கள் ஒழுங்காக பாடசாலைக்கு சமுகம் கொடுப்பதில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து செயற்படுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-18)

## 7.5 லீற்றர் கசிப்புக்கு அபராதம் ஒரு லட்சம்

கிளிநொச்சி பளைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனைகளில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது.
7.5 லீற்றர் கசிப்பையும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களையும் உடைமையில் வைத்திருந்த பெண் ஒருவர் கடந்த 9ஆம் திகதி பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்றில் பதில் நீதிவான் சி.சிவபாலசுப்பிரமணியத்திடம் முற்படுத்தப்பட்டார்.
குறித்த பெண் தனது உடைமையில் 7.5 லீற்றர் கசிப்பை வைத்திருந்தமைக்கு எழுபத்தி ஐயாயிரம் ரூபாவும், உபகரணம் வைத்திருந்தமைக்கு இருபத்தி ஐயாயிரம் ரூபாவும் என ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. (ஜ-6)

# வியாபாரிகள் போராட்டம்

### மாற்றிடம் வழங்கக் கோரி வவுனியா நகரசபைக்கு முன்பாக நேற்று




வவுனியா நகரசபைக்கு முன்பாக உள்ள சந்தை வியாபாரிகள் தமக்கு பெரு நட்டம் ஏற்பட்டுள்ளதால் வியாபார நடவடிக்கைகளுக்காக தமக்கு மாற்றிடம் வழங்கக்கோரி நகரசபைக்கு முன்பாக நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா நடைபாதை வியாபாரிகளுக்கு என புதிய அங்காடி விற்பனை நிலையம் கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் நகரசபைக்கு முன்பாக அமைக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது.
அவ்வாறு வழங்கப்பட்ட இடத்தில் தற்போது 40 வியாபாரிகள் தொழில் செய்து வருகின்றனர். இந்த நிலையில் தமக்கு நாள் ஒன்றுக்கு 200 ரூபா கூட வியாபாரம் நடப்பதில்லை என்றும் எனவே தமது தொழில் நடவடிக்கைகளுக்கு மாற்றிடம் வழங்க வேண்டும் என்றும் கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.
தமது பிரச்சினை தொடர்பாக பலமுறை நகரசபை நிர்வாகத்துக்கு தெரியப்படுத்திய போதும் எந்தவிதமான பதிலும் கிடைக்காததாலேயே தாம் இந்த உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதாக அங்காடி வியாபாரிகள் தெரிவித்தனர்.
போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நகரசபையே 'ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே', 'எம்மையும் வாழவிடுங்கள்', 'எமக்கு மாற்றிடம் வழங்கு' போன்ற வாசகங்களை பொறிக்கப்பட்ட அட்டைகளை ஏந்தியிருந்தனர்.
வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா நகர சபை பதில் தலைவர் எம்.எம். ரதன், ஆளுநரின் செயலர் முகைதீன், வவுனியா நகர சபைச் செயலாளர் க.சத்தியசீலன் மற்றும் நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்து வியாபாரிகளிடம் கலந்துரையாடினர்.
இதன்போது எதிர்வரும் புதன்கிழமை இடம்பெறவுள்ள நகரசபைக் கூட்டத்தில் கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்பதாக நகரசபை நிர்வாகம் மற்றும் சபை உறுப்பினர்களால் உறுதிமொழியும் வழங்கப்பட்டது. இதனை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ஜ)



வவுனியா நகரில் குரங்குகள் அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளன. நிறுத்திவைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் ஒன்றின் மீது பாய்ந்து அதன் கண்ணாடியை உடைத்த குரங்கு அதை நிலத்தில் புரட்டுவதை காணலாம். (ஜ-421)

### சாரதி லைசென்ஸ்; மாற்றுவலுவுள்ளோருக்கு 21 இல் மருத்துவ சோதனை

கிளிநொச்சி, ஜூன் 13
கிளிநொச்சி மாவட்டத்தில் வாகனம் செலுத்தக் கூடிய மாற்று வலுவுள்ளோருக்கான சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ பரிசோதனை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.
கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் பிரிவில் பதிவு செய்த மாற்றுவலுவுள்ளோரை அன்றைய தினம் கலந்து கொள்ளுமாறு மாவட்ட சமூக சேவைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஒ-9)

# அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் மாணவர்கள் கல்விக்கு அடித்தளம்

### கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், ஜூன் 13
கிளிநொச்சி மத்திய கல்லூரி இடம்பெயர்ந்து இயங்கிய இடத்தில் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் இயங்கத் தொடங்கி இருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.
அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் முதலாவது புதிய கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றுள்ளது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:



அக்கராயன் மண்ணில் ஆரம்ப மாணவர்களுக்கு அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் தனது கல்விப் பணியை தனது புதிய இடத்தில் தொடங்கியுள்ளது.
இந்தப் பாடசாலைக்குரிய வளங்களை எதிர்காலத்தில் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை எடுப்போம்.
கிளிநொச்சி மத்திய கல்லூரி 1996 இல் இடம்பெயர்ந்து அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் அக்கராயன் மண்ணில் தனது பணியைத் தொடங்கி இருப்பது மகிழ்ச்சிக்குரியது- என்றார்.
நிகழ்வில் வரவேற்புரையை பாடசாலையின் உப அதிபர் திருமதி சிவரஞ்சினி கணேசானந்தன்னும் கருத்துரைகளை அக்கராயன் ம.வி. முதல்வர் க.மதுரநாயகம் புதுமுறிப்பு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலய முதல்வர் த.கண்ணபிரான், கரைச்சிக் கோட்டக் கல்வி அலுவலர் அ.அமிர்தலிங்கம், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் நா.சபாநாயகம், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ந.கிருஸ்ணகுமார், கிளிநொச்சி வலயப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் நிகழ்த்தினர். (எ-18)

# திட்டமிட்ட காடழிப்பும் வீதி அமைப்பும் எதற்கு?

### பம்பைமடு மக்கள் கேள்வி

வவுனியா, ஜூன் 13
வவுனியா பம்பைமடுவில் குடியேற்ற திட்டத்துக்கான மண் வீதி விரைவாக அமைக்கப்பட்டு வருவது குறித்து மக்கள் மத்தியில் விமர்சனம் எழுந்துள்ளது.
பம்பைமடு பகுதியில் முஸ்லிம் குடியேற்றத்திட்டம் மேற்கொள்வதற்கு வசதியாக காடழிப்பு நடவடிக்கையும் அதனைத் தொடர்ந்து குடியேற்றத்துக்கு ஏற்ற வீதி போக்குவரத்து வசதியை ஏற்படுத்தும் முகமாக மன்னார் வீதியைத் தொடுக்கும் வகையில் சுமார் 2 கிலோ மீற்றர் வீதி முதற்கட்டமாக அமைக்கப்பட்டு வருகிறது.
இந்த குடியேற்றத் திட்டத்துக்கு அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆதரவு அளித்து வரும் நிலையில் அவரின் ஏற்பாட்டில் இந்த வீதி வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.
போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் இருக்கும் போது இந்த வீதி அமைக்கப்படுவதன் அவசரம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் மக்கள் மத்தியில் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-402)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# '13' ஆவது திருத்த நாடகத்துக்கு ஜனாதிபதி செயலகமே திரைக்கதை

## சம்பிக்கவும் விமலும் போட்டிபோட்டுக்கொண்டு நடிப்பு- ஐ.தே.க.

கொழும்பு,ஜூன் 13

''13ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போட்டிபோட்டுக்கொண்டு குரல் எழுப்பும் அமைச்சர்களான விமல், சம்பிக்க ஆகியோரின் நாடகத்துக்கு ஜனாதிபதி செயலகமே திரைக்கதை எழுதுகிறது. இன்று 13ஆவது திருத்தம் ஒரு பிரச்சினை அல்ல. அதைவிடவும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு, இராஜகிரியவில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கவேண்டாம் என்று தொடர்ந்து குரல் கொடுத்துவரும் அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோருக்கு இன்று நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகள் புலப்படவில்லை.

மின்கட்டண அதிகரிப்பு, சட்டவிரோதச் செயல்கள், வாழ்க்கைச் செலவு உயர்வு உள்ளிட்ட பல பிரச்சினைகள் இருக்க, இந்த விமலுக்கும், சம்பிக்கவுக்கும் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் மட்டுமே பிரச்சினையாகத் தென்படுகிறதா?

ஒரு பக்கம் பொலிஸ், காணி அதி

**பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க வேண்டாம் என கோரி வரும் நிலையில், மறுபுறம் அரசு புதிய இரண்டு திருத்தங்களை முன்வைத்திருக்கிறது.**



காரங்களை வழங்கவேண்டாம் என இவ்விரு அமைச்சர்களும் போராட்டம் நடத்திவரும் நிலையில், மறுபுறம் அரசு புதிய இரண்டு திருத்தங்களை முன்வைத்திருக்கிறது. இப்படியான புரிந்துணர்வற்ற பிரச்சினைகள் இந்த அரசுக்குள்ளே காணப்படுகின்றன. - என்றார். (ச)

## அரசியல் கலாசாரத்தை உடன் மாற்றவேண்டும்

### பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 13

அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டும் என்று ஜனநாயக கட்சித் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்தார். பதுளை சேனநாயக்க மைதானத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு வருகிறது. பெண்கள் துஷ்பிரயோகம் தொடர்பில் அனைத்து இடங்களிலும் இருந்து எமக்குத் தகவல்கள் கிடைக்கின்றன.

கொலை மற்றும் சட்டத்தை மீறும் நடவடிக்கை அனைத்துக்கும் நாட்டை நிர்வகிப்பவர்களோடு இருப்பவர்களே பொறுப்புக் கூறவேண்டும்.

எனவே தற்போதைய அரசியல் கலாசாரத்தை மாற்றவேண்டும். -என்றார். (ச)

## தாய்லாந்திலிருந்து வந்த இலங்கை வர்த்தகர் கைது

கொழும்பு,ஜூன் 13

தாய்லாந்தில் இருந்து இலங்கை வந்த வர்த்தகர் ஒருவர் மத்தல விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் தங்க நகைகள் மற்றும் இரத்தினக்கற்களை எடுத்து வந்த நிலையியேயே அவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்து, பாங்கொக்கிலிருந்து புதன்கிழமை இலங்கை வந்த யூ.எல் 827 என்ற விமானத்தில் பயணித்த கொழும்பு வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## முதலீட்டுக்கு சிறந்தது இலங்கை



தென்கொரிய வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவுடன் பொருளாரா அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உரையாடுகிறார்

கொழும்பு,ஜூன் 13

முதலீட்டுக்கான சிறந்த நாடாக இலங்கை திகழ்கின்றது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வதற்காக தென்கொரிய வர்த்தகப் பிரதிநிதிகள் குழு இலங்கைக்கு வந்துள்ளது.

இதத் தூதுக்குழுவினர் செவ்வாய்க்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அவரது அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர். (ச)

## என் மீதான குற்றத்தை நிரூபித்தால் அமைச்சுப் பதவியை துறப்பேன்

### மீன்பிடித்துறை அமைச்சு மறுப்பது ஆச்சரியம் என்கிறார் மஹிந்த அமரவீர

கொழும்பு,ஜூன் 13

சீரற்ற காலநிலையால் இடம்பெற்ற உயிரிழப்புகளுக்கு தமது அமைச்சுதான் காரணம் என நிரூபிக்கப்பட்டால், தாம் அமைச்சுப் பதவியை துறப்பார் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வானிலை அவதான நிலையத்தின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வானிலை அவதான நிலையம் உரிய நேரத்தில் மீன்பிடித்துறையமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் தொலைநகலூடாக காலநிலை மாற்றம் குறித்த அறிவூட்டலை அனுப்பி வைத்துள்ளமை டெலிகொம் நிறுவனத்துக்கூடாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டபோதிலும், மீன் பிடித்துறையமைச்சு இதனை மறுப்பது ஆச்சரியமானது என்று அவர் தெரிவித்தார். (ச)



## பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து 13 ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும்

### இந்தியாவின் அழுத்தமே வடக்குத் தேர்தலை நடத்த காரணம் என்கிறது பொது பல சேனா

கொழும்பு,ஜூன் 13

பௌத்த அமைப்புக்கள் ஒன்றிணைந்து அரசமைப்பின் 13 திருத்தச் சட்ட வரைவை இல்லாதொழித்து, வரலாற்று ரீதியான பதிவை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு பொது பல சேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

**“ வடக்குத் தேர்தலை நடத்த நாம் அனுமதிக்க மாட்டோம்.**



தேசிய பௌத்த சம்மேளன தலைமை அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாகாணசபை முறைமைகளை ரத்துச் செய்வதற்கான தேசிய அமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த தாவது:

வடமாகாண சபை தேர்தல் நடத்தத் திட்டமிட்ட பின்னர் தான் 13 ஆம் சட்ட வரைவு தேவையா? இல்லையா? என்ற நிலை உருவாகியுள்ளது. இது இந்தியாவினால் இலங்கை மீது திணிக்கப்பட்டது.

அது ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் நியாயமற்ற முறையிலும் சட்டவிரோதமாகவும் கொண்டு வரப்பட்டது. மக்கள் ஐக்கியமாக வாழ வேண்டும் என்ற நோக்கில் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை தனது இலக்கை அடையவில்லை. எனவே வடமாகாண சபைத் தேர்தலை நடத்தக் காரணம் இந்தியாவின் அழுத்தமும் சர்வதேசத்தின் எதிர்ப்புமே ஆகும்.

தேர்தலை நடத்த நாம் விடமாட்டோம். இது தொடர்பில் மக்களின் பூரண ஆதரவை எதிர்பார்க்கின்றோம்- என்றார்.

இந்தக் கூட்டத்தில் பொதுபலசேனா, சிங்கள ராவய, தேசிய பௌத்த சம்மேளன அமைப்பு உட்பட 29 அமைப்புகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

## சீரற்ற காலநிலை தொடரும் திணைக்களம் எச்சரிக்கை

கொழும்பு,ஜூன் 13

வளிமண்டலத்தில் காணப்படுகின்ற குழப்பநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகள் முகில் கூட்டங்களால் மூடப்பட்டு காணப்படுவதுடன், மழையுடன் கூடிய காலநிலை தொடரும் சாத்தியம் உள்ளது. அதனால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிழக்கு, மத்திய, ஊவா, வடமத்திய மாகாணங்களில் கூடிய மழை வீழ்ச்சியும் இடையிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழையும் பெய்யும். இடியுடன் கூடிய மழையின் போது கடும் காற்று வீசக்கூடும். இடி மின்னலால் ஏற்படும் சேதங்களைக் குறைத்துக்கொள்வதற்கு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை கடைக்கொள்ள வேண்டும்.

கிழக்கு, தென்கிழக்கு கரையோரப் பகுதிகளுக்கு அப்பாற்பட்ட கடற்பிரதேசங்களிலில் இடையிடையே இடியுடன் கூடிய மழை பெய்வதுடன் [illegible] காணப்படும் [illegible] திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## மீனவர்கள் உயிரிழப்புக்கு திணைக்களமே பொறுப்பு

### மீன்பிடி அமைச்சு திட்டவட்டம்

கொழும்பு,ஜூன் 13

சீரற்ற காலநிலையினால் உயிரிழந்த மீனவர்களின் உயிரிழப்புக்கு வளிமண்டலவியல் திணைக்களமே பொறுப்புக் கூற வேண்டும் என்று கடற்றொழில் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:



காலநிலை குறித்து மீனவர்கள் அறிந்திருப்பது அவசியம். மீனவர்கள் இந்தக் காலப்பகுதியில் உரிய பாதுகாப்புகளுடன் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். கடலுக்குச் சென்ற மீனவர்கள் உயிர்காப்பு அங்கிகளை அணிந்திருக்கவில்லை.

அதுவும் அவர்களின் உயிரிழப்புக்குக் காரணமாக அமைந்துள்ளது. மீனவர்கள் கடலுக்குச் செல்வதாயின் பாதுகாப்பு அங்கிகள் அணிவதை இந்த ஆண்டில் கட்டாயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மீனவர்கள் உயிரிழந்தமை குறித்து எவரையும் குறை சொல்வது தகுந்ததல்ல. எனினும் தக்க தருணத்தில் எச்சரிக்கை அறிவிப்புகளை விடுக்கத்தவறியமை வளிமண்டலவியல் திணைக்களத்தின் தவறாகும். .-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அல்லாடும் அரசுசார் நிறுவனங்கள் இந்தப் போக்கில் போனால்.....?

★ இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர், கடந்த அறுபத்தைந்து ஆண்டுகளில், முதல் தடவையாக நாட்டின் ஒட்டுமொத்த தேசிய உற்பத்தி (Gross National Product), முன்னெப்போதும் இல்லாதவாறு பதின்மூன்று சதவீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

★ அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருமானம் கீழிறங்கிச் செல்ல, தொடர்ந்து குறைந்து செல்ல, அடிமட்ட-கீழ்மட்ட-நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகள் உச்ச நிலையை எய்துகின்றன.

-அதனால் வசதிபடைத்தோருக்கும் வசதிகுறைந்தோருக்கும் இடையிலான வெளி மிக மிக அகன்று வருகிறது.

★ அதனைக் கருத்தில் கொண்டு, வருமான வரிச் சட்டத்தையும், அது தொடர்பிலான கொள்கையையும், அரசின் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது தொடர்பாகவும் அரசாங்கம் மீள்பரிசீலனை செய்ய வேண்டும்.

★ அத்தோடு, அரசின் வருவாயை, ஒட்டுமொத்த தேசிய உற்பத்தியை இருபது சதவீதம் உயர்த்தியாக வேண்டும்.

நிதி அமைச்சின் 2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை வெளியிடுவது தொடர்பாக கொழும்பில், பிரிஸ்ரல் வீதியில் அமைந்துள்ள மில்போ மண்டபத்தில், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டிருக்கிறார், அரசாங்க பொது நிறுவனங்களைக் கண்காணிக்கும் (COPE) குழுவின் தலைவரான அரசாங்க அமைச்சர் டியூ குணசேகரா.

அதேவேளை, 2012 ஆம் நிதியாண்டில் ஐம்பத்தைந்து அரச நிறுவனங்களில் கண்டறியப்பட்ட படுநட்டம் சுமார் 20,000 கோடி ரூபா என்று நிதியமைச்சின்2012 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்பாடா! இந்த எண்ணிக்கை எமது நாட்டு அரசுகளின் வரவு-செலவுத் திட்டத்தில் காணப்படும் செலவுத் தொகை என்று கொள்வது தப்பன்று.

235 அரச வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகளையும் இலாப நட்டங்களையும் குழு பரிசீலனை செய்ததாகவும், நவீன விதிமுறைகளுக்கு அமைவாகவும் முறைப்படியும் கணக்கு அறிக்கைகளை கையாளும் ஆற்றல் கொண்டவர்கள் பணியில் அமர்த்தப்படவில்லை என்பதனையும் அமைச்சர் டியூ குணசேகரா சுட்டிக்காட்டி விசனம் தெரிவித்தார்.

அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு அனைத்துலக நியமங்களுக்கேற்ப கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவ்வாறு செய்யத் தவறினால், அரச வர்த்தகத்துறை முன்னோக்கிச் செல்ல முடியாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடத்துக்கான ''கோப்'' இன் பரிசீலனையின் போது, 41 நிறுவனங்களின் கணக்கு அறிக்கைகளின் அடிப்படையில் அவை பெரும் நட்டத்தில் இயங்குவதாகக் கண்டறியப்பட்டதாகவும் அமைச்சர் கவலை வெளியிட்டார்.

அவற்றுள் குறிப்பிட்ட நான்கு நிறுவனங்களுக்கு மட்டுமே 95 சதவீதம் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதனையும், பெயர் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் அமைச்சர்-''கோப்'' பின் தலைவர்.

நாடாளுமன்றம் கூடாத நாள்களிலும் சபாநாயகரின் அனுமதியுடன் ''கோப்'' பின் கூட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று நேற்றல்ல, மிக நீண்ட காலமாகவே, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச சார்பு வர்த்தக நிலையங்களுக்கு அவ்வப்போது ஆட்சியில் அமரும் அரசுகளுக்கு விசுவாசமாக உள்ளவர்களே உயரதிகாரிகளாக - தலைவர்களாக நியமிக்கப்படுவது ஒரு ''நடைமுறை விதி'' யாக உள்ளது.

மக்களின் வரிப் பணம் எவ்விதம் வீணாக்கப்படுகிறது (சூறையாடப்படுகிறது) என்பதனை ''கோப்'' அறிக்கை ஆழமாகத் தொட்டுக் காட்டுகிறது.

தமக்குச் சேவை செய்வதற்காக என்று மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின்-பதவியில் உள்ள அரசுகளின் ஆதரவாளர்கள், அல்லது அடிவருடிகள் மக்களின் பணத்தை எவ்வாறு வீணாக்குகிறார்கள், தமக்காக்குகிறார்கள் என்பது ''கோப்'' பின் அறிக்கை மூலம் வெளிப்பட்டுள்ளது.

தனியாள் ஒருவரின் அல்லது ஒரு சிலரின் திறமை இன்மையால், அல்லது நாகரிகமான சூறையாடலால் மக்களின் வரிப்பணம் கரியாகிறது என்பது கவலைக்குரியதாகும்.

தட்டிக்கேட்க ஆள் இல்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற போக்குத் தொடர்ந்தால் எங்கள் நாடு (இந்த யுகம் முடிந்தாலும்) மக்கள் நலன்நாடிய அபிவிருத்தியை எட்டிப் பிடிக்கவும் முடியாதே....!

# பிரச்சினை ஏற்பட வாய்ப்பளிக்காதீர்கள்

மில்லர்

விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் நடந்த மூன்று தசாப்தகாலப் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் இன்றும் தமிழர் பகுதிகளில் அரச படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். போர்க் காலங்களில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகள் எப்படி இருந்ததோ அதே போல் தான் இப்பொழுது நிலைமை இருக்கிறது.

ஆனையிறவு, ஓமந்தை போன்ற இடங்களில் படையினரின் சோதனை நடவடிக்கை ஆரம்ப நாள்களை நினைக்கத் தூண்டுகின்றது. படையினர் குவிந்திருக்கும் தமிழர் பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கே பாதுகாப்பு இல்லை என்றால் படையினருக்கு இங்கு என்ன வேலை என்று கேட்கின்றனர். மூன்று தசாப்தகால போரில் உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்து அன்றாட வாழ்வை நகர்த்த முடியாமல் கஷ்டப்படும் தமிழர்களின் வாழ்வில் படையினரின் தலையீடும் மேலும் துன்பத்தை ஏற்படுத்தி வருகிறது.

போர் முடிவடைந்து விட்டதால் தமிழர் பிரதேசங்களில் இருந்து படையினரை அகற்றுமாறு பல அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தும் இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மீளக் குடியமர்த்தப்பட்ட மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான உதவிகளை அரசு செய்யாமல் தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்துகிறது. படையினர் பயன்படுத்தும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்காமல் இருக்கின்றன. இப்படியாக தமிழ் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. இணக்க அரசியல் மூலமே தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வுபெற இயலும் என்று வாதிடும் அமைச்சர் ஒருவர் இருக்கிறார். கொடுத்தால் வாங்கிப் பழக வேண்டும் என்று அவர் சொல்கிறார். முதலில் அரசு தமிழ் மக்களுக்கு பெரிதாக எதைக் கொடுத்து விட்டது என்பதை அவர் சிந்திக்கமாட்டாரா? நடந்து முடிந்த போரின் வலியும், வேதனையும் மண் பற்றுள்ளவர்களுக்குப் புரியும். இனி மேல் போர் வேண்டாம் என்று சொன்னாலும் பிரச்சினை அதிகரித்தே காணப்படுகிறது.

முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களில் இராணுவப் புலனாய்வாளர்களால் வாக்காளர் பெயர்ப்பட்டியல் கோரப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திலும், வாக்காளர் பெயர் பட்டியல் கோரும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வருகின்றன. 2013 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர் பட்டியல் பதிவுக்காக கிராம சேவையாளர்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது. கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த வாக்காளர் பெயர்ப் பட்டியலை இராணுவத்தினர் தமக்குத் தருமாறு கேட்டு அதனை போட்டோ பிரதி செய்து விட்டு மூலப் பிரதியை மீண்டும் கிராம சேவையாளர்களிடம் வழங்கி வருகின்றனர்.

> தேர்தலையே நடத்தக் கூடாது என்று முரண்டு பிடித்துக் கொண்டிருக்கும் சிங்களக் கட்சிகள் எப்படி தமிழ் மக்களின் தீர்வினைப் பற்றி சிந்திக்கப் போகின்றன?

2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியல் உள்ளவர்களில் தற்போது வெளிநாடு சென்றவர்கள், இறந்தவர்கள், வேறு மாவட்டங்களுக்குச் சென்றவர்கள் தொடர்பான விவரங்களும் இராணுவத்தினரால் திரட்டப்பட்டுள்ளன. சில இடங்களில் பிரதேச செயலகங்களுக்குச் சென்ற இராணுவத்தினர் வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் கோரியுள்ளனர். இதற்கிடையில் வடக்கில் நீதியான முறையில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டுமெனில் வடபகுதியில் நிலை கொண்டுள்ள படையினரை உடன் அகற்றுமாறு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அந்த இயக்கத்தின் தேசிய அமைப்பாளர்களில் ஒருவரான அஹமட் மனாப் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். வடக்கில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் அங்குள்ள படைகள் அகற்றப்பட வேண்டும். சிவில் நடவடிக்கைகள் அனைத்தும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதன் மூலமே நீதியான தேர்தலை அங்கு நடத்த முடியும் என்கிறார் அவர்.

வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்ட வரைபு இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களைப் பாதித்து விடக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார். வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்ட வரைவு அரசமைப்புக்கு அமைவானதா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நீதியரசர்களான சத்யா ஹெட்டிகே, ரோஹிணி மாரசிங்க ஆகியோர் முன்னிலையில் ஆராயப்பட்டது. இதன் போது வாக்காளர் பதிவு விடயம் தொடர்பில் நீதிமன்றத்துக்கு உதவும் வகையிலான சில சமர்ப்பணங்களைச் சட்டத்தரணி சுமந்திரன் முன் வைத்தார். இவற்றில் சிலவற்றை நாடாளுமன்றக் குழுநிலை விவாதத்தின் போது திருத்தங்களைச் செய்வதற்கும் இங்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த வாக்காளர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை 2012ஆம் ஆண்டு ஜூன் முதல் இன்று வரையில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள், பழைய சட்டத்துக்கும் புதிய சட்டத்துக்கும் இடையில் பொருத்தமான அமையவில்லை என்று சுமந்திரன் மன்றில் சுட்டிக்காட்டினார். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் வெளிநாட்டில் உள்ளவர்கள் அகதிகளாக வாக்களிக்கும் ஏற்பாடுகள் குறித்து மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்த சட்டத்தரணி சுமந்திரன் வடக்கு கிழக்குக்கு வெளியில் உள்ளவர்களும் வாக்களிக்கும் வகையில் ஏற்பாடுகள் இடம்பெற வேண்டும் என வலியுறுத்தினார்.

இதற்கிடையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தக் கூடாது என்று சிங்களக் கட்சிகள் சில ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. மாகாண சபைத் தேர்தல் முறை இந்தியாவால் கொண்டு வரப்பட்டதாகவும் இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு எந்த விதமான தீர்வினையும் எட்டுவதற்கு வழிகோலாது என்றும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இப்படியாக தேர்தலையே நடத்தக் கூடாது என்று முரண்டு பிடித்துக் கொண்டிருக்கும் சிங்களக் கட்சிகள் எப்படி தமிழ் மக்களின் தீர்வினைப் பற்றி சிந்திக்கப் போகின்றன? தமக்குப் பெரும்பான்மை பலம் உண்டு என்ற நிலைப்பாட்டிலும் தாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். சிறுபான்மையினர் பேசாமல் அடங்கி இருக்க வேண்டியதுதான் என்ற நிலைப்பாட்டிலும் பெரும்பான்மை சக்திகள் செயற்படுவது புலனாகிறது.

மூன்று தசாப்த காலம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக பல இடங்கள் இருந்தமையை மறந்து விடக்கூடாது. மீண்டும் தமிழ் மக்களை பிரச்சினைக்குள் இழுத்து மீண்டும் ஒரு பிரச்சினை இந்த மண்ணில் நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி விடவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோரும் கண்டு கொள்ளா உலகமும்

மன்னார் சிந்தா

இந்த நாட்டில் நிலவும் இனப்பிரச்சினை தீர்வுவேண்டி தமிழர் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகள் இறுதியில் இரு தரப்பினரிடையிலுமான கொடூர போராக மாறி இரண்டு பகை நாடுகளுக்கிடையிலான போர் போன்று உக்கிரமான மோதலுடன் முள்ளிவாய்க்காலில் முடிவடைந்தது. சுமார் 30 வருடங்களாக நடைபெற்ற இந்தப் பயங்கரப் போரானது பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்தது மட்டுமல்லாது, பல கோடி ரூபா சொத்திழப்புகளைத் தமிழ் மண்ணில் ஏற்படுத்தியது. அத்துடன் நின்றுவிடாது, தமிழர் மத்தியில் பல்வேறு பாதிப்புகளைச் சுமந்து நின்று பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும், பல்வேறுபட்ட தனித்தனி குழுமங்களையும், உருவாக்கியுள்ளது.

1) போர் விதவைகள்
2) போர் அநாதைகள்
3) போர் அங்கவீனர்கள்
4) சமூகத்தால் புறக்கணிக்கப்படும் முன்னாள் போராளிகள்
5) வாழ்வாதாரம் இழந்தவர்கள்
6) குடியிருக்க வீடற்றவர்கள்
7) காலவரையின்றி சிறையில் வாடுவோர்
8) காணாமல் போனோரின் குடும்பங்கள்

இப்படியான பலவகை தனிப்பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் இத்தனித்தனி குழுமங்களுக்குப் பொருளாதாரம், வாழ்வாதாரம், பாதுகாப்பு போன்ற பல பொதுப் பிரச்சினைகளும் இருக்கவே செய்கின்றன. இப்படி பொதுப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மேற்கூறப்பட்ட காரணங்களால் விசேட தாக்கங்களையும், ஏக்கங்களையும் சுமந்து நிற்கும் தனித்தனிக் குழுமங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

**காணாமல்போனோரில் பல வகைகள்:**

ஏதோ ஒரு தேவைக்காக வீட்டை விட்டு வீட்டார் அறிதலுடன் வெளியே சென்று பின் திரும்பாதவர்கள், யாருக்கும் தெரியாது, கைதுசெய்யப்பட்டு காணாமல்போனவர்கள், வீடுகளுக்குப் பாதுகாப்புத் தரப்பினர் வந்து வீட்டாரின் அறிதலுடன் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு பின் வீடு திரும்பாதவர்கள், இவர்களை அழைத்துச்செல்லப்பட்டதற்கான எழுத்துமூல ஏற்புக் கடிதங்கள் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டிருந்தும், விசாரணை முடிந்து விடுவித்துவிட்டதாக படை அதிகாரத்தரப்பால் கூறப்பட்டும் வீடு திரும்பாதவர்களும் இத்தரப்பில் அடங்குவர்.

காவலரண்களில் பெயர் பதிந்தபின்னர் வெளிச்செல்ல அனுமதிக்கப்பட்டு அதன் பின் காணாமல்போனவர்கள், இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டவர்கள், வெள்ளை வான்களில் கடத்திச்செல்லப்பட்டவர்கள், இறுதிப் போர் காலத்தில் உறவினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன்னிலையில் சரணடைந்து பஸ்களில் இராணுவத்தால் ஏற்றிச் செல்லப்பட்டவர்கள், போரின் பின்னர் செட்டிகுள முகாம்களில் சரணடையும்படி அறிவித்தல் வழங்கப்பட்ட தன்பேரில் சரணடைந்த இளைஞர் - யுவதிகள் மற்றும் ஏனையோர், போரின்போது வன்னியில் இடம்பெயர்ந்து ஓடி சென்றிருந்தபோது காணாமல்போனோர் என இவர்களில் மொத்தத்தொகை ஏறக்குறைய 1,47,000 எனக் கூறப்படுகிறது. ஏனெனில், போருக்கு உடனடி முன்பான காலத்தில் வன்னி நிலப்பரப்புக்கு அடங்கிய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியின் சனத்தொகை சுமார் 4,50,000 என அந்தந்த மாவட்ட செயலகத்தால் எடுக்கப்பட்ட அலுவலக கணக்கெடுப்புகள் கூறினாலும், போர் முடிவில் இப்பகுதிகளிலிருந்து செட்டிகுளப் பகுதி முகாம்களுக்கு கொண்டுவரப்பட்டவர்களின் எண்ணிக்கை ஏறக் குறைய 3,00,000 என்பது உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ கணக்கெடுப்பாகும்.

எனவே, 4,50,000 - 3,00,000 - 1,50,000 பேருக்கான கணக்கைக் காணவில்லை. இவ்விடயம் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு விசாரணையின்போதும், சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அரச தரப்பின் பின்னைய அறிக்கைகள் காணாமற்போனோர் என எவரும் இல்லை எனவும், போர்க்காலத்தில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை எனவும் கூறின.

ஆயினும், பின்னைய நாள்களில் போரில் சில உயிர்கள் இழக்கப்படுவது சாதாரணம் என்றும், அரச தரப்பு தமிழ் பொதுமக்களை புலிப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக மிகக் கவனமாகப் போரிட்டதால் படைத்தரப்பால் தமிழ்மக்கள் எவரும் போரின் போது கொல்லப்படவில்லை என்றும், அப்படிக் கொல்லப்பட்டிருந்தால் அவர்கள் புலிகளாலேயே கொல்லப்பட்டவர்கள் எனவும் அரசு தரப்பு கூறியது. இக்கூற்றின் உண்மைத்தன்மையை சர்வதேசம் நன்றாகவே புரிந்துகொண்டுள்ளது. வன்னியில் வாழ்ந்த மக்கள் 4,50,000இற்கும், போரின்பின் முகாம்களுக்கு வந்த 3,00,000 பேருக்கும் இடைப்பட்ட கணக்கில் வராத அனைவரும் காணாமல் போனவர்களே என்பது உலகறிந்த உண்மை. இவர்களுள் போரின் போது விமானக்குண்டுகளாலும், எறிகணைத்தாக்குதல்களாலும், இரசாயன ஆயுத பாவனையினாலும், கொத்துக்கொத்தாக அழிக்கப்பட்டவர்கள் உட்பட மேற்கூறப்பட்ட 9 வகையினரும் அடங்கிய 1,50,000 மக்களை இன்று காணாமல்போனவர்களாகக் கணக்கிடமுடியும்.

போரின்பின் இவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் அவர்களது உறவுகளால் தேடப்பட்டு வருகின்றனர். ஆயினும், போரின் போது எந்தவொரு பொதுமகனும் கொல்லப்படவும் இல்லை, காணாமல் போகவும் இல்லை என அரசு மூர்க்கமாக மறுத்து வருகிறது. இவர்கள் அனைவருமே போரின்போது அரச படைகளால் நீதிக்குப் புறம்பாகக் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதே உண்மை. இதனை எத்துணை காத்திரமாக அரசு மறுக்கிறதோ, அத்தனை உறுதியாக சர்வதேசம் நம்புகிறது. வெள்ளைக்கொடியுடன் சரணடைந்து சென்றவர்கள் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்டதும், அனைத்து அரசசார்பற்ற சர்வதேச நிறுவனங்களும், வன்னியிலிருந்து அகற்றப்பட்டபின்னர் சாட்சியமின்றி கொல்லப்பட்ட மக்கள் பற்றி பின்னர் வெளியான அறிக்கைகள் காணொளிகள் மூலமும், செய்மதித் தகவல் மூலமும் சர்வதேசம் அறிந்தே வைத்துள்ளது. ஆயினும், இம்மோசமான இன அழிப்பை மனித உரிமை மீறல்களையிட்டு சர்வதேசமும், ஐ.நாவும் ஏன் உரிய முறையில் எடுத்தாளவில்லை என்பதுதான் புரிந்துகொள்ள முடியாத புதிராகவும், சர்வதேசத்தின் மனித உரிமை ஏற்பாட்டு நியதி பொறிமுறை நியதிகள் என்பன உரிய முறையில் கவனத்திற்கெடுக்கப்படாதது கவலைதரும் செயலாகவும், நடுநிலை தவறிய செயற்பாடாகவும், கருதப்படுகின்றன.

**காணாமற் போனோர் நிலை குறித்து ஏங்கும் உறவுகள்**

காணாமல்போன, சரியாகச் சொல்வதானால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் முதன்மையானதும், முக்கியமானதும், உறுதிபடத் தெரிந்துகொள்ளப்பட வேண்டியதுமான அதி முக்கிய தேவை, அவர்கள் இன்று உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்பதே. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் சாவடைந்தே ஆகவேண்டும். அதில் மாற்றமில்லை. இந்த சாவு பிறந்தவுடன், குழந்தைப் பருவத்தில், வாலிப வயதில், வாழ்க்கையின் அதி முக்கிய வசந்தகாலப் பருவத்தில் அல்லது வயது முதிர்ந்த நிலையில் எப்போதும், எப்படியும், விபத்தாகவோ, வியாதியாகவோ, தற்கொலையாகவோ அல்லது எதிரிகளினால் கொல்லப்பட்டதாகவோ எப்படியும் ஏற்படலாம். இவ்வகையான தமது உறவுகளின் சாவுகள் எல்லாம் சாவுக்கான காரணங்கள் அறியப்பட்டு சாவடைந்த உடலை அவர்கள் பெற்று இறுதிச் சடங்குகள், செய்யப்பட்டு எல்லாம் முடிந்தபின்னர் அவர்களின் சாவு உறுதிப்படுத்தப்பட்டபின்னர் சிறிது காலம் கவலை, கண்ணீர், துன்பம் என்பவை தொடரும். காலப்போக்கில் கவலை இருந்தாலும், ஓர் ஏற்பு நிலை ஏற்பட்டுவிடும். ஆனால் காணாமல் போனோரின் நிலை அப்படியல்ல. பல மாதங்கள், வருடங்கள் கடந்தும் இன்னமும் காணவில்லையென்றால் இவர்களின் காணாமைக்குப் பதில்கூற வேண்டியவர்கள் படைத்தரப்பும், அரசுதரப்புமே.

ஆனால், அரசும் படைத்தரப்பும் கூறுகின்றன, எவரும் காணாமல் போகவில்லை என்று, அப்படியானால் உங்களாலேயே கைது செய்யப்பட்டவர்களும், உங்களிடம் சரணடைந்தவர்களும் எங்கே? உங்களால் அழைத்துச்செல்லப்பட்டவர்கள் எங்கே? என்பது உங்களைத்தவிர வேறு யாருக்குத் தெரியும்? இப்பொறுப்பிலிருந்து அரசு தப்பிக்கக் கூறுகின்ற எந்தவொரு விளக்கத்தையும் எவரும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

இப்படி கணக்கில் வராத காணாமல்போனவர்கள் யார்? இன்று தம் உறவுகளைக் காணவில்லை என்று ஏக்கமும், கவலையும், கண்ணீருமாகத் தவிக்கும் தமிழ் மக்களின் உடனடி உறவுகளாவர். இவ்வகையில் அவலத்துக்குள்ளாகியிருப்பவர்கள் கணவனை காணாத மனைவி, மனைவியைக் காணாத கணவன், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், சகோதர சகோதரிகளை இழந்த உடன்பிறப்புகள் மற்றும் தம்மால் அன்பு செய்யப்பட்டவர்களைக் காணாமல் துடிக்கும் ஏனைய உறவுகள்.

காணாமல்போனோரையிட்டு அவர்களது உறவுகள் அடையும் கவலையும், ஏக்கமும், பரிதவிப்பும், ஏனைய இழப்புகளைவிட மிகவும் பரிதாபத்திற்குரியவை. அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா? என்ற தவிப்பும், மன அழுத்தமும், அவர்களைத் தினமும், கொல்லாமல் கொன்றுகொண்டிருக்கும் கொடிய விஷமாகும். காணாமற்போனவர்கள் என்பது மனம் மாறித் தேறக்கூடிய ஒன்றல்ல. அவர்கள் சாவடைந்துவிட்டார்கள் என்று சந்தேகத்திற்கிடமின்றி உறுதிப்படுத்தப்படும் வரையில் அவர்களை சாவடைந்ததாக எந்த ஒருவரும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. அவர்கள் உயிருடன் உலகின் எங்காவது ஒரு மூலையில் உள்ளனரா? இல்லையா? என்ற ஏக்கம் அவர்களைத் தினமும் கொல்லும். அவர்கள் எந்த ஆபத்தில் தினமும் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்களோ? என மனம் ஏங்கும். இவ்வேதனைக்கும் துன்பத்துக்கும் முடிவே இராது.

**உளவியல் துயரம்**

இது தினமும் சித்திரவதை செய்து கொல்லும் ஒரு தீராத்துயரமே. இதற்கு ஒரேயொரு வழி இவர்கள் இருக்கின்றனரா? இல்லையா? என்பதைத் திட்டவட்டமாக சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பு உறுதிப்படுத்துவதேயாகும்.

காணாமல்போனவர்கள் பிரச்சினைகளால் ஆகக்குறைந்தது இப்படியாக வாழ்வாதாரத்துக்கு வழியின்றி தவிக்கும் குடும்பங்களுக்காவது ஏதாவது வகையில் உதவி அவர்களின் அன்றாட பசிப்பிணியைப் போக்கவாவது, காணாமல் போனவர்கள் கணக்கின்றிப் போனமைக்குப் பொறுப்பானவர்கள் உதவ முன்வரவேண்டும். இவர்களின் முடிவற்ற துயரத்துக்கு மாற்றீடு கிடைக்காவிட்டாலும், இப்படியான உதவி அவர்களுக்கு சிறிது ஆறுதலையாவது வழங்கக் கூடும். இவ் ஆறுதல் நிவாரணத்தையாவது வழங்க சமூக அக்கறையுடையோர் உரிய தரப்புகளுடன் தொடர்புகொண்டு ஆக்கபூர்வமாகச் செயற்பட முன்வரவேண்டும். இவர்கள் காணாமல்போனதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய அரசு இயந்திரமும், படைத்தரப்பும், இப்படியான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்க முன்வரவேண்டும். இதுவே அவர்களைப் பொறுத்தவரையில் காலத்தின் தேவையாகும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
13/06/2013

# சவால்களைச் சரித்திரமாக்கும்




''இன்பமே இளமையாய் துன்பமே வாழ்க்கையில்'' கொண்ட பருவமே எம் இளமைப் பருவம். எம் வாழ்க்கைப் பயணத்தில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் அதாவது கல்வி, தொழில் மற்றும் வேறுபட்ட முயற்சிகளில் தோல்வி கண்டு துவண்டு போகும் வேளையிலும் எதிர் நீச்சல் போட்டு சவால்களை சாதனைகளாகவும், சரித்திரங்களாகவும் படைத்திட முயன்றிடுவோம்.
தோல்வியைக் கண்டு துவண்டு போகாமல் வெற்றியின் சிகரத்தைத் தொடும் குறிக்கோளைக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்திடுவோம்.
தன்னம்பிக்கை, துணிவு, பொறுமை, முயற்சி என்பவற்றை நம் அணிகலன்களாக அணிந்திடுவோம்.
''எதையும் என்னால் செய்ய முடியும்'' என்ற வாக்குறுதியை மனதில் கொண்டு செயற்படுவோம்.

ம.அ.மரியா ஜெனிற்றா,
சாவகச்சேரி.

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-.......................................

முகவரி :- .......................................

.......................................

.................. ..................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது


**ஆண்களா?**
**பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே



21 ஆம் நூற்றாண்டில் வாழும் நாங்கள், நவீன நாகரிக மோகத்தில் எங்களை நாமே இயக்கிக் கொண்டிருக்கின்றோம். அதில் பெண்களே அதிகமான நேரத்தையும் அதிக செலவுகளையும் செலவிடுவதோடு தேவையில்லாத சிந்தனைகளிலும் தம் காலத்தை செலவழித்துக் கொண்டிருக்கின்றனர்.
அன்றைய காலத்தில் பெண்களின் தலைமுடியில் இயற்கையான மணம் வரும் என்று கூறுவார்கள். ஆனால் இன்றைய காலத்தில் தலைமுடிக்கு பெண்கள் வாசனைத் திரவியங்கள் பூசி வாசத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமுடியை விதம் விதமாக வெட்டி தங்களைத் தாங்களே கேவலப்படுத்திக் கொள்கின்றனர்.
அன்றைய காலத்துப் பெண்கள் கோயிலுக்கு செல்வதென்றால் சேலைகட்டி இயற்கை அழகுடன் அடக்கமாகவும் அழகாகவும் செல்வார்கள். ஆனால் இன்றைய காலத்துப் பெண்கள் உடை அணிந்தால் அதைப் பார்த்துச் சகிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இன்றைய பெண்கள் அணியும் ஆடையைத் தாமே தெரிவு செய்து அணியும் அளவுக்கு நாகரிகம் பெண்களின் மீது தாக்கம் புரிகிறது.
கூடுதலான பெண்கள் தலைமுடியைப் பேஷியல் செய்வதற்கு கூடுதலாக செலவு செய்கின்றனர்.
நவநாகரிகம் பெண்களின் மேலே முழுக்க முழுக்க தாக்கம் புரிகிறது. அதன் விளைவாக சில நேரங்களில் தாய் யார்? மகள் யார்? என்று அடையாளங்காண இயலாது தவிக்க நேரிடுகிறது. சினிமாவில் நடிகையொருத்தியின் வாழ்க்கை நடைமுறையைப் பின்பற்றித் தாமும் அவ்விதம் வாழமுற்படுவதால் இன்றைய பெண்கள் சீரழிந்து வாழ்க்கையை தொலைக்கிறார்கள். எனவே நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை.

ஆ.அஜித்,
நெடுந்தீவு.



அன்றைய காலத்தில் பெண்களின் தலைமுடியில் இயற்கையான மணம் வரும் என்று கூறுவார்கள். ஆனால் இன்றைய காலத்தில் தலைமுடிக்கு பெண்கள் வாசனைத் திரவியங்கள் பூசி வாசத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தலைமுடியை விதம் விதமாக வெட்டி தங்களைத் தாங்களே கேவலப் படுத்திக் கொள்கின்றனர்.

# மாணவிக்கு பதிலாக பாடசாலை செல்லும் 'ரோபோ'



அமெரிக்காவில் சவுத் கரோலினா அருகேயுள்ள கலேவர் நகரைச் சேர்ந்த லெஸி (வயது-9) என்ற சிறுமி அங்குள்ள தனியார் பாடசாலையில் படித்து வருகிறாள். பிறவியிலேயே இருதயக் கோளாறினால் பாதிக்கப்பட்ட அவளால் ஒழுங்காகப் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. அதனால் பாடங்கள் பாதிக்கப்படாமல் இருக்க அவளது பெற்றோர் அவளுக்கு புதுவிதமான ரோபோ ஒன்றை வாங்கிக் கொடுத்துள்ளனர்.
தற்போது, அந்த ரோபோதான் லெஸிக்குப் பதிலாக பாடசாலை சென்று பாடங்களைப் படித்து வருகிறது.
இதன் முகத்தில் வீடியோ ஸ்கிரீன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ரோபோவில் கமெரா மற்றும் இண்டர்நெட் வசதியும் உள்ளன. பாடசாலைக்குச் செல்லாமல் வீட்டில் இருக்கும் லெஸி ரோபோவை வீட்டில் இருந்தபடியே கணினி மூலம் இயக்குகிறாள். வகுப்பறைக்குச் செல்லும் ரோபோவின் வீடியோ திரை வீட்டில் இருக்கும் கணினியில் தெரிகிறது. வகுப்பறையில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை படம்பிடிக்கும் ரோபோ அதை வீடியோவில் பதிவு செய்து வீட்டில் இருக்கும் கணினியில் ஒளிபரப்பும். அதன் மூலம் லெஸி தனது வகுப்பில் ஆசிரியர்கள் நடத்தும் பாடங்கள் மற்றும் உடன் படிக்கும் மாணவர்களையும் பார்த்துத் தெரிந்து கொள்கிறாள்.
இந்தச் சிறுமி வீட்டில் இருந்தபடியே பாடம் படித்து தேர்வு எழுதி வருகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசின் திணிப்பே '13'

## காத்தான்குடியில் அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

காத்தான்குடி,ஜூன் 13
இந்திய அரசு விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு அமைவாக எங்கள் மீது திணித்த ஒன்றுதான் '13' ஆவது திருத்தமாகும். அது குறித்து பலர் தேவையில்லாமல் விவாதித்து வருகின்றனர்.
இவ்வாறு இளைஞர் விவகார திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
காத்தான்குடியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற உலமாக்களுக்கான மலிக் அப்துல்லாஹ் கல்லூரிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
பலாத்காரமாக திணிக்கப்பட்டதும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் உருவாக்கப்பட்டதும்தான் 13 ஆவது திருத்தமாகும்.
'13' வேண்டுமா?, '15 'வேண்டுமா? அல்லது '20' வேண்டுமா? அதற்கு அப்பாலும் வேண்டுமா? என்பதை பேசியே தீர்மானிக்க வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேசியே தீர்வு காணப்படவேண்டும்.
மக்கள் மத்தியில் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்.
இனங்களுக்கிடையில் வைராக்கியத்தை ஏற்படுத்த வேண்டாம்.

**மக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்றை பெற்றுக்கொடுக்க முயற்சிக்க வேண்டும்.**



இனங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்தும் வகையிலும் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளும் வகையிலும் எமது பணிகள் அமைய வேண்டும்.
மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை பெற்றுக் கொடுக்க முயற்சிக்கவேண்டும். அதுதான் இன்றைய தேவையாகும்.-என்றார். (ச)

# அம்பாறையில் 57பிரதேசங்களில் அபிவிருத்தி

**மீள் எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் 57 பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

அம்பாறை.ஜூன் 13
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ், வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக, அம்பாறை மாவட்டத்தில் 57 பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என்று கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் விவகார அமைச்சர் எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.
சென்னல் கிராமம், ஹிஜ்றா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இன்று நாடளாவிய ரீதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் மீள் எழுச்சி வேலைத்திட்டத்தின் கீழ் 57 பிரதேசங்களில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் கூறினார்.(ச)

# உப- தபாலகங்களில் தந்திச்சேவை இழுபறி

கல்முனை.ஜூன் 13
கல்முனைப் பிராந்திய பிரதான தபாலகத்துக்குட்பட்ட உப தபால் அலுவலகங்களில் தந்திச்சேவையில் உள்ள இழுபறியால் பொதுமக்கள் சிரமமடைந்து வருகின்றனர்.
கல்முனை தபாலக பிராந்தியத்திலுள்ள உப தபால் அலுவலகங்களில் தந்திச் சேவையைப் பெறுவதற்காக பொதுமக்கள் செல்லும்போது அதற்கான விண்ணப்பங்கள் பிரதான தபால் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெறவில்லை. அதனால் இந்தச் சேவையை மேற்கொள்ள முடியாது என்று உப தபாலக அதிபர்கள் தெரிவிக்கின்றனர் என்று மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். (ச)



அட்டாளைச்சேனையில் சம்புநகர் மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் வீட்டுத் திட்ட வீதிகளில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் உட்படப் பலர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஜூன் 13
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவன் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
கிழக்குப் பல்கலைக்கழக அழகியல் கற்கைநெறி 3 ஆம் வருட மாணவனான யோ.அமிர்தராஜ் மீது செவ்வாய்க் கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



காயங்களுக்குள்ளான மாணவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.
செவ்வாய்க்கிழமை இரவு கல்லடி பிரதேசத்துக்குச் சென்ற இனந்தெரியாத சிலர் அவரை மோசமாகத் தாக்கிவிட்டு தப்பிச்சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தத் தாக்குதல் குறித்து கருத்துத் தெரிவித்த சக மாணவர்கள்:
தாக்குதலுக்கு இலக்கான மாணவர் இன்று வியாழக் கிழமை கிழக்குப் பல்கலைகழகத்தின் கல்லடி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி மாணவர் ஒன்றியத் தேர்தலில் தலைமை வேட்பாளராக போட்டியிடவிருந்தார்.
அதனால் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றனர். (ச)

# தம்பலகாமம் வீதி திருத்தப் பணிகள் ஜூலையில்

திருகோணமலை.ஜூன் 13
தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவில் பொலிஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள 8.5 கிலோமீற்றர் நீளமான வீதி நிர்மாண வேலைகள் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன.
திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.
சவூதி அரேபிய அரசின் 90 கோடி ரூபா நிதி உதவியில் இந்த வீதி காப்பெற் வீதியாக நிர்மாணிக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
இதேவேளை மகாவலிகங்கை நீரை கிண்ணியாப் பிரதேசத்துக்கு திருப்புவது குறித்து ஆரம்பகட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.
மகாவலி கங்கையை கிண்ணியாப் பிரதேசத்துக்குத் திருப்பிவிடுவதால் விவசாயத்துறையில் ஒரு புரட்சி ஏற்படும். கங்கை நீரினால் தாழ்ந்த பகுதிகள் பாதிக்கப்படுவது தொடர்பான விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தி வருகிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-40)

# இடமாற்றத்தை எதிர்த்து ஆசிரியர்கள் போராட்டம்




கல்முனை,ஜூன் 13
கல்முனை வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர் இடமாற்றத்தை எதிர்த்து மாகாண கல்வி அலுவலகத்துக்கு முன்னால் புதன் கிழமை காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
கல்முனை வலயத்துக்கான ஆசிரியர் சமப்படுத்தல் இடமாற்றத்தின்கீழ் மாற்றம் செய்யப்பட்ட 250 ஆசிரியர்களில் 205 ஆசிரியர்கள் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி சொந்த இடங்களிலேயே நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.
2011 ஆம் ஆண்டில் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்ட போது கிண்ணியா, மூதூர், கல்குடா, மட்டக்களப்பு போன்ற வெளிமாவட்டங்களில் பணியாற்றியவர்களில் 45பேர் மாத்திரம் தமது சொந்த இடங்களில் நிரந்தர நியமனம் கிடைக்காமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அதனைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.
தமக்கு நீதி கோரி 45 ஆசிரியர்களின் கையொப்பம் அடங்கிய மனு ஒன்[illegible] மாகாண கல்விப் பணிப் [illegible] ஆர்ப்பாட்டக்காரர்கள் கையளித்துள்ளனர். (ச)

# பாலத்தை அகலப்படுத்துங்கள்

## சாய்ந்தமருது மக்கள் கோரிக்கை



அம்பாறை,ஜூன் 13
அம்பாறை,சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பழைய வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் அமைக்கப்பட்ட ஒடுக்கமான பாலத்தை விசாலப்படுத்தி அகலமான பாலமாக அமைத்துத்தர வேண்டும்.
இவ்வாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
50 வருட காலத்துக்கு முன் மிகச் சிறியதாக அமைக்கப்பட்ட இந்தப் பாலத்தின் ஊடாக ஒரு தடவையில் ஒரு வான் மட்டுமே போகக்கூடிய வசதி காணப்படுகின்றது.
இந்தப் பாலத்தை விசாலப்படுத்தி ஒரே தடவையில் இரு வாகனங்கள் போக்கு வரத்துச் செய்யக்கூடியவாறு திருத்தி அமைத்துத்தர வேண்டும் என்று பல தடவைகள் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச -ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடர்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**இடபர்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். முக்கிய நபர்களால் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மிதுனர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதர வகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**கடகர்:** மன உளைச்சல் ஏற்படும். யாரை நம்புவது என்கிற மனக் குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உங்கள் வாயை சிலர் கிளறி வேடிக்கைப் பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**சிங்கர்:** பழைய பிரச்சினைகளுக்கு சுமூக தீர்வு காண்பது நல்லது. அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், அடையலாம். வெளிவட்டாரத் தில் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

**கன்னி:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**நாளை**

வைகாசி-31 வெள்ளிக்கிழமை 14.06.2013
திதி: பஞ்சமி கா. 05.55 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.11.07.55 வரை
சுபநேரம்: 05.53 - 07.23 வரை
இராகுகாலம்: 10.23 - 11.53 வரை

**துலார்:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**விருச்சிகர்:** வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்கள்.

**தனுசு:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்ப அந்தரங்க விடயங்களை வெளி நபர்களிடம் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளைச் சமாளிக்க வேண்டி வரும்.

**மகரர்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கும்பர்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி வரும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மீனர்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசுக் கரியங்களிலும் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 1 | | | 6 | | |
| | | 2 | | 8 | 6 | 9 | | 4 |
| | | 6 | 3 | 4 | 2 | | | |
| | | | | | 5 | 4 | 9 | |
| 7 | 5 | 3 | | | | 2 | 1 | 8 |
| | 8 | 9 | 2 | | | | | |
| | | | 4 | 2 | 1 | 8 | | |
| 1 | | 7 | 6 | 3 | | 5 | | |
| | | 8 | | | 7 | | 6 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 7 | 2 | 3 | 6 | 4 | 9 |
| 7 | 6 | 9 | 1 | 5 | 4 | 2 | 3 | 8 |
| 3 | 4 | 2 | 9 | 8 | 6 | 1 | 7 | 5 |
| 2 | 8 | 3 | 5 | 7 | 9 | 4 | 1 | 6 |
| 4 | 7 | 5 | 3 | 6 | 1 | 8 | 9 | 2 |
| 6 | 9 | 1 | 8 | 4 | 2 | 7 | 5 | 2 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 7 | 5 | 2 | 1 |
| 1 | 2 | 4 | 6 | 3 | 5 | 9 | 8 | 7 |
| 9 | 5 | 7 | 2 | 1 | 8 | 3 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்




உரும்பிராயைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்டிருந்த
திருமதி சசிகலா அகிலன்

தோற்றம் 04.09.1975
மறைவு 14.05.2013

உனது நல்வாழ்வே எங்கள் வாழ்வென
என்றென்றும் எண்ணி வாழ்ந்த எம்
நெஞ்சில் நிறைந்திருந்த எம் குடும்பக் குலவிளக்கே
எமையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு
ஆண்டவன் நிழலில் சரண் புகுந்த அன்புத் தெய்வமே,
வையமிதில் நாம் வாழும் வரை
என்றென்றும் நிலைத்திருக்கும் உம் நினைவு
எம் உள்ளங்களில்!

எமது குடும்பக் குலவிளக்கின் ஆத்மா சாந்தியடைய
அருளுமாறு கற்பக விநாயகர் பாதம் பணிகின்றோம்.

இன்று (13.06.2013) வியாழக்கிழமை
முற்பகல் 11 மணியளவில் எமதில்லத்தில் இடம்பெறும்
அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன
நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர்,
நண்பர்களை அழைக்கின்றோம்.

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
- குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சண்முகராசா
இராசரெத்தினம்
(முன்னாள் முகாமையாளர் - சாரங்கா நகைமாடம்)

மண்ணில் 20.05.1945
விண்ணில் 14.05.2013

அன்பு முகம் கொண்டு ஆறுதல் மொழிதந்து
இவ்வுலக வாழ்வில்
தூண் என துணைநின்ற இதய தெய்வமே - நீர்
இல்லாமல் போகவில்லை இறையோடு இணைந்துவிட்டீர் - எம்
நினைவோடு கலந்துவிட்டீர் - உம்
நிழலில் வாழ்ந்த நினைவுகளோடு
ஆன்ம ஈடேற்றத்திற்காய் பிரார்த்திக்கின்றோம்.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி புரிந்த சாரங்கா நகைமாட உரிமையாளர், ஊழியர்களுக்கும் மற்றும் நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி பிரசுரம், பதாகைகள் மூலமும், மலர் வளையங்கள் வைத்தும் துயர்பகிர்ந்தோருக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (13.06.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

...லர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி.9683) (3.645)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### லலித், குகன்...

லலித், குகன் ஆகிய இரு வரும் 2011 டிசெம்பர் 9 ஆம் திகதி காணாமற்போயினர். அது தொடர்பான வழக்கு யாழ். நீதிமன்றில் நடந்து வருகின்றது.

லலித், குகன் ஆகிய இருவரும் உயிருடன் உள்ளனர் என்று அமைச்சர் கூறிய காணொலியை மன்றில் சமர்ப்பிக்குமாறு மனுதாரர்கள் நேற்றுக் கோரியிருந்தனர். (த-4)

### படையினர் பாதுகாப்பிலேயே...

அரசியல் கைதிகளை விடுதலை செய், ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை யாழ். நகரில் ஒட்டிக் கொண்டிருந்தபோது யாழ். பொலிஸார் எம்மைக் கைது செய்தனர். இந்தக் தொடர்பில் ஊடகங்களுக்கோ, கட்சிக்கோ கூறவேண்டாம் என்றும் விடுதலை செய்வதாகவும் பொலிஸார் கூறினர். மறுநாள் நீதி மன்றில் முற்படுத் தப்பட்டு எமக்கு எதி ராக அவர்கள் வழக் குத் தொடர்ந்தனர். நீதி மன்றில் 5 தடவைகள் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வழக்கை பொலிஸாரே திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

மன்னாரிலும் இந்தச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த போது நாம் கைது செய்யப்பட்டோம். மன்னார் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எம்மிடம் விசாரணை நடத்தினர். மன்னார் பக்கம் வரவேண்டாம் என்று அவர்கள் கூறினர். பின்னர் வீட்டுக்கும் சென்று பொலிஸார் அச்சுறுத்தியதோடு காணாமற் போகச் செய்யப்படுவீர்கள் என்றும் கூறியிருந்தனர்.

அழுத்தங்களால் யாழ். உடுப்பிட்டியில் உள்ள எமது அலுவலகத்தை மூடி விட்டு வவுனியாத் தாண்டிக் குளத்தில் அலுவலகம் திறந்தோம்.

அங்கு என்.பி.யு.எச். 8342 இலக்க மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தம்மை சந்திரதாஸ், நிசாந் என்று அறிமுகப்படுத்தி தாம் புலனாய்வுப் பிரிவினர் என்று தெரிவித்தனர். லலித் பற்றி விசாரித்தனர்.

மீண்டும் ஒரு முறை புலனாய்வுப் பிரிவினர் வந்தனர். அவர்களில் ஒருவர் தனது அடையாள அட்டையைக் காட்டினார். அதில் அடையாள அட்டை இலக்கம் 889362662V என்று இருந்தது. அவர்களும் லலித், குகன் பற்றி விசாரித்தனர்.

கிளிநொச்சியில் சுவரொட்டிகளை ஒட்டிய போதும் லலித்தைக் கைது செய்து மறுநாள் விடுதலை செய்தனர். லலித், ஜயதிலக இருவரும் யாழ். நகரில் வைத்து தாக்கப்பட்டிருந் தனர். லலித் காணாமற்போனது தொடர்பில் நான் அறிந்தேன். அவர் காணாமற்போன அன்று இரவு 11.22 அளவில் லலித்தின் கைத்தொலை பேசிக்கு அழைப்பு எடுத்தேன் அங்கு குழப்பமான நிலை காணப்பட்டது. அவரால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

நான் நினைக்கிறேன் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வாளருமே இவர்களைக் கடத்தி உள்ளனர். அவர்கள் தற்போது இராணுவத்தினரின் பொறுப்பிலேயே இருப்பார்கள் என்று கருதுகிறேன். புலனாய்வாளர்களைக் கண்டால் அடையாளம் காட்டுவேன் - என்றார். (த-4)

### காணி பறிப்பு....

கூறினார். எனினும் மனு தாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி குமார வடிவேல் குருபரன், பிரிவு 2 அறிவித்தலையும் முழுக் காணிச் சுவீகரிப்பு நடை முறையையும் இரத்துச் செய்யவேண்டும் என்று வாதிட்டார்.

பிரிவு 2 அறிவித்தலில், சுவீகரிக்கப்பட வேண்டிய காணி முறையாக அடையாளம் காணப்படவில்லை என்றும், குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அரசு உயர் பாதுகாப்பு வலயங்களே இல்லை என்று கூறியமைக்கு மாறாகச் செயற்படுவது. மனுதாரர் களின் நியாயமான எதிர்பார்ப்புக்கு எதிரானது என்றும் தெரிவித்தார்.

மனுதாரர்கள் தமது மனுவில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டி இருப்பதாலும், அரச தரப்பு மேலும் சில விளக்கங்களை இலங்கை இராணுவத்திடம் இருந்து பெற கால அவகாசம் கோரியமையாலும் வழக்கு அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (த-5)

### இலங்கை அரசு...

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் சிறப்புப் பிரதிநிதிகளை இலங்கை அரசு நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்று கடைசியாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்குச் செல்ல திட்டமிட்டுள்ளார். இலங்கை தொடர்பில் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் முடிவு செய்வதற்கு அமெரிக்கா மிக உன்னிப்பாக கவனத்தைச் செலுத்தி உள்ளது - என்றார். (த-5)

### அரசியல் கைதிகளின்...

விடம் என்பவைகளுடன் சட்டத்தரணி தொடர்பான உதவிகள் என்று பல உதவிகள் தொடர்பாக நாம் பலமுறை கூட்டமைப்பின் கவனத்துக்குக் கொண்டு வந்து இருக்கின்றோம்.

வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களாகிய நாம் உங்களிடம் எதிர்பார்ப் [illegible] அடிப்படை விடயங்களான குடும்பநலன் மற்றும் சட்ட ரீதி யான உதவிகளே ஆகும்.

இது தொடர்பில் கூட்டமைப்பிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளனவா? தமிழ் அரசியல் கைதிகளின், திருமாணமானவர்களின் எண்ணிக்கை உடல் பாதிப்புக்குள்ளானவர்களின் விவரங்கள் உள்ளிட்ட தரவுகள் தங்களின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டனவா?

பல கைதிகளின் பிள்ளைகள் கல்வியைத் தொடரவோ ஏன் ஒரு வேளை உணவுக்கே கஷ்டப்படும் பொருளாதார நிலையில் உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சட்டத்தரணிகள் பலர் இருந்தும் ஏன் எங்களுடையசட்ட நடவடிக்கைகளுக்கு உதவ முன்வரவில்லை.

பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுக்கு உதவுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நலன்புரிக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

அதன் மூலம் பாதிக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளின் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் - என்றுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனை தொடர்பு கொண்டு கேட்ட போது,

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் பல தடவைகள் குரல் கொடுத்துள்ளது. இதற்கு மேலாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரசு பேச்சுக்களில் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தை முதன்மைப் படுத்தியிருந்தோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன்னாலான அனைத்தையும் செய்துள்ளது. இந்த அரசின் போக்கினால் அதன் வளைவுகள் தெரியவில்லை. இருப்பினும் தற்போது அரசு, தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் ஓரளவு அக்கறை எடுத்துள்ளது - என்றார். (த-5)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கண்ணீர் அஞ்சலி



யாழ் போதனா வைத்தியசாலையில் [illegible]
[illegible]

**விஸ்வலிங்கம் பத்மராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.

## 10ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
09.02.1932

உதிர்வு
04.06.2003

திதி: வளர்பிறை பஞ்சமி
13.06.2013



அமரர்
**கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்**

அப்பா பத்தாண்டு எப்படிப் பறந்து போனது
இப்போதும் நீங்கள் எங்களுடன் தானே வாழ்கின்றீர்கள்!
முப்போதும் உங்கள் நினைவு மனசெல்லாம் நிறையும்
தப்பாமல் தினமும் உங்கள் தாள் பணிகின்றோம்!
இப்பிறப்பு தாண்டி இன்னொன்று இருக்குமெனில்
அப்போதும் உங்கள் பிள்ளை, மருகர், பேரராய் நாம்
தப்பாமல் பிறக்க இறைதனை இறைஞ்சுகின்றோம்!.

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவுகளில்



தோற்றம் 14 05 1960
மறைவு 13 06 2007

அமரர்
**அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா**

ஆண்டுகள் ஆறு கடந்தாலும் அம்மா
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்
நித்தம் நித்தம் கண்ணீரில் எமை நனைய விட்டு
தினம் தினம் உங்கள் கதையை பேச விட்டு
எதனாலும் நிறையாத சோகத்தையும் வெறுமையையும் தந்து
மௌனமாக இடைவழியில் சென்ற மாயம் என்ன அம்மா
அம்மா என்று அழைக்கின்றோம், ஏங்குகின்றோம் - எமக்காக
ஓடிவரும் தூரத்தில் நீங்கள் இல்லையே!
உங்கள் ஆன்ம சாந்திக்காக
இறைவன் பாதம் பணிகின்றோம்.

162A, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
*சின்னத்தம்பி பார்வதி*

கடந்த 14.05.2013 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி சின்னத்தம்பி பார்வதி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்.

தோற்றம் 14.03.1948 மறைவு 14.05.2013

[illegible]

## கண்ணீர் அஞ்சலி



சர்வதேச டெஸ்ட் போட்டிகளுக்கான இலங்கையின் முதலாவது கிரிக்கெட் மத்தியஸ்தரும் நாம் தேசிய தர மத்தியஸ்தர்களுக்கான சான்றிதழைப்பெற எமக்கு உறுதுணையாக இருந்தவரும் இலங்கையின் பிரபல கிரிக்கெட் மத்தியஸ்தரும் எமது மண்ணின் மைந்தருமான

**K.T. பிரான்சிஸ் அவர்கள்**

அமரத்துவமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினருக்கும் கிரிக்கெட் நலன்விரும்பிகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்.**

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் முருகேசு

(ஓய்வுநிலை மின்சாரசபை ஊழியர், அரியாலை)



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் முருகேசு நேற்று (12.06.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் நாகமுத்து தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்கம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் சாந்தமலர், சுகிர்தமலர் (நாயன்மார்கட்டு, மகேஸ்வரி வித்தியாசாலை), சுனித்தா (சோபனா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமரேஷ்வரன், சுசிதரன் ஆகியோரின் மாமனும் சுலக்கிசனின் பேரனும் காலஞ்சென்ற ஏரம்பு, வேலுப்பிள்ளை, சின்னம்மா, மாணிக்கம், தம்பையா மற்றும் ஆறுமுகம் (தர்மலிங்கம்), தம்பிரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கோபாலன், சதாசிவம், நல்லபிள்ளை, இராசம்மா மற்றும் அன்னலட்சுமி, சந்தனவடிவு, மல்லிகா, துரைசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*103, கனகரத்தினம் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (38273)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

### இரத்தினவேல் செந்தூரன்

(ஆசிரியர், யா/சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, குருநகர்)



யாழ்ப்பாணம் கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும், 132/9,ஜீ.பி.எஸ்வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினவேல் செந்தூரன் (ஆசிரியர், யா/சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை, குருநகர்) நேற்று (12.06.2013) புதன்கிழமை அகாலமரணமானார்

அன்னார் காலஞ்சென்ற இரத்தினவேல் மற்றும் பத்மாவதி (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) தம்பதியரின் அன்பு மகனும், செவ்வந்தியின் (காணிக்கிளை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம்) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2013) வியாழக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

132/9, ஜீ.பி.எஸ் வீதி,
கல்வியங்காடு. (38272)(14.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டி அட்டவணை மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
2013ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளின் போட்டி அட்டவணைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கபடி (15,19 ஆண், பெண்)- 24, 25ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட குறித்த போட்டிகள் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.
வலைப்பந்தாட்டம் ( 15, 17, 19 பெண்) - 22, 23ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட குறித்த போட்டிகள் 24, 25ஆம் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.
முன்னர் அறிவிக்கப்பட்ட இடங்களிலே போட்டி நடைபெறுவதுடன், முன்னர் அறிவிக்கப்பட்ட இடங்களிலேயே தங்குமிடவசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ற-433)

# தாச்சிச் சுற்றுப் போட்டியில் சாந்தை சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.
இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ். மாவட்டத்திலுள்ள தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்திலே நடத்திய சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகமும் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக 'ஏ' அணியும் மோதின.
போட்டி ஆரம்பமாகி இடைவேளை வரை சிந்து விளையாட்டுக் கழகமே 2:1 என்ற ரீதியில் புள்ளிகளைப் பெற்று ஆதிக்கம் செலுத்தி முன்னணியில் நின்றிருந்தது.
இடைவேளையின் பின் மீண்டும் போட்டிகள் ஆரம்பமாகியதும் சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழகம் புது வியூகங்கள் அமைத்து நிதானத்துடனும், வேகத்துடனும், விவேகத்துடனும் விளையாடத் தொடங்கியது.
தொடர்ந்து ஐந்து புள்ளிகளைப் பெற்று 6:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியைத் தனதாக்கி இந்த ஆண்டுக்கான வெற்றிக் கிண்ணத்தையும் சுற்றுக் கேடயத்தையும் கைப்பற்றிக் கொண்டது.



இந்தப் போட்டியில் சிறப்பு வீரனாக சாந்தை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.வாசனும், சிறப்புத் தாச்சியாக சாந்தை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த வி.சகிகரனும் தெரிவுசெய்யப்பட்டதுடன், சிறந்த கழகமாக கைதடி துர்க்கா விளையாட்டுக் கழகம் தெரிவாகியது.
இவர்களுக்கான பரிசில்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், வர்த்தக வங்கியின் யாழ்ப்பாணப் பிராந்திய முகாமையாளர் எஸ்.பி.ரஜீவன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (ற-288)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடருக்கு விண்ணப்பிக்கலாம்




யாழ்ப்பாணம், ஜூன் 13
அச்சுவேலி கதிரொளி ரொக்கெட் விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் பங்குப்பற்ற விரும்பும் அணிகளை கழகத்தைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர் ஏற்பாட்டாளர்கள்.
குறித்த சுற்றுத் தொடர் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை அச்சுவேலி மத்திய கல்லூரிமைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது என்றும் ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற)

## மலையாள்புரம் பாரதி சம்பியனாகத் தெரிவு

கிளிநொச்சி, யூன்1 3
பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் நடந்திய 2013ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.
கடந்த சனிக்கிழமை ஆதவன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி இளம் தொன்றல் விளையாட்டுக் கழக அணிமோதியது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மலையாள்புரம் புதியபாரதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ற-23)

## கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் சனியன்று

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழங்களுக்கு இடையே நடந்தும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெறவுள்ளது.
'பி' பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணியை எதிர்த்து மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இதேவேளை, 'ஏ' பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்த இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.(ற-23)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட பளுதூக்கும் போட்டிகளில் மாகாஜனக் கல்லூரி மாணவி வி.சுசந்திகா, 48 கிலோ எடைப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் வெளிவாரியாக நடைபற்ற வடமாகாணப் பளுதூக்கும் போட்டியிலும் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13
கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடந்தும் 'கிங் ஓவ் யப்னா' உதைபந்தாட்டச் சுற்றுத் தெடரில் இன்று வியாழக் கிழமை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 4 மணி
றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 13
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 100ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடந்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக் கிமை டைமன்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
அல்வாய் பாரதி 'பி' அணி எதிர் நவஜீவன்ஸ் வி.க
பிப.4.30மணி
நவசத்தி வி.க எதிர் விண்மீன் 'ஏ' அணி. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 13
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடந்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமைநெடியகாடு இளைஞர் வி.க. மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:
பிப 4 மணி
சுடர்ஒளி வி.க. எதிர் நவக்கிரி வி.க. (ற-23)



# வடமாகாண பெரு விளையாட்டு மூன்றாம் கட்டம் இன்று ஆரம்பம்

வவுனியா, ஜூன் 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் பெரு விளையாட்டுக்களின் மூன்றாம் கட்டப் போட்டிகள் இன்று வியாழக்கிமை வவுனியாவில் இடம்பெறவுள்ளன.
இன்று ஆரம்பமாகும் மூன்றாம் கட்டப்போட்டிகள் எதிர்வரும் 25 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.
19 வயது ஆண், பெண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று முதல் மூன்று தினங்கள் வவுனியா நகரசபை மைதானம், சிறுவர் பூங்கா மற்றும் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானங்களில் நடைபெறவுள்ளன.
15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15, 16, 17 திகதிகளில் ஓமந்தை மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.
19 வயது ஆண், பெண்களுக்கான எல்லேப் போட்டிகள் எதிர்வரும் 17 ஆம் , 19 ஆம் திகதிகளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் மற்றும் வவுனியா நகரசபை மைதானங்களில் நடைபெறும்.
15 வயது, 17 வயது ஆண்கள் மற்றும் 19 வயது ஆண் பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் சிறுவர் பூங்கா, முஸ்லிம் ம.வித்தியால யம் நகரசபை மற்றும் புதுக் குளம் ம.வி. ஆகிய மைதானங்களில் நடைபெறும்.
15, 17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான வலைப் பந்தாட்டம் எதிர்வரும் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் நகரசபை மைதானத்திலும், 19 வயது ஆண, பெண்களுக்கான எறிபந்துப் போட்டிகள் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ற-400-23-433)

## புதிய பாரதி வி.க. சம்பியனானது

கிளிநொச்சி, ஜூன் 13
பாரதிபுரம் ஆதவன் விளையாட்டுக் கழகம் நடந்திய 2013ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடரில் புதிய பாரதி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவாகியது.
கடந்த சனிக்கிழமை ஆதவன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் புதிய பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளம்துளிர் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய புதியபாரதி விளை யாட்டுக் கழம் 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.
அதில் பாபு 28 ஓட்டங்களையும், சசி15 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
70 ஒட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய இளம்துளிர் விளையாட்டுக் கழக அணி 10 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது.
அதில் தயான் 27 ஓட்டங்களையும், சாள்ஸ் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து வீரரை தாக்கிய வோர்னர்



இங்கிலாந்து வீரரொருவரை ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் தாக்கியுள்ளார் என்று இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளதுடன், குறித்த தாக்குதல் காரணமின்றி இடம்பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை, கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டி நிறைவடைந்த பின்னர், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு மதுபோதையில் டேவிட் வோர்னர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்கப்பட்ட வீரர் தொடர்பான தகவல்களை "இதுவரை இரண்டு நாட்டுக் கிரிக்கெட் சபைகளும் வெளிப்படுத்தாத போதும், தாக்குதலுக்கு உள்ளானவர் ஜோ றூட் எனத் தெரியவருகின்றது.

குறித்த சம்பவம் இடம்பெறும்போது ஜோ றூட், ஸ்ருவேர்ட் ப்ரோட், கிறிஸ் வோக்ஸ் ஆகியோர் குறித்த மதுபானசாலையில் காணப்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

டேவிட் வோர்னரின் நடவடிக்கை காரணமாக நியூஸிலாந்திற்கெதிராக இடம்பெற்ற ஆட்டத்தில் அவர் விளையாடுவதற்கு ஆஸ்திரேலியக் கிரிக்கெட் சபை அனுமதி மறுத்திருந்த நிலையில், நேற்றைய போட்டியில் அவர் 12ஆவது வீரராகச் செயற்பட்டார்.

(ற)

# மைக்கல் கிளார்க் மிகச் சிறந்த வீரர்

## ஜோர்ஜ் பெய்லி கூறுகின்றார்

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க், ஆஸ்திரேலிய அணியின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் என ஆஸ்திரேலிய அணியின் தற்காலிகத் தலைவர் ஜோர்ஜ் பெய்லி தெரிவித்துள்ளார்.

மைக்கல் கிளார்க் நேற்றைய போட்டியில் பங்குபற்ற முடியாமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் நேற்று ஆஸ்திரேலிய அணி நியூசிலாந்தை எதிர்கொண்டது.

ஆஸ்திரேலிய அணியின் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்தமை தங்களைக் காயப்படுத்தியது என்று தெரிவித்த ஜோர்ஜ் பெய்லி, எந்த அணியிடமும் தோல்வியடைவதை விரும்பவில்லை எனக் குறிப்பிட்டார்.

நியூசிலாந்து அணி ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சிறப்பான, தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றது என்று குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, அவர்கள் மிகச்சிறந்த ஆட்ட நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

தங்களைப் பொறுத்தவரை, தங்களது மிகச்சிறந்த கிரிக்கெட்டை விளையாட வேண்டும் என்றும், எந்த அளவில் விளையாட விரும்புகிறோம் என்பதில் கவனஞ் செலுத்த வேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.



அண்மைக்காலத்தில் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்டம் சிறப்பான திறமையை வெளிப்படுத்தவில்லை எனக் குறிப்பிட்ட ஜோர்ஜ் பெய்லி, அதன் காரணமாக அணியிலுள்ள துடுப்பாட்ட வீரர்கள் அணியில் தங்களது இடம் குறித்துச் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

(ற)

# நான் ஓர் அப்பாவி

''சிறையில் இருந்த நாள்களை மறக்கமாட்டேன், நான் ஒரு அப்பாவி,'' என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீசாந்த்.

ஆறாவது பிரிமியர் கிரிக்கெட் தொடரில் சூதாட்ட குற்றச்சாட்டில் சிக்கிய ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கித் சவான் ஆகியோர் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் மீது, 'மொகோகா' எனும், பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டது.

இதுகுறித்து விசாரித்த 'மொகோகா' நீதிமன்றம், ஸ்ரீசாந்த், அங்கித் சவான் உட்பட 19 பேருக்கு பிணை வழங்கியது.

திகார் சிறையில் இருந்து வெளியே வந்த ஸ்ரீசாந்த் கூறுகையில்,

''சிறையில் இருந்த நாள்களை, வாழ்க்கையில் எப்போதும் மறக்கமாட்டேன். கடந்த 27 நாள்கள், எனக்கு அதிகமான பாடம் கற்றுக் கொடுத்தது. இந்திய நீதித்துறையின் மீது முழு நம்பிக்கை உள்ளது. நான் ஒன்றும் அறியாத அப்பாவி என்பது விரைவில் நிரூபணம் ஆகும்,'' என்றார்.(ற)






## ஸ்ரீசாந்த் கூறியது...

என் இடுப்பில் கைக்குட்டை வைத்திருந்தது தரகர்களுக்கு நான் கொடுக்கும் சமிக்ஞை அல்ல. நான் எப்பொழுது பந்து வீசினாலும் இடுப்பில் கைக்குட்டை வைத்திருப்பேன். நான் விளையாடியுள்ள ஆட்டங்களில் முழுமனதோடு விளையாடியுள்ளேன். எனக்கு ஆதரவு அளித்த ராஜஸ்தானுக்கு நன்றி. சம்பியன்ஸ் கிண்ண ஆட்டங்களை சிறையில் உள்ள தொலைக்காட்சியில் பார்த்தேன். இந்திய அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்யும்போது அதில் நான் இருப்பேன் என்று நம்புகிறேன். என்னால் மீண்டும் இந்தியாவுக்காக விளையாட முடியும்.

# எதிர்பார்ப்புடன் உசைன் போல்ட்



உலக 'சம்பியன்ஷிப்' போட்டியில் வெற்றி பெறுவதே தனது இலக்கு என்று உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் தெரிவித்துள்ளார்.

உலக 'சம்பியன்ஷிப்' தடகளப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை ரஷ்யாவில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சாதனைகள் புரிய பல வீரர்கள் கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

போட்டியில் கலந்து கொள்ளும் போல்ட், ''100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப் பந்தய போட்டியில் வெற்றி பெறுவதே இலக்கு. அதற்காகக் கடும் பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் ரோமில் நடைபெற்ற 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் அமெரிக்காவின் ஜஸ்டின் கட்லினிடம் தோல்வியைத் தழுவினார் போல்ட். இது அவரது ரசிகர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. ஆனால், இந்தத் தோல்வி தனக்கு பின்னடைவை ஏற்படுத்தாது என்று போல்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

2011ஆம் ஆண்டு தென் கொரியாவில் உலக 'சம்பியன்ஷிப்'பில் இறுதிப் போட்டியில் செய்த தவறினால் அவர் போட்டியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அதனால் இம்முறை உலக தடகளப் போட்டியில் பட்டம் வெல்ல ஆவலுடன் இருக்கிறார் போல்ட். அமெரிக்காவின் கட்லின், டைசன் கய், ஜமைக்காவின் யோகன் ப்ளேக் உள்ளிட்டோரும் இப்போட்டியில் கலந்து கொள்கின்றனர். அதனால் போல்டுக்கு இப் போட்டி கடும் சவாலாக இருக்கும்.



*கிரிக்கெட் சூதாட்டத்துக்கு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருந்த இந்திய வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் தனது தாய், தந்தையினருடன் சேர்ந்து மகிழ்ச்சியைக் கொண்டாடினார்.*

# அமெரிக்காவில் கிரிக்கெட்


பாகிஸ்தான் - மேற்கிந்தியத் தீவுகள் பங்கேற்கும் இரு 20 ஓவர் கிரிக்கெட் போட்டியை அமெரிக்காவில் நடத்த இருநாட்டு கிரிக்கெட் வாரியங்களும் ஒப்புக் கொண்டுள்ளன.

அமெரிக்காவில் கிரிக்கெட்டை பிரபல்யப்படுத்தும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜூலை மாதத்தில் மியாமி மற்றும் ஃபுளோரிடாவில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

இலங்கை, நியூஸிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் ஆகிய நாடுகள் ஏற்கெனவே மியாமி, ஃபுளோரிடாவில் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்றுள்ளன. ஆனால் அங்கு ஆடுகளம் சரியில்லாததால் போட்டிகள் சிறப்பாக நடைபெறவில்லை. பாகிஸ்தான் அணி ஜூலை 7ஆம் திகதி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்கிறது. அங்கு 5 ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. அதைத் தொடர்ந்து இரு அணிகளும் அமெரிக்கா செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருண பகவானின் சதி ஆஸியின் அரையிறுதி கேள்விக்குறியானது




ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான நேற்றைய ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது. இதனால் அரையிறுதிப் போட்டிக்கு செல்லும் ஆஸ்திரேலியாவின் கனவு கேள்விக்குறியாகி உள்ளது.
இங்கிலாந்தில் நடைபெற்று வரும் மினி உலகக் கிண்ணப் போட்டியில் 7 ஆவது ஆட்டம் நேற்று பகல் இரவு ஆட்டமாக பர்மிங்ஹாமில் நடைபெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதன் அடிப்படையில் ஆஸ்திரேலியாவின் ஆரம்பித் துடுப்பாட்ட வீரர்களாக களம் இறங்கிய ஷேன் வற்சன், மத்யூவட். இந்த ஜோடி இரண்டாவது பந்துப் பரிமாற்றத்திலேயே மக்கிலிங்கனால் பிரிக்கபட்டது. வெறும் 5 ஓட்டங்களுடன் வற்சன் நடையைக் கட்டினார். அடுத்து வந்த பிலிப் ஹெக்சும் ஓட்டம் எதனையும் பெறாது டக் அவுட் ஆனார். இதனால் ஆஸ்திரேலியாவின் நிலை பரிதாபமாக மாறியது.
இதனை அடுத்து வைற் உடன் இணை சேர்ந்த பெய்லி நிதானமாகத் துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார்.இந்தச் சூழ் நிலையில் 74 ஓட்டங்களை அணி பெற்றிருந்தபோது வைற்றின் இலக்கு வீழ்த்தப்பட்டது. அவர் 24 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொடுத்தார்.
அடுத்து களம் புகுந்த அடம் வோகேஸ் பெய்பியுடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். இவர்களைப் பிரிப்பதற்கு நியூஸிலாந்து அணித் தலைவர் கையாண்ட முயற்சிகள் வீண் போயின. இவர்கள் இருவரும் இணைப்பாட்டமாக 77 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக்கொண்ட நிலையில் 55 ஓட்டங்களுடன் பெல்லியின் இலக்கும் வீழ்த்தப்பட்டது.
அடுத்து வந்த வீரர்கள் எவரும் நீண்ட நேரம் நிலைத்து நின்று மெதுவாக விளையாடி மெதுவாக ஓட்டங்களைச் சேகரித்தனர். இதனால் 50 பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 243 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள முடிந்தது ஆஸ்திரேலிய அணியால். அவ்வணி சார்பாக வோகேஸ் அதிக பட்சமாக 71 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.
பந்து வீச்சில் மாஷல் மக்கிலிங்கன் 4 இலக்குகளையும் நதன் மக்கிலன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இதனையடுத்து 244 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய நியூஸிலாந்து அணிக்கு வர்ணபகவான் அருள் பாலித்தான். நியூஸிலாந்து அணி 15 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இரண்டு இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது மழை குறுக்கீடு செய்ததால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.
தொடர்ந்தும் மழை பெய்ததால் தொடர்ந்து விளையாட முடியாத நிலை காணப்பட்டது. இதனால் ஆட்டம் கைவிடப்படுவதாக போட்டி நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.
இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி வீதம் வழங்கப்பட்டது.
'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள இந்த இரு அணிகளில் ஆஸ்திரேலியா இங்கிலாந்து உடனான ஆட்டத்தில் தோல்வியைச் சந்தித்து வெறும் ஒரு புள்ளியை மட்டுமே பெற்றுள்ளது. இதனால் அரையிறுதியில் செல்லும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. மறு புறத்தில் நியூஸிலாந்து தான் பங்கு பற்றிய இரு போடிகளில் இலங்கையுடனான ஆட்டத்தில் வெற்றி பெற்ற இரண்டு புள்ளிகளுடன் தற்போதைய புள்ளியையும் சேர்த்து 3 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இதனால் அரையிறுதிக்குச் செல்வதற்கு ஓரளவு வாய்ப்புகள் காணப்படுகின்றது.

(400)

## இலங்கையில் ஆபத்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாகச் சென்று பார்வையிட்டதுடன் ஐ.நா. முகவர் அமைப்புகளையும் சந்தித்துக் கலந்துரையாடி இருந்தார்.
இதன் தொடர்ச்சியாக நேற்றுக் காலை யாழ். ஆயர் இல்லத்தில் ஆயரைச் சந்தித்துப் பேசினார்.
இந்தச் சந்திப்புத் தொடர்பாக யாழ். ஆயர் கூறியவை வருமாறு;
'13' ஆவது திருத்தம் தொடர்பில் நாம் எவ்வாறான நிலைப்பாட்டை கொண்டுள்ளோம் என அவர் என்னிடம் கேட்டார். 13 ஆவது திருத்தச் சட்டம் அகற்றப்படாமலேயே வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என அவரிடம் நான் கூறினேன்.
ஆபத்தான பயணம் என்று தெரிந்தும் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து தமிழ் இளைஞர்கள் இங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.
எமது இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் இல்லை. இந்திய இழுவைப் படகுகளால் எமது கடல் வளம் அழிக்கப்படுவதால் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது.
தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு இன்னமும் முன்வைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள இளைஞர்கள் தாம் தொடர்ந்து துன்புறுத்தப்படலாம் என்று அச்சப்படுகின்றார்கள். அதனாலேயே அவர்கள் ஆஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்கின்றனர் என்று சுட்டிக்காட்டினேன்.
மேலும் வடக்கில் அதிகரித்த இராணுவப் பிரசன்னம் உள்ளது என்பதையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர் - என்றார். (த-5)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**SPOKEN ENGLISH**
யாருக்காக?
- அரச, தனியார் அலுவலர்கள்
- பல்கலை, உயர்கல்வி மாணவர்கள்
- இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர்
- ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள்
- 12 வயதிற்கு மேற்பட்ட அனைவரும்

சனி, ஞாயிறு பிரிவுகள் - 3 மாதங்கள்
பிரிவு 01 : காலை 8.00 - 10.00 பிரிவு 02 : மு.ப 10.00 - 12.00
பிரிவு 03 : பி.ப 1.00 - 03.00 பிரிவு 04 : மாலை 3.00 - 5.00
வார நாள் பயிற்சி நெறி : 17.06.2013 (திங்கள், புதன்)
பிரிவு : 01 10.00 - 12.00 பிரிவு : 02 3.00 - 5.00
பதிவு செய்ய வேண்டிய இறுதி திகதி 16.06.2013
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்
தொ.பே : 077 621 4567

**விசேட கருத்தரங்கு**
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு
காலம் 14.06.2013, 15.06.2013
வெள்ளி, சனி
9.00 - 1.00PM
விரிவுரையாளர்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளலாம்.
நாவலர்
கல்வி நிலையம்.
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
0774696695

**போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்**
1)உடற்கல்வி, ஆங்கிலம், தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கான ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி.
2)முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டி.
3)B.Ed. போட்டிப் பரீட்சை வழிகாட்டி.
P கமல்தாசன்
கிடைக்கும் இடங்கள்
பூபாலசிங்கம், அன்னை- யாழ். நகர்.
துர்க்கா- சுன்னாகம். K.P.K, கஜன்- வவுனியா.

**உங்கள் கட்டட தேவைக்கு**
உப்புத் தன்மையற்ற தரமான பூச்சுமண்
4½ ரக்ரர் - 20500/-
கட்டட வேலைக்கான ஆற்று மண்.
4½ ரக்ரர் - 22000/-
தரமான சிமெந்துக் கற்கள், செங்கற்கள், ஓடுகள் போன்றனவற்றிற்கு.
பிரபு
0777590 792
071 3684 639
(38243)

OFFER Mega OFFER SALES
DUAL CORE RS-48,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i3 RS-56,900/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
CORE i5 RS-68,500/=
3rd.Gen,intel m/b,500GB,2GB,DVD,Keyboard,Mouse,19'LED,Ups
FREE H.PHONE MOUSE PAD
FOR 3 DAYS
எமது சுன்னாகக் கிளையில்
OFFER Mega OFFER SERVICE
CHECKING CHARGE FREE
SYSTEM SERVICE ONLY RS 100/= for 1 month
எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில்
♣ System Repair ♣ Printer Repair
♣ Laptop Repair ♣ CCTV Installation
♣ Network Installation ♣ Intercom Installation
NALIN Information Technologies Pvt Ltd
Mega OFFER NALIN City Show Room
116 G, K.K.S Road, Chunnakam.
TP:- 021-2242222 ,0777-140431

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.